விலை : 20.00
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
பக்கங்கள் : பதினாறு + பதினாறு
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com, valampurii@sltnet.lk

சங்கு 18 வள்ளுவர் ஆண்டு 2048 மார்கழி 02 ஞாயிற்றுக்கிழமை (17.12.2017) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 363

WESTERN UNION WU
moving money for better
உலகெங்குமுள்ள உறவுகளுக்கு தரிக தபால்கள், பொதிகள் சேவை உடனுக்குடன் அனுப்ப நாடுங்கள்
உறவுகளிடமிருந்து WESTERN UNION மூலம் அனுப்பிய பணத்தை ஒருசில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக்கொள்ள.
இவையனைத்தையும் ஒரே கூரையின் கீழ் அதிவிரைவு, பாதுகாப்பு, நம்பகத்தன்மை
Authorised Agent
SRI MURUGAN
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
# 303, K.K.S.ROAD, JAFFNA.
TEL: 021 222 5392, 021 222 2670, FAX: 021 222 3214
E-mail:srimurugan303@gmail.com, E-mail:srimurugan09@gmail.com

## வட மாகாண சபையின் செயற்பாட்டுக்கு
# மத்திய அரசாங்கம் ஒத்துப் போவதில்லை
## முதலமைச்சர் விக்னேஸ்வரன் குற்றச்சாட்டு



(யாழ்ப்பாணம்) மத்திய அரசாங்கத்துடன் இணைந்து செயற்பட வட மாகாண சபை தயாராகவே உள்ளது. ஆனால் வட மாகாண சபையுடன் மத்திய அரசாங்கம் இணைந்து செயற்படுவதில்லை என வட மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் குற்றஞ் சாட்டியுள்ளார்.

(15-ம் பக்கம் பார்க்க...)

## மலேசிய பிரதமர் இன்று இலங்கையில்



15

## தேர்தல் தொடர்பில் 6 முறைப்பாடுகள்

(கொழும்பு)

உள்ளூராட்சி மன்ற தேர்தலுடன் தொடர்புடைய 6 முறைப்பாடுகள் இதுவரையில் பதிவாகியுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதன் இறுதி முறைப்பாடுகள் இரண்டும் மொரகஹஹேன 15

## முன்னாள் தமிழ் பெண் நீதிபதி சு.கவில் போட்டி

(கொழும்பு)

ஓய்வுபெற்ற மேல் நீதிமன்ற நீதிபதி கே.சிவபாதசுந்தரம் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் உறுப் 15

## மீண்டும் ஒரு போர் ஏற்படக்கூடாது - ஜனாதிபதி மைத்திரி

(கொழும்பு)

நாட்டில் மீண்டும் ஒரு போர் ஏற்படாத வகையில் அனைத்து இனங்களுக்கிடையில் நல்லிணக் கத்தை கட்டியெழுப்புவதற்கு 15

## வாக்காளராக இல்லாதவரின் வேட்பு மனு ஏற்கப்பட்டுள்ளது
### தேர்தல் ஆணைக்குழுவில் முறைப்பாடு

(யாழ்ப்பாணம்)

மாவட்டச் செயலகத்தில் உள்ள அரச அலுவலகங்களை கட்சியின் தேவைக்காக சில கட்சிகள் பயன்படுத்தவதாக சில முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாக தேர்தல் ஆணைகுழுவின் உறுப்பினரும் பேராசிரியருமான ரட்ணஜீவன் 15

## சாகசம் காட்டிய வாள்வெட்டு குழு; துரத்தி அடித்த ஊர் இளைஞர்கள்
### கோண்டாவிலில் நேற்றிரவு பரபரப்பு

(யாழ்ப்பாணம்)

கோண்டாவில் பகுதியில் சாகசம் காட்ட முற்பட்ட வாள்வெட்டு குழுவினரை அப்பகுதி மக்கள் துரத்தி துரத்தி அடித்த சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது. அத்துடன் அவர்களிடம் இருந்து வாள்கள் மற்றும் மோட்டார் சைக்கிளை கைப்பற்றிய பொதுமக்கள் கோப்பாய் பொலிஸில் ஒப்படைத்துள்ளனர். 15

THE FIRST TIME
இப்பொழுது யாழ்ப்பாணத்தில் முதல் முதலாக 10 அடி அகலம் கொண்ட அதி நவீன துல்லியத்தில்
8 கலர்ஸ் டிஜிற்றல் பனர் பிறின்டிங்
01 சதுர அடி 28/=



Photo Quality Printing
Normal Sticker - 65/=
Cleyar Sticker - 70/=
Backlit Banner - 65/=
One Way Vison Sticker - 170/=
Febric - 80/=
MUG PRINT 250/=
Minimum Sqf-100
Name Boards - 190/= Light Board - 400/=
இச்சலுகை 14-12-2017 தொடக்கம் 30.12.2017 வரை மட்டுமே...
உங்கள் விளம்பர பதாகைகளை ஒளிமயமாக்கிடுங்கள்...
ஜனா டிஜிற்றல் பிறின்டிங்
இல.246 கன்னாதிட்டி சந்தி யாழ்ப்பாணம் (மக்கள் வங்கிக்கு அருகாமையில்)
0770731654, 0712115533, 0717774556, 0212213233
(C-695)

## மதவாச்சியில் வீதி விபத்து சிறுமி பலி

(மதவாச்சி)

மதவாச்சி பிரதேச செயலகத்திற்கு முன்பாக இடம்பெற்ற வீதி விபத்தில் 9 15

## சில அரசியல் கட்சிகளால் வேட்பு மனுக்களை கூட தயாரிக்க முடியவில்லை - ரில்வின் சில்வா



(கொழும்பு)

சில அரசியல் கட்சிகளினால் வேட்பு மனுக்களை கூட தயாரிக்க முடியவில்லை என ஜே.வி.பி யின் பொதுச் செயலாளர் ரில்வின 15

## மந்திகை - கொடிகாம வீதியில் ஆயுதமுனையில் பாரிய கொள்ளை
### 30பவுண் நகை, 40 ஆயிரம் ரூபாய் பணம் பறிபோனது

(கரணவாய்)

வயோதிபத் தம்பதியினரின் கழுத்தில் வாளினை வைத்து அச்சுறுத்தி வீட்டினைச் சல்லடை போட்ட கொள்ளையர்கள் 30 பவுண் தங்க நகை மற்றும் 40 ஆயிரம் ரூபாய் பணத்தினையும் கொள்ளையடித்துச் சென்றுள்ளதாக பருத்தித்துறைப் பொலிஸில் முறையிடப்பட்டுள்ளது.

மந்திகை - கொடிகாமம் வீதியில் உள்ள வீட்டில் நேற்று சனிக்கிழமை 15

மகாராஜா பொதிகள் சேவை
உங்கள் வீட்டுக்கே சென்று கையளிக்கப்படும் சேவை
ஜேர்மன் 700/= லண்டன் 600/= பிரான்ஸ் 700/=
ஏனைய நாடுகளுக்கும் மிகக் குறைந்த செலவில் பொதிகளை அனுப்பிக்கொள்ளலாம்
GTV Express
இல 225, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
021 - 2224338 / 021-4925024
இல 25 கந்தசாமி கோவில் வீதி வவுனியா
024 - 4930200 / 076 - 6908961

## நாடளாவிய ரீதியில் சுற்றிவளைப்பு; ஆயிரம் பேர் கைது

(கொழும்பு)

நாடளாவிய ரீதியில் நேற்று அதிகாலை ஒரு மணி தொடக்கம் 5 மணிவரை மேற்கொள்ளப்பட்ட தேடுதல் நடவடிக்கையின் போது 15

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# இலங்கை மீனவர்களின் படகுகள் ஒப்படைப்பு

(கொழும்பு)

இந்திய கடலோர காவற்படையால் கைப்பற்றப்பட்ட இலங்கை மீனவர்களின் படகுகள் மூன்று வருடங்களின் பின்னர் உரிய மீனவர்களிடம் நேற்றைய தினம் வியாழக்கிழமை ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இந்திய கடல் எல்லைக்குள் கடந்த 2015 ஆம் ஆண்டு சென்று மீன்பிடியில் ஈடுபட்டதாக இலங்கையை சேர்ந்த மீனவர்கள அண்மையில் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருந்தனர்.

குறித்த மீனவர்கள் விடுவிக்கப்பட்ட நிலையில் படகுகள் தடுத்து வைக்கப்பட்டிருந்தன. அவ்வாறு தடுத்து வைக்கப்பட்டிருந்த 3 பல நாட் கலன்கள் (multi boat) நேற்றைய தினம் இந்திய கடலோர காவற்படையால் இலங்கை கடற்படையினரிடம் ஒப்படைக்கப்பட்டு, இலங்கை கடற்படையினர் யாழ்ப்பாணம் கடற்தொழில் நீரியல் வளத்துறை அதிகாரிகளிடத்தில் ஒப்படைத்திருந்தனர்.

அந்த வகையில் யாழ்ப்பாணம் கடற்தொழில் நீரியல் வளத்துறை பணிப்பாளர் எஸ்.சுதாகரன் தலைமையில் நேற்று அப் பல நாட் கலன்கள் உரிய மீனவர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இந்த மூன்று படகுகளும் தென்னிலங்கையை சேர்ந்த மீனவர்களுடையதென்பது குறிப்பிடத்தக்கது. இதே வேளை கடந்த 14 ஆம் திகதியும் 3 படகுகள் இந்திய கடலோர காவல் படையால் இலங்கை கடற்படையிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம)


**நோயாளர் பராமரிப்பு சேவை**

- உங்கள் வீடுகளுக்கே வந்து நோயாளர்கள்/ முதியோர்கள் பராமரிக்கப்படுவர்
- எங்கள் இடத்திலேயே உங்கள் நோயாளர்கள்/ முதியோர்கள் வைத்தும் பராமரிக்கப்படுவர்.

**அழையுங்கள்:-0778730129**

**வைத்தியம்**

நோய் எதுவாயினும் தீர்வு உண்டு. தலைமுடி உதிர்தல், முள்ளந்தண்டுப பிரச்சினை, பாரிசவாதம், சலரோகம,உடற்பருமன் குறைத்தல் (வயிறு/ மார்பு/கை) அல்லது கூட்டுதல், ஆண்மைக் குறைபாடுகள், குழந்தை யின்மை போன்றவற்றிற்கு மருந்தின்றி பக்கவிளை வின்றி அக்குபன்சர் சிகிச்சை வழங்கப்படும். (101)

தொடர்பு: (ACU)Dr.Sanker
T.P: 077 035 7307

**காணி விற்பனைக்கு**

ஸ்ரான்லி வீதிக்கு அருகாமையில் 3/4 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.

**தொடர்புகளுக்கு:-**
**0777304545** (சி-730)

**கணித வகுப்பு**

கணித பாடம் தரம் 06-11 வரை தமிழ், ஆங்கில மொழி மூலம் பிரபல ஆசிரியரினால் குழுவாகவோ, தனியாகவோ கற்பிக்கப்படுகின்றது.

**தொடர்புகளுக்கு:-**
**0772964233** (1820)

**வலம்புரி**
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532

**வெளிநாடுகளுக்கான பொதிகள் சேவை**

11kg மேற்பட்ட பொதிகளுக்கு 1kg க்கான கட்டணம்
UK – 550/-, FRANCE – 700/-, GERMANY – 650/-, SWISS – 750/-, CANADA – 950/-
மற்ற நாடுகளுக்கும் விசேட கட்டணம் உண்டு.
சகல நாடுகளுக்குமான விசா விண்ணப்ப ஏற்பாடுகள் நிபுணத்துவம் வாய்ந்தவர்களுடாக செய்து கொடுக்கப்படும் (1858)

**திருமுருகன் கொம் நெற் (பிறைவெட்) லிமிடெட்**

- 216, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.
- 46, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி,
- 18, பிரதான வீதி, நெல்லியடி.

கிளிநொச்சி, மன்னார்.
0777554528

DHL aramex SKYNET

**வாடகைக்கு**

யாழ்.மாநகர சபை எல்லைக்குள் பிரதான பஸ் நிலையத்திற்கு மிக அருகாமையில் சகல வசதிகளும் கொண்ட பெரிய வீடு வாடகைக்கு உண்டு. நிறுவனங்கள் / கல்வி நிறுவனங்கள் விரும்பத்தக்கது.

**தொடர்பு எண்:-0779291959, 0719071540, 0768664776** (1852)

**வேலையாட்கள் தேவை**

சைவ உணவகம் ஒன்றுக்கு கீழ் வரும் வேலையாட்கள் தேவை. ஆண்/ பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கவும்.

01. உணவு பரிமாறுபவர்கள்
02. காசாளர்
03. பில் கிளாக்
04. ரீமேக்கர்
05. மரக்கறி வெட்டுபவர்கள்
06. சுத்திகரிப்பாளர்கள்
07. சமையல் அறை வேலையாட்கள்


**உடனடி தொடர்புகளுக்கு:-**
**0777917753, 0212222373** (1849)


## வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை-கரவெட்டி வரவு செலவுத்திட்டம்-2018

1987ஆம் ஆண்டு 15ஆம் இலக்க பிரதேச சபைகள் கட்டளைச் சட்டத்திற்கு அமைவாக 2018ஆம் ஆண்டுக்குரிய வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபையின் வரவு செலவுத்திட்டம் 17.12.2017ஆம் திகதியிலிருந்து 26.12.2017ஆம் திகதி வரை பொதுமக்கள் பார்வைக்காக எமது தலைமை அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ளது என்பதை அறியத்தருகின்றேன்.

அ.வினோராஜ்
செயலாளர்,
வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை, கரவெட்டி. (சி-723)

## மரண அறிவித்தல்



### கந்தையா நவரத்தினம்

**(வட்டுகிழக்கு- நீதிமன்ற ஏல விற்பனையாளரும், மதிப்பீட்டாளரும்)**

*வட்டுக்கோட்டையை பிறப்பிடமாகவும், சங்கானையை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா நவரத்தினம் அவர்கள் கடந்த (14.12.2017) வியாழக்கிழமை காலமானார்.*

*அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - இராசம்மா (வட்டு கிழக்கு) தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான நவரத்தினம் - சரஸ்வதி (சங்கானை) தம்பதிகளின் அன்பு மருமகனும், சிவனேஸ்வரி அவர்களின் அன்புக் கணவரும், ரமணன் (லண்டன்), பிரிந்தா (நோர்வே) ஆகியோரின் அன்புத் தந்தையும், கோமேதா, கஜரூபன் ஆகியோரின் பாசமிகு மாமனாரும், அஞ்சனன், ஜெனிசா ஆகியோரின் அன்பு பேரனாரும், காலஞ்சென்றவர்களான மேஜர் இரத்தினம், இராஜரத்தினம் (நிலஅளவையாளர்), குணரத்தினம் (சட்டத்தரணி) ஆகியோரின் பாசமிகு சகோதரரும், ஜெயலட்சுமி (கனடா), ஜெயலக்சுமி (கனடா), தயாவதனி (அவுஸ்ரேலியா) மற்றும் சிவராஜஸ்வரி, அமரர் இலங்கைநாதன், அமரர் ரட்னேஸ்வரி, சற்குணநாதன், அமரர் பரமநாதன், அமரர் ஞானேஸ்வரி ஆகியோரின் அன்பு மைத்துனரும், கனடாவைச் சேர்ந்தவர்களான ஜீவன், குமரன், நிமலன், சத்தியன், மீனா, சேந்தன், தயாளன், அவுஸ்ரேலியாவைச் சேர்ந்தவர்களான தக்ஷாயினி, லக்ஸ்மன், சஜீவன் மற்றும் முத்துலட்சுமி, சாந்தினி, இந்திரன், ராஜராஜேஸ்வரி, சிவகரன், சிவாஜினி, சிலோஜினி, கஜன், பாமினி, ரகுராம், சுகந்தினி ஆகியோரின் சித்தப்பாவும், ஜயந்தி, இந்து, ஜனன் ஆகியோரின் மாமனாரும் ஆவார்.*

*அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.12.2017) ஞாயிற்றுக்கிழமை இல.200, பொன்னாலை வீதி, சங்கானையில் ஒரு மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பிற்பகல் 3 மணியளவில் வழுக்கையாறு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.*

ரட்ணவாசா, 200, பொன்னாலை றோட், சங்கானை.
(சி-731)
தகவல் : குடும்பத்தினர்
0778782472, 0717782090


# VACANCIES

## CUSTOMER CARE ASSISTANTS

Seeking suitable candidates for employment on a full time long term basis for a data and call center office in Jaffna operating on a 24/7 basis for international clients. Work entails direct worldwide customers' contact through various modes of communication. No previous experience required. Training will be initially provided in Colombo. Good communication skills and command in English is essential. Additional ability in European, Arabic, Indian languages is a bonus. Starting monthly salary will be Rs24,000/- with increments based on performance, rising to above Rs60,000/= plus bonuses. Should be willing to work on shifts including nights based on roster. Ladies : only day shifts. Please email your detailed CV to audrey@bbkca.com ; not later than 29 December 2017. Shortlisted candidates only will be interviewed in Colombo or Vavuniya or Jaffna office. Previous applicants need not reapply.

(1853)

# நமது அரசானாலும் அதற்குள் நாம் பலமாக இல்லாவிட்டால் முற்றாகத் தொலைந்தோம்

## அமைச்சர் மனோ கணேசன் எச்சரிக்கை



(கொழும்பு)

இது நாங்கள் உயிரைக் கொடுத்து போராடி உருவாக்கிய அரசாங்கம். எங்கள் மக்கள் வாக்களித்து உருவாக்கிய அரசாங்கம். ஆகவே இது நமது அரசாங்கம் தான். என்றாலும் அதற்குள் நாம் பலமாக இருக்க வேண்டும். இல்லாவிட்டால், நாம் ஒட்டுமொத்தமாக தொலைந்தோம். எம்முடன் இருப்பவர்களே எம்மை தொலைத்து விடுவார்கள். இந்த உண்மையை, கொழும்பு, மலையகம், வடக்கு- கிழக்கு பிராந்தியங்கள் என எங்கும் வாழும் நமது மக்கள் மன்தில் கொள்ள வேண்டும். தமிழ், முஸ்லிம், இந்து, இஸ்லாம், கத்தோலிக்கம் என்ற இன, மத பிரிவுகளுக்கு அப்பால் தமிழ் மொழி பேசி வாழும் மக்கள் மனதில் கொள்ள வேண்டும் என அமைச்சர் மனோ கணேசன் எச்சரித்துள்ளார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, நாங்கள் உருவாக்கிய ஜனாதிபதி. பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, நாங்கள் உருவாக்கிய பிரதமர். இன்று ஜனாதிபதிக்கும், பிரதமருக்கும் எவர் எவரோ உரிமை கோரினாலும், இவை தான் அப்பட்டமான உண்மைகள். ஆகவே நாம், நமது அரசாங்கத்துக்குள் பலமாக இருந்து கொண்டு, ஜனாதிபதியையும், பிரதமரையும் ஆதரிப்போம். அரசாங்கத்தையும் பாதுகாப்போம். இந்நோக்கிலேயே எதிர்வரும் உள்ளூராட்சி தேர்தலை நாம் அணுகவேண்டும். இதை எனது 19 வருட தேர்தல் அனுபவத்தில் சொல்கிறேன் எனவும் மனோ கணேசன் தெரிவித்தார். நடைபெறவுள்ள உள்ளூராட்சி தேர்தல் குறித்து கொழும்பில் நேற்றுக் கூடிய ஜனநாயக மக்கள் முன்னணியின் அரசியல் குழுக் கூட்டத்தில் உரையாற்றிய போதே மனோ கணேசன் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-7)

## மகிந்த, பசில் மற்றும் நாமல் இணைவுக்கு முட்டுக்கட்டை



(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான கூட்டு எதிரணியிலிருந்து ஒரு சில தினங்களில் இன்னும் பல உறுப்பினர்கள் ஶ்ரீலங்கா சுதந்திரக்கட்சியுடன் இணைந்து கொள்வார்கள் என அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்க நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற நிகழ்வு ஒன்றின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைக் கூறினார்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு நிலையான ஒரு கட்சி இல்லை எனவும் தெரிவித்தார்.

அவர் சுதந்திரக்கட்சியை தோல்வியடையச் செய்வதற்காக கடும்பிரயத்தனம் எடுத்து வருவதாக தெரிவித்த அவர், ஐக்கிய தேசியக் கட்சியுடன் சுதந்திரக்கட்சி இணைந்து செயற்பட மகிந்தவே வழியேற்படுத்தி கொடுத்ததாகவும் கூறினார்.

இருப்பினும் மகிந்த தலைமையிலான கூட்டு எதிரணியுடன் தொடர்ந்தும் பேச்சுவார்த்தை நடத்தத் தயார் எனவும் அவர் தெரிவித்தார்.

சு.கவுடன் கூட்டு எதிரணியை இணையவிடாமல் மகிந்த, பசில் மற்றும் நாமல் ஆகியோரே முட்டுக்கட்டையாக இருப்பதாகவும் எஸ்.பி. திஸாநாயக்க மேலும் தெரிவித்தார். (இ-7)

## கருப்பைக்கழுத்துப் புற்றுநோய்க்கான தடுப்பூசி தரம்-6 மாணவிகளுக்கான இறுதிச் சந்தர்ப்பம்

(யாழ்ப்பாணம்)

கருப்பைக் கழுத்துப்புற்று நோய்க்கெதிராக தரம்-6 மாணவிகளுக்கு இவ்வருடம் தொடக்கம் வழங்கப்படும் HPV தடுப்பு மருந்து இம்மாதத்துடன் முதற்கட்டம் நிறைவு செய்யப்படுகின்றது.

யாழ்.நகர்ப்பகுதி பாடசாலைகளில் 90% மான தரம் 6 மாணவிகளுக்கு இத்தடுப்பு மருந்து வழங்கப்பட்டுள்ளது. அத்துடன் தென்னிலங்கை உட்பட நாட்டின் 90%மான மாணவிகளுக்கும் இத்தடுப்பு மருந்து வழங்கப்பட்டுள்ளது.

புற்றுநோய்க்கு எதிராக உலகில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள முதலாவது தடுப்பு மருந்தென்பதுடன் இது மிகவும் பெறுமதியானதும் வினைத்திறனுமானது.

எனவே மேற்படி தடுப்பு மருந்தினைப் பெறத்தவறிய யாழ்.நகரப்பகுதி பாடசாலைகளைச் சேர்ந்த (யாழ்.மாநகரசபை எல்லைக்குட்பட்ட) தரம் 6 மாணவிகளை தமது பெற்றோருடன் கடற்கரை வீதி, குருநகர் வைத்தியசாலை வளாகத்தில் அமைந்துள்ள பாடசாலை வைத்திய அதிகாரி பணிமனைக்கு நாளை திங்கட்கிழமை தொடக்கம் வெள்ளிக்கிழமை காலை 9.00-11.00மணிக்கிடையில் வருகை தந்து பெற்றுக்கொள்ளுமாறும் இவ் இறுதிச் சந்தர்ப்பத்தை உரியவாறு பயன்படுத்தி உயிராபத்தான கருப்பைக் கழுத்துப் புற்றுநோயிலிருந்து தங்கள் பிள்ளைகளைப் பாதுகாக்குமாறும் ஏனைய பிரதேசங்களைச்சேர்ந்த மாணவிகள் தமது பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையுடன் தொடர்பு கொண்டு அங்கு பெற்றுக்கொள்ள முடியும் எனவும் யாழ்ப்பாணம் பாடசாலை வைத்திய அதிகாரி எஸ்.என்.பிரேம்குமார் அறிவித்துள்ளார். (இ-7)

## மூழ்கும் கப்பலில் ஏறுவது முட்டாள்தனம்

### சி.பி.ரத்நாயக்க அறிவுரை



(கொழும்பு)

அரசியலில் நிரந்தர நண்பர்களும், நிரந்தர எதிரிகளும் இல்லை என கூட்டு எதிரணியின் நுவரெலிய மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சி.பி.ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

நுவரெலியாவில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

கூட்டு எதிரணியிலிருந்து ஒருபோதும் சுதந்திரக்கட்சிக்கு செல்லப் போவதில்லை. அதாவது மூழ்கப்போகும் கப்பலில் ஏறுவதற்கு நான் தயாரில்லை எனவும் அவர் தெரிவித்தார்.

கழுதை ஒன்றின் மீது அரசன் ஏறி பயணிக்கும்போது மக்கள் அரசனை வணங்கி பணிவது இயல்பு. அவ்வாறு வணங்கும் போது கழுதை தன்னையே மக்கள் வணங்கி பணிகின்றனர் என்று நினைப்பது முட்டாள்அம்தனம் எனவும் அவர் தெரிவித்தார். (இ-7)

## இலங்கையில் சமஷ்டி ஆட்சி

## அமெரிக்க தூதுவர் தேவையில்லாத விடயத்தில் மூக்கை நுழைக்கிறார்

### சிங்கள ஊடகம் குற்றச்சாட்டு



(கொழும்பு)

இலங்கையில் சமஷ்டி முறைமையிலான ஆட்சி ஏற்படுத்தப்பட வேண்டும் என இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் அதுல் கெசாப் இரு சந்தர்ப்பங்களில் வெளியிட்டுள்ள கருத்துக்களுக்கு வெளிவிவகார அமைச்சு அதிகாரிகள் இதுவரை எந்தவித பதிலும் வழங்காதிருப்பதாக குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

வெளிநாட்டுத் தூதுவர்கள் நாட்டின் உள்விவகாரங்களில் தலையிடுவதற்கு உரிமை பெறவில்லை எனவும் அமெரிக்க தூதுவர் இதனை மீறியுள்ளதாகவும் சிங்கள ஊடகமொன்று நேற்று வெளியிட்ட செய்தியில் சுட்டிக்காட்டியுள்ளது.

இதற்கு முன்னர் இந் நாட்டிலிருந்த எந்தவொரு அமெரிக்கத் தூதுவரும் இவ்வாறான கருத்தை வெளியிடவில்லையெனவும் அச்செய்தியில் மேலும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (இ-7)

## சு.க.பக்கம் யார் சென்றாலும் எமக்குப் பின்னடைவு இல்லை

### மகிந்த ராஜபக்ஷ தெரிவிப்பு



(கொழும்பு)

கூட்டு எதிரணியிலிருந்து பலர் சுதந்திரக்கட்சிக்குச் செல்வதால் எந்தவித பின்னடைவும் ஏற்படப் போவதில்லை என முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

அநுராதபுரம் ஜயசிறி மகா போதியை நேற்று முன்தினம் மாலை தரிசித்த மகிந்த ராஜபக்ஷ ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே இதனை தெரிவித்தார்.

சுதந்திரக்கட்சி உறுப்பினர்கள் நல்லாட்சியின் கொள்கைகளை கைவிட்டு அரசாங்கத்தில் இருந்து வெளியே வந்தால் மாத்திரம் கூட்டு எதிரணியுடன் இணைந்து செயற்பட முடியும்.

அதேபோல் அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் சுதந்திரக்கட்சியின் பல அமைச்சர்கள் தம்முடன் தொடர்ந்தும் பேச்சுவார்த்தை நடத்துவதாகவும், அவ்வாறானவர்கள் எந்தவேளையிலும் அரசாங்கத்தை விட்டு வரலாம் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## நாமலிடம் ஆலோசனை பெற நான் என்ன குழந்தையா?

### மகிந்த காட்டம்



(கொழும்பு)

அரசியலில் பல்லாண்டு அனுபவம் வாய்ந்த நான், நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷவிடம் ஆலோசனை பெறும் அளவுக்கு தாழ்ந்துவிடவில்லை என்று முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

சிலரது அழுத்தங்களோ ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுடன் இணக்கத்தை ஏற்படுத்தும் ஒன்றிணைந்த எதிரணியினர் பேச்சு முறிவடையக் காரணம் என்று தகவல்கள் வெளியாகி வருகின்றன.

இதேவேளை நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷவும் இதற்குக் காரணம் என்று கூறப்படுகிறது.

இருந்த போதிலும், 1967 ஆம் ஆண்டிலிருந்து அரசியல் செய்துவரும் தாம், நாமல் ராஜபக்ஷ போன்றவர்களின் ஆலோசனைகளை பெறவேண்டிய தேவை இல்லை என்று முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ காட்டமாகத் தெரிவித்துள்ளார். (இ-7)

பேர்த் டெஸ்ட் 3 நாள்

# ஸ்ரீவ் ஸ்மித் 229*, மிட்சல் மார்ஷ் 181*

# ஓட்டமழை பொழிகிறது அவுஸ்திரேலியா

ASHES SERIES

இங்கிலாந்துக்கு எதிரான பேர்த் டெஸ்டில் அணித் தலைவர் ஸ்மித் இரட்டை சதமும் மிட்சல் மார்ஸின் சதமும கைகொடுக்க அவுஸ திரேலிய அணி முன்னிலை பெற்றது.

அவுஸ்திரேலியாவுக்கு சுற்றுபபயணம் மேற்கொண டுள்ள இங்கிலாந்து அணி, அங்கு 5 போட்டிகள் கொண்ட ஆஷஸ் டெஸ்ட் தொடரில் பங்கேற்கிறது. முதலிரண்டு போட்டிகளில் வென்ற அவுஸ்திரேலியா 2-0 என்ற கணக்கில் தொடரில் முன்னிலை வகிக்கிறது. இந்நிலையில் 3ஆவது டெஸ்ட் பேர்த்தில் கடந்த 14ஆம் திகதி ஆரம்பமானது.

இங்கிலாந்து முதல் இன்னிங்ஸில் 403 ஓட்டங்கள் எடுத்தது. இரண்டாம் நாள் ஆட்ட நேர முடிவில், அவுஸ்திரேலிய அணி முதல இன்னிங்ஸில் 3 விக்கெட்டுக்களை இழந்து 203 ஓட்டங்கள் எடுத்திருந்தது.

**மிட்சல் மார்ஷ் சதம**

நேற்றைய 3ஆம் நாள் ஆட்டத்தில் தனது சிறப்பான ஆட்டத்தை தொடர்ந்த ஸ்மித் டெஸ்ட் அரங்கில் 22ஆவது சதம் அடித்தார். ஷோன்மார்ஷ் 28 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். பின் ஸ்மித்துடன்இணைந்தார் மிட்சல் மார்ஷ். இருவரும் எதிரணி பந்துவீச்சை எளிதாக சமாளித்தனர். மார்ஷ், முதல் டெஸ்ட் சதத்தை எட்டினார்.

மறுபுறம், ஸ்மித், 'டெஸ்ட் போட்டியில் இரண்டாவது இரட்டை சதத்தை பதிவு செய்தார். மூன்றாம் நாள் ஆட்ட நேர முடிவில், அவுஸ்திரேலிய அணி முதல் இன்னிங்ஸில் 4 விக்கெட்டுக்கு 549 ஓட்டங்கள் எடுத்து, 146 ஓட்டங்கள் முன்னிலை பெற்றிருந்தது. ஸ்மித் (229), மிட்சல் மார்ஷ் (181) ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

அடுத்த இரண்டு நாட்களும் பேர்த நகரில் கனமழை பெய்ய 90 சதவீதம் வாய்ப்புள்ளது. இதனால், ஆட்டம் பாதிக்கப்படலாம். இக்கட்டான நிலையில் உள்ள இங்கிலாந்தும் மழை வருவதைத்தான் விரும்பும்.

**தந்தையை முந்தினார்**

அவுஸ்திரேலிய முன்னாள் வீரர் ஜெப் மார்ஷ் (வயது-58), டெஸ்டில் இவரது அதிகபட்சம் 138 ஓட். இவரது இரு மகன்கள் ஷோன் மார்ஷ், மிட்சல் மார்ஷ் 26. இதில் ஷோன் மார்ஷ் டெஸ்டில் அதிகபட்சமாக 182 ஓட்டங்கள் எடுத்தார்.

தற்போது பேர்த் டெஸ்டில் சதம் அடித்த மிட்சல் மார்ஷ் (181 ஓட்) தனது தந்தையின் ஸ்கோரை(138) மிஞ்சிவிட்டார். இவர் கூறுகையில்,"டெஸ்டில் உங்களது அதிகபட்ச ஓட்டங்களை முந்திவிட்டேன் என, தந்தையிடம் கூறப் போகிறேன" என்றார்.

தவிர, டெஸ்ட் அரங்கில், தந்தை மற்றும் இரு மகன்கள் சதம் கடந்த நிகழ்வு இரண்டாவது முறையாக நடந்தது. இதற்கு முன், இந்தியாவின் லாலா அமர்நாத் (118) மற்றும் இவரின் மகன்கள் மொகிந்தர் அமர்நாத் (138), சுரிந்தர் அமர்நாத் (124) டெஸ்டில் சதம் கடந்துள்ளனர்.

**3ஆவது வீரர்**

டெஸ்ட் போட்டியில் ஸ்மித் 22ஆவது சதம் அடித்தார். இதன் மூலம், இந்த இலக்கை குறைந்த இன்னிங்ஸில் (108) எட்டிய 3வது வீரரானார். முதலிரண்டு இடங்களில் முறையே அவுஸ திரேலியாவின் பிரட்மன் (58), இந்தியாவின் கவாஸ்கர் (101) உள்ளனர். இந்தியாவின் சச்சின் (114) நான்காவது இடத்தில் உள்ளார்.

**3ஆவது இடம்**

கடந்த 2015ல் இங்கிலாந்து மண்ணில் நடந்த ஆஷஸ் தொடரின் இரண்டாவது டெஸ்டில் ஸ்மித் இரட்டை சதம் (215) அடித்திருந்தார். இம்முறையும் அசத்தியதன் மூலம், ஆஷஸ டெஸ்ட் தொடரில் அதிக இரட்டை சதம் (2) அடித்த வீரர்கள் பட்டியலில் 3ஆவது இடத்தை அவுஸ்திரேலியாவின் பொப் சிம்ப்சனுடன் பகிர்ந்து கொண்டார். முதலிரண்டு இடங்களில் பிரட்மன் (8), இங்கிலாந்தின் வால்டர் ஹமண்ட் (4) உள்ளனர்.

**பிரட்மன் வழியில்....**

ஆஷஸ் டெஸ்ட் தொடரில் அவுஸ்திரேலிய மண்ணில் பிரட்மனுக்குப்பின் (1946, சிட்னி) இரட்டை சதம் அடித்த, ஆரம்ப வீரர் அல்லாத வீரர் என்ற பெருமையை ஸ்மித் பெற்றார்.

**1000 ஓட்டங்கள**

நேற்றைய ஆட்டத்தில் ஸ்மித் 112 ஓட். எடுத்தபோது, இந்த ஆண்டு டெஸ்ட் போட்டியில் ஆயிரம் ஓட்டங்களை எடுத்தார். ஏற்கெனவே, கடந்த 3 ஆண்டாக இந்த இலக்கை எட்டி இருந்தார். இதன்மூலம், டெஸ்ட் அரங்கில் தொடர்ந்து அதிக (4 முறை, 2014-17) ஆயிரம் ஓட்டங்கள் எடுத்த 2ஆவது வீரர் என்ற பெருமை பெற்றார். முதலிடத்தில் அவுஸ்திரேலியாவின் ஹைடன (5 முறை, 2001-05) உள்ளார்.

**முதல் தலைவர்**

பேர்த் மைதானத்தில் ஒரே இன்னிங்ஸில் அதிக ரன் (229*) எடுத்த முதல் டெஸ்ட்தலைவரானார்ஸ்மித. இதற்கு முன், அவுஸ்திரேலியாவின் பொப் சிம்ப்சன் இந்திய அணிக்கு எதிராக இங்கு 176 ஓட்டங்கள் எடுத்திருந்தார்.

இம்மைதானத்தில் நடந்த ஆஷஸ் டெஸ்ட் போட்டியில் ஒரே இன்னிங்ஸில் அதிக ஓட் (229) எடுத்த வீரர என்ற பெருமையும் ஸ்மித்திற்கு கிடைத்தது.


**சிக்கிய அண்டர்சன**

நேற்றைய ஆட்டத்தின் 103ஆவது ஓவரை இங்கிலாந்தின் அண்டர்சன் வீசினார். இதன் 4ஆவது பந்தில் ஸ்மித்திற்கு எல்.பி.டபிள்யு., கேட்கப்பட்டது. ஆனால், நடுவர் மறுக்க, 'ரிவியூ' கேட்கப்பட்டது. இதில் அண்டர்சன் 'கிரீசை' தாண்டி கால் வைத்தது தெரியவர, 'நோ-பால்' அளிக்கப்பட்டது.

இதைப்போல 'களத்தடுப்பும்' ஏமாற்றமாக இருந்தது. அண்டர்சனின் 107ஆவது ஓவரின் முதல் பந்தில் ஸ்மித் 'பிடி' கொடுத்தார். ஆனால், 'சிலிப்' பகுதியில் இருந்த குக் கோட்டைவிட்டார். அப்போது, 174 ஓட்டங்கள் எடுத்திருந்த ஸ்மித இந்த வாய்ப்பின் மூலம் இரட்டை சதம் கடந்தார்.

**முதல் முறை**

இங்கிலாந்து சார்பில் முதல் இன்னிங்ஸில் மலான், பேர்ஸ்டோவ் ஜோடி 237 ஓட். குவித்தது. ஆஸி சார்பில் ஸ்மித்-மார்ஷ் ஜோடி 201* ஓட்டம எடுத்தது. இதன் மூலம், டெஸ்ட் அரங்கில் இரு அணி சார்பிலும் 5ஆவது விக்கெட்டுக்கு முதல முறையாக 200 ஓட்டங்களுக்கு அதிமாக குவித்தது.




## யாழ்ப்பாண மாநகர சபை

### திண்மக்கழிவுகளை முறையாக தரம்பிரித்து வழங்குவதற்கான கேள்வி கோரல்

யாழ்ப்பாணம் மாநகரசபையின் ஆளுகைக்குட்பட்ட இடங்களிலிருந்து சேகரிக்கப்பட்ட தரம் பிரிக்கப்படாத திண்மக்கழிவுகளை கல்லுண்டாய்/காக்கைதீவு ஆகிய இடங்களில் வைத்து தரம்பிரித்துக் கொடுக்கும் வேலைக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

கேள்விப்படிவங்களை யாழ் மாநகர சபை, பிரதம பொறியியலாளர் பகுதியில் 18.12.2017 - 27.12.2017 வரையான காலப்பகுதியில் கடமைநாட்களில் பி.ப 3.00 மணிவரை மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா. 1,000.00 மற்றும் வரிகளைச் செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம். இத்தொகை பணமாகச் செலுத்தப்படல் வேண்டும்.

கேள்விப்படிவங்களை 28.12.2017 திகதி பி.ப 2.00 மணிக்கு முன்னர் ஆணையாளர், மாநகர சபை, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு பதிவுத்தபால் மூலம் அல்லது பொறியியலாளர் பகுதியில் உள்ள கேள்விப் பெட்டியினுள் இடுதல் வேண்டும்.

கேள்வி திறத்தல் 28.12.2017 ம் திகதி பி.ப 2.00 மணிக்கு கேள்விதாரர் அல்லது பிரதிநிதிகள் முன்னிலையில் நடைபெறும்.

| தொ.எண் | வேலைவிபரம் | விலைவிகிதம் உழவுஇயந்திரம் ஒன்றிற்கு |
| --- | --- | --- |
| | தரம் பிரிக்கப்படாத திண்மக் கழிவுகளை கல்லுண்டாயில்/ காக்கைதீவில் வைத்துதரம்பிரித்துக் கொடுத்தல். | |

1. நாளொன்றிற்கு குறைந்தது 30 உழவுஇயந்திரங்களில் சேகரிக்கப்பட்ட கழிவுகள் தரம் பிரித்தல் வேண்டும். இவை மாநகரசபையால் நியமிக்கப்படும் அலுவலர்களால் உறுதி செய்யப்படும்.
2. உழவுஇயந்திரப் பெட்டியானது வழமையான உழவுஇயந்திரபெட்டியின் கொள்ளளவை விட 1'-6" உயரமானது.

திரு. இ.த.ஜெயசீலன்,
ஆணையாளர்,
மாநகர சபை,
யாழ்ப்பாணம்
17.12.2017.

(C-722)



பண்டிகைக்கால ஏசியன் தளபாடத்தின்

## மாபெரும் மலிவு விற்பனை

Table Mate 2400/= 1400/=

Table Fan (1 year Warranty) 4600/= 3510/=

ஸ்ரீல் அலுமாரி 13500/= 9950/=

Kitchen Rack 2000/= 1450/=

பிரம்பு செற் 16500/=14750/=

6X4 கட்டில் 10500/=9000/=

லெதர் சோபா செற் (டீபோ இலவசம்) 41450/=36500/=

Iron Board 1300/= 990/=

6 கதிரை டீபோ 5500/= 4200/=

Imported மர அலுமாரி 29000/=18240/=

இல.230, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
(இலுப்பையடி - ஆனைப்பந்தி சந்திக்கு இடையில்)
021 791 6811. 076 821 9415. 077 358 3379

(C-729)



## மாபெரும் மலிவு விற்பனை

2017

I. Table Mate 2400/= 1400/=
II. Dressing Table 7500/= 4680/=
III. Cane Set 16900/= 14900/=
IV. 6 Chair with Tipo (wisdom) 6000/= 5450/=
V. SOFA Set With Glass Coffee Table 43000/=36500/=
VI. Wood Cupboard (Import) 29000/= 18240/=
VII. Mattress 3600/= 2920/=

"வெளிநாட்டில்" இருந்து புதிதாக இறக்குமதி செய்யப்பட்ட வீடு மற்றும் அலுவலகத்துக்கு தேவையான அனைத்துப் பொருள்களையும் இங்கே பெற்றுக் கொள்ளலாம்.

அரசடி வீதி, நட்டாநெரு சந்திக்கும் பிரவுண் வீதி சந்திக்கும் இடையில்
076 6219413. 076 6219413

(C-729)

# Ministry of National Integration and Reconciliation

## REHABILITATION OF RECONCILIATION FOCUSED HIGH PRIORITY ROADS AND BRIDGES WITH SECURED FINANCING ARRANGEMENTS IN NORTHERN AND EASTERN PROVINCES

# Invitation for Bids

1. The Chairman, Cabinet Appointed Negotiation Committee, on behalf of the Secretary, Ministry of National Integration and Reconciliation, invites sealed bids from eligible and qualified bidders for one or more of the 6 Contract Packages given in the Table 1 below. This includes rehabilitation of 1847.40 km covering 173.5 km Road Development Authority (RDA) Roads, 394.45 km of Road Development Department (RDD) Roads and 1279.45 km of Local Authority Roads.

| Name of the Contract | Length of Roads (km) | Contract Identification No. | Minimum Grade (applicable for local bidders only) | Speciality (applicable for local bidders only) | Experience in Similar Works (in Rs. Million) | Bid Security (in Millions of Rupees) | Price of Bidding Documents (in Thousands of Rupees) | Average Annual Construction Turnover (in Billions of Rupees) | Liquid Assets Required (in Millions of Rupees) |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| Rehabilitation of RDA Roads in Northern Province | 88.50 | NIR/NP/RDA/01 | CS2 | Highway | 3,750 | 152 | 100.0 | 11.0 | 1,300 |
| Rehabilitation of RDD Roads in Northern Province | 165.82 | NIR/NP/RDD/01 | CS2 | Highway | 2,000 | 85 | 100.0 | 6.0 | 710 |
| Rehabilitation of Local Authority Roads in Northern Province | 133.45 | NIR/NP/LGD/01 | CS2 | Highway | 900 | 36 | 100.0 | 2.5 | 300 |
| Rehabilitation of RDA Roads in Eastern Province | 85.00 | NIR/EP/RDA/01 | CS2 | Highway | 925 | 38 | 100.0 | 2.8 | 310 |
| Rehabilitation of RDD Roads in Eastern Province | 228.63 | NIR/EP/RDD/01 | CS2 | Highway | 1,700 | 69 | 100.0 | 5.0 | 570 |
| Rehabilitation of Local Authority Roads in Eastern Province | 1,146.00 | NIR/EP/LGD/01 | CS2 | Highway | 8,800 | 355 | 100.0 | 26.0 | 2,950 |

2. Bidding will be conducted through International Competitive Bidding Procedure. The bidding currency and the payment currency shall be Sri Lankan Rupees.
3. Bidders may bid for one or more contract packages, and they shall be awarded a maximum two contract packages, as further defined in the bidding document. If the bidder is to be awarded more than one contract package,The Bidder shall satisfy the cumulative requirements of such Contract Packages. Bidders wishing to offer discounts in case they are awarded more than one contract will be allowed to do so, provided those discounts are included in the Letter of Bid or in a separate envelope marked 'Modifications/ Discounts' submitted before the closing of the Bid.
4. The Bidders shall arrange confirmed finances for their bid price from a recognized financier acceptable to the Employer. The Government of Sri Lanka will provide a guarantee for the repayment of the loan and interest to the financier.
5. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and local bidders shall meet the following minimum requirements: -
   ICTAD/CIDA Grade: Given in Table 1 Speciality: Given in Table 1
   If the bidder is a joint venture, and if there are local partners in the joint venture, at least one local partner shall satisfy the Grade and Speciality requirements.
6. Qualification requirements to qualify for contract award include:
   Average Annual Construction Turn over: Given in Table 1
   Liquid Assets availability: Given in Table 1
7. Interested bidders may obtain further information from:

   **Name** :**Ministry of National Integration and Reconciliation**
   **Address** :**NO. 34, Narahenpita, Nawala, Sri Lanka**
   **Telephone** :**0094 11 2806424**
   **Fax** :**0094 11 2806530**
   **Email** :**ministrysec.nir@gmail.com**

   and inspect the bidding documents at the address given below from 9:00 hrs. to 15:00 hrs. on all working days.
   A complete set of Bidding Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to the Secretary, Ministry of National Integration and Reconciliation, No. 34, Narahenpita, Nawala, Sri Lanka from 22nd December 2017 to until 2nd February 2018 from 9:00 to 15:00 hrs, upon payment of a non-refundable fee of Rs. 100,000.00 for each package. The method of payment will be by cash.
8. Bids shall be delivered in duplicate to the address below on or before 11:00 hrs of 2nd February 2018. Late Bids will be rejected. Bids will be opened soon after closing in the presence of the bidder's authorized representatives, who choose to attend.
9. Bids shall be valid up to 27th July 2018.
10. All Bids shall be accompanied by a Bid-Security for an amount mentioned in Table 1 above. Bid Security shall be valid up to 24th August 2018.
11. A pre-bid meeting will be held at the Ministry of National Integration and Reconciliation on 11th January 2018 at 14.00 hrs.

The address referred to above is:

**Ministry of National Integration and Reconciliation**
**NO. 34, Narahenpita, Nawala, Sri Lanka**

**No.34, Narahenpita Road,**
**Nawala,**
**Sri Lanka.**

**Chairman,**
**Cabinet Appointed Negotiation Committee,**
**Ministry of National Integration and Reconciliation**

# சண்டிலிப்பாய் கோட்ட முன்பள்ளிகளின் ஆசிரியர் கௌரவிப்பும் கலைநிகழ்வும்



(யாழ்ப்பாணம்)

சண்டிலிப்பாய் கோட்டத்தைச் சேர்ந்த முன்பள்ளிகளின் ஆசிரியர்களின் கௌரவிப்பு நிகழ்வும். முன்பள்ளிச் சிறார்களின் கலைநிகழ்வுகளும் நேற்று முன்தினம் வெளளிக்கிழமை வலி.தென்மேற்கு (மானிப்பாய்) பிரதேச சபை கலையரங்கில் சண்டிலிப்பாய் கோட்ட முன்பள்ளி ஆசிரியர்களின் சம்மேளனத் தலைவி தலைமையில் இடம்பெற்றன.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாணசபை உறுப்பினர் பா.கஜதீபன் கலந்துகொண்டார். சிறப்பு விருந்தினர்களாக முன்னாள வலி.தென்மேற்கு (மானிப்பாய்) பிரதேசசபை தவிசாளர் அ.ஜெபநேசன், சண்டிலிப்பாய கோட்ட முன்பள்ளி உதவிக்கல்விப் பணிப்பாளர் மற்றும் சண்டிலிப்பாய் பிரதேச செயலக முன்பிள்ளைப்பருவ உத்தியோகத்தர் ஆகியோர் கலந்துகொண்டனர்.


இந்நிகழ்வில் முன்பள்ளி ஆசிரியர்கள் மாலை அணிவித்து பரிசு வழங்கிக் கௌரவிக்கப்பட்டதுடன். சிறார்களின் கலைநிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.

கோட்டத்தைச் சேர்ந்த முன்பள்ளிகளின் ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர எனப்பலரும் நிகழ்வில் கலந்து கொண்டனர். (இ-7)



புலோலி தென்மேற்கு கந்த முருகேசனார் மாதிரி முன்பள்ளியின் கலைவிழாவும் பரிசளிப்பு விழாவும் அண்மையில் நடைபெற்றது. முன்பள்ளி முகாமைக் குழுத் தலைவர் மு.ஜெகதேவன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண சபை உறுப்பினர் வி.சிவயோகன் கலந்து கொண்டு வெற்றியீட்டிய மாணவர்களுக்கு பரிசில்களை வழங்கினார். முன்பள்ளி மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன. (படங்கள்:-கரணவாய் செய்தியாளர்)

# அமரர் பரமநாதனின் நினைவஞ்சலிக் கூட்டம்



(யாழ்ப்பாணம்)

தன்னலமற்ற சமூக சேவையாளர். மனித உரிமைகள் செயற்பாட்டாளர் அமரர். சு.பரமநாதனின் நினைவஞ்சலி நிகழ்வும் சேவை நயப்பு நிகழ்வும் நாளை செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணியளவில் யாழ். மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத்தில் இடம்பெறும்.

யுத்தம் இடம்பெற்ற 1996 - 1998 ஆம் ஆண்டு காலப் பகுதியில் யாழ். மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத்தின் தலைவராக சு.பரமநாதன் பதவி வகித்து மக்களுக்கு சிறந்த சேவையாற்றிவர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# தொழிற்பயிற்சி கற்கைநெறிகள்

(யாழ்ப்பாணம்)

இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபையானது யாழ். மாவட்டத்தில் தற்கால வேலை வாய்ப்பினை மையமாக கொண்டு முழுநேர மற்றும் பகுதிநேர தொழிற்பயிற்சி கற்கைநெறிகளை நடத்தி வருகின்றது.

கரைநகர் தொழிற் பயிற்சி நிலையத்தில் பின்வரும் கற்கைநெறிகள் முற்றிலும் இலவசமாக 02.01.2018 இல் ஆரம்பிக்கவுள்ளன. இக்கற்கை நெறிகளாவன, காய்ச்சிஇணைப்பவர்(வெல்டிங், மின்னிணைப்பாளர், உணவு மற்றும் குளிர்பானம் பரிமாறுபவர், அறைஊழியர், அலுமினியம் பெருத்துநர், மோட்டார் சைக்கிள் திருத்துநர், பெண்கள் மற்றும் சிறுவர்களுக்கான ஆடை வடிவடைப்பாளர், நீர்க்குழாய் பொருத்துநர், குளிரூட்டி மற்றும் குளிர்சாதன உபகரணங்கள் திருத்துநர் ஆகும். இக் கற்கைநெறிகள் அனைத்தும் தேசிய தொழில்தகைமை (NVQ) சான்றிதழுக்கான பயிற்சிகளாகும்.

இக்கற்கை நெறிகளை கற்க விரும்புவர்கள் தங்கள் பதிவுகளை அலுவலக நேரத்தில் மாவட்ட அலுவலகம், 4ஆம் மாடி, வீரசிங்கம் மண்டபம், இல.12, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம் (021 222 7949) அல்லது வலந்தலைச்சந்தியில் உள்ள காரைநகர் தொழிற்பயிற்சி நிலையத்தில் எதிர்வரும் 31.12.2017 ஆம் திகதிக்கு முன்னர் மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம் என இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபை உதவிப் பணிப்பாளர் கு.நிரஞ்சன் அறிவித்துள்ளார். (இ)

# ஆசிரியர்களுக்கான கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

கோப்பாய், பலாலி ஆசிரிய கலாசாலையில் 2014 இல் பயிற்சி முடித்து வெளியேறிய ஆசிரியர்களுக்கான அவசர கலந்துரையாடல் நாளை திங்கட்கிழமை காலை 9 மணிக்கு ஆரியகுளம் சந்தியில் அமைந்துள்ள புதிய உயர் கல்லூரியில் நடைபெறவுள்ளதால் அன்றைய தினம் தாங்கள் தற்போது கற்பிக்கும் பாடசாலை, வலயம், மாவட்டம் போன்ற தகவல்கள் திரட்ட வேண்டியுள்ளதால் ஒவ்வொருவரும் தவறாது சமுகமளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள் என வட மாகாண பயிற்றப்பட்ட ஆசிரியர் சங்கத் தலைவர் அறிவித்துள்ளார். (இ)


English வகுப்புக்கள்

குழுவாக (யாழ்ப்பாணத்தை அண்டிய பகுதியில்) தரம் 6,7,8,9,10,11 மற்றும் பாடசாலை முடித்துள்ளோர்கள், வேலை செய்வோர் போன்றவர்களுக்கும் spoken English வருகை தந்து கற்பிக்கப்படும்.



31ஆம் நாள் நினைவஞ்சலி

அமரர் பாங்கராஸ் இராசதங்கம்



எமது பாடசாலையின் விஞ்ஞான ஆசிரியை திருமதி சுகந்தினி ஜோயல் பியசீலன் அவர்களது அன்பு மாமியார் அமரர் பாங்கராஸ் இராசதங்கம் அவர்களது ஆத்மா சாந்தியடைய பிரார்த்திப்பதோடு அவரது குடும்பத்தாருக்கு ஆழ்ந்த இரங்கலை தெரிவிக்கின்றோம்.

நலன்புரிக்கழகம்,
கிளி/திருவையாறு மகா வித்தியாலயம்.

(C-725)



31ஆம் நாள் நினைவஞ்சலி

அமரர் பாங்கராஸ் இராசதங்கம்



கிளி/இராமகிருஸ்ண வித்தியாலயத்தின் அதிபர் திரு.ப.ஜோயல் பியசீலன் அவர்களது அன்புத்தாயார் அமரர் பாங்கராஸ் இராசதங்கம் இறைபதமடைந்தமையின் 31ஆம் நாளில் அன்னாரின் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கிறோம்.

அதிபர்கள் சங்கம்,
கிளிநொச்சி மாவட்டம்.

(C-726)


# இராசி பலன்

17.12.2017
மார்கழி 02, ஞாயிற்றுக்கிழமை
சூரிய உதயம் காலை 6.15 மணிக்கு
சதுர்த்தசி முற்பகல் 10.19 மணிவரை
கேட்டை முழுவதும்
சுபநேரம் 9.22-10.52 மணிவரை
இராகுகாலம் 4.52-6.22 மணிவரை
ஆஞ்சநேயர் ஜெயந்தி தினம்
அமாவாசை விரதம்

வளவன்

| | | | |
|---|---|---|---|
| | | | |
| | கிரகநிலை சந்திராஷ்டமம் கார்த்திகை | | ராகு |
| கேது | | | |
| சூரி | சனி,சந் சுக், புத | குரு,செவ், | |

**மீனம்:** மனக்குழப்பம் அகலும் மகிழ்ச்சி கூடும் நாள், திறமை மிக்கவர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும், எதிர்காலம் குறித்து முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள்.

**மேடம்:** குடும்பத்தில் குழப்பங்கள் தோன்றி மறையும், கொடுக்கல்-வாங்கல்களில் கவனம் தேவை, ஆரோக்கியத்தில் அக்கறை காட்டும் நிலை ஏற்படலாம், விரயங்கள் கூடும்.

**இடபம்:** உறவினர் சந்திப்பால் உள்ளம் மகிழ்வீர்கள், களஸ்திர நன்மையுண்டு, நம்பி வந்தவர்களுக்கு கைகொடுத்து உதவுவீர்கள், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும்.

**மிதுனம்:** உற்சாகமாகப் பணிபுரிவீர்கள், பழைய கடனை தீர்க்க முற்படுவீர்கள், கனவு பலிதமுண்டு, பிறர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள்.

**கும்பம்:** வசதி வாய்ப்புக்களைப் பெருக்கிக்கொள்ள முற்படுவீர்கள், புதிய முயற்சிகளில் ஆர்வம் காட்டுவீர்கள், செயற்பாடுகளில் உத்வேகம் காட்டுவீர்கள்.

**கடகம்:** புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், பிரியமான சிலரின் சந்திப்பு இடம் பெறலாம், உதிரி வருமானங்கள் வந்து சேரலாம், தன்னம்பிக்கை துளிர்விடும் நாள்.

**மகரம்:** பயணங்கள் கைகூடுவதற்கான வாய்ப்புண்டு, வியக்கும் செய்திகள் வந்து சேரலாம், திட்டமிட்ட காரியங்களில் திசை திருப்பங்கள் ஏற்படலாம்.

**சிம்மம்:** பெரிய மனிதர்களின் சந்திப்பால் பெருமையடைவீர்கள், பயணங்களால் பலனுண்டு, வியாபார விருத்திக்கு வித்திடுவீர்கள், சுப செலவுகள் அதிகரிக்கும் நாள்.

**தனுசு:** கோபத்தைக் குறைத்துக் கொள்வது. நல்லது, வழிபாடு வளர்ச்சியைக் கூட்டும், உடல் நலனில் சிறு இடையூறுகள் ஏற்பட்டு அகலும்.

**விருச்சிகம்:** வளர்ச்சிப் பாதையை நோக்கி அடியெடுத்து வைப்பீர்கள், ஆன்மீகப் பணியில் ஆர்வம் காட்டுவீர்கள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**துலாம்:** பெரிய மனிதர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும், புத்தி சாதுரியமான செயற்பாடுகளால் புகழ்கூடும் நாள், எடுத்த காரியத்தில் அதிக பிரயாசை காட்டுவீர்கள்.

**கன்னி:** நீண்ட நாளைய பிணக்குகளில் திசை திருப்பங்கள் ஏற்படலாம், மனதில் புதிய சிந்தனைகள் தோன்றும், வழிபாடு காரிய வெற்றி தரும்.

## கணபதி ஹோமம்

(யாழ்ப்பாணம்)

விநாயகர் சஷ்டி விரத நாட்களில் நடைபெறும் கணபதி ஹோமம் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு ஸ்ரீ ஜெய நீராவி வீரகத்தி விநாயகர் ஆலய மண்டபத்தில் இடம்பெறும்.

பிள்ளையார் கதை வாசிப்பு தினமும் காலை 7 மணி பூசையின் பின்னர் இடம்பெறும் என வை. இரகுநாத முதலியார் அறிவித்துள்ளார். (இ-7)

## நத்தார் விழா

(யாழ்ப்பாணம்)

செவிப்புலன் வலுவற்றோர் புனர்வாழ்வு நிறுவனத்தின் ஏற்பாட்டில் கிறிஸ்தவ கழகம் நடத்தும் வருடாந்த நத்தார் விழா இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு செவிப்புலனற்றோர் மண்டபத்தில் இடம்பெறும்.

இதில் பரிசில் வழங்கல் நிகழ்வும் இடம்பெறும் என ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (இ-7)

## பரீட்சைக்குத் தோற்றுபவர்கள் உரிய நேரத்திற்குள் சமுகமளிக்கவும்

(யாழ்ப்பாணம்)

சாரதி அனுமதிப் பத்திரத்திற்கான எழுத்துப் பரீட்சைக்கு தோற்றும் பரீட்சார்த்திகளில் சிலர் உரிய நேரத்திற்கு சமுகம் தராத காரணத்தினால் பரீட்சை ஒழுங்கமைப்பாளர்களும் பரீட்சை மேற்பார்வையாளர்களும் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்குகின்ற அதேவேளை ஏனைய பரீட்சார்த்திகளும் இதனால் பாதிப்படைகின்றனர்.

இதனால் சாரதி அனுமதிப்பத்திர எழுத்துப் பரீட்சைக்கு தோற்றும் அனைத்துப் பரீட்சார்த்திகளும் பரீட்சை நேரத்திற்கு 30 நிமிடம் முன்னதாகவே அலுவலகத்திற்கு வருகை தருதல் வேண்டும். அவ்வாறு 30 நிமிடம் முன்னதாக வருகை தருவதன் மூலம் பல்வேறு அசௌகரியங்களைத் தவிர்த்துக் கொள்ளலாம் என்பதனையும் பரீட்சார்த்திகள் கவனத்தில் கொள்வது சிறந்தது.

மேலும் பரீட்சார்த்திகள் பரீட்சைக்கு சமுகமளிக்கும் பொழுது பின்வரும் ஆவணங்களைத் தவறாது கொண்டு வருதல் வேண்டும். தேசிய அடையாள அட்டை, மருத்துவச் சான்றிதழ், பரீட்சை அனுமதிப்பத்திரம், பரீட்சை அனுமதிப் பத்திரத்தின் பிரதி என்பனவாகும் என யாழ். மாவட்ட மோட்டார் போக்குவரத்துத் திணைக்கள பிரதி ஆணையாளர் வை.பரம்தாபன் அறிவித்துள்ளார். (இ)

## பெண் தொழிலாளர்கள் தேவை

■ விதவிதமான வடிவமைப்பில் ஆடைகள் தைக்கத் தெரிந்த பெண்கள் தேவை.

■ பெண் தொழிலாளர்கள் தேவை. முன் அனுபவம் தேவையில்லை.

■ அப்பளம், மிக்சர், தட்டவடை, மோர் மிளகாய் போன்ற உணவுகள் தயாரிக்கத் தெரிந்த பெண்கள் தேவை.

முகவரி: அறவழி கட்டடம்
A 9 வீதி,
கைதடி நுணாவில்.
சாவகச்சேரி
தொ. பே.இல: 077 375 0807

(855)

## யாழ்ப்பாணத்தில் விற்பனை முகவர் தேவை

யாழ்ப்பாணத்தில் லங்காடைல்ஸ் விற்பனை முகவராகச் செயற்படக்கூடிய வசதியுள்ள ஒருவரை நாம் தேடுகின்றோம். இத் துறையில் அனுபவம் வாய்ந்த, பின்வரும் நிபந்தனைகளைப் பூர்த்தி செய்யக்கூடிய விண்ணப்பதாரர்களை நாம் எதிர்பார்க்கின்றோம்.

- ரு.10 மில்லியன் வங்கி உத்தரவாதம் சமர்ப்பிக்க வேண்டும்.
- குறைந்தபட்சம் 3,000 சதுர அடி காட்சியறை இருக்க வேண்டும்.
- 10,000 சதுர அடி களஞ்சிய வசதி இருக்க வேண்டும்.
- கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு போக்குவரத்து வசதியைக் கொண்டிருக்க வேண்டும்.
- எமது நிறுவனத்தின் தேவைக்கேற்ப அலுவலர்களையும் ஊழியர்களையும் கொண்டிருக்க வேண்டும்.

மேலதிக விபரங்களுக்கும் விசாரணைகளுக்கும் தொடர்புகொள்ளவும்

திரு. வேரகொட - 0777 452 155

LANKATILES
கலைநயமான வாழ்க்கை

(163)

## உலகில் அங்கீகரிக்கப்பட்ட நாடாக இலங்கை

### விஜயமுனி சொய்சா பெருமிதம்


(கொழும்பு)

தேசிய அரசாங்கத்தின் ஆட்சியில் உலகில் அங்கீகரிக்கப்பட்ட நாடாக இலங்கை மாறியுள்ளது என அமைச்சர் விஜித் விஜயமுனி சொய்சா தெரிவித்துள்ளார்.

அத்துடன் அரசாங்கத்தில் அங்கம் வகித்தாலும் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் கொள்கைக்கு எதிராகச் செயற்படப் போவதில்லை எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். மொனராகலை பிரதேசத்தில் நேற்று நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனை கூறியுள்ளார். (இ-7)

## இளையோர்களே சந்தர்ப்பத்தை தவறவிடாதீர்கள்!

Aaruthal's CiTE
BELIEVE TO ACHIEVE
CENTRE FOR IT EDUCATION
Job Skills Development & Training.



No. 125 Main Street, Jaffna.

- Computer Literacy & English Language Skills Development & Training Programme
- IT Job Skills Development & Training Programme.

திறன் விருத்திக்கான செயற்பாடுகள் நிலையத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அதன் முதற்கட்டமாக வழிகாட்டல் கரத்தரங்குகளை ஆரம்பிக்கவுள்ளோம்.

கருத்தரங்கு 01 "ICT' 18-12-2017 திங்கள் 04.00 மணி

ஏற்கனவே பதிவு செய்தவர்கள் உங்கள் பதிவினை உறுதி செய்யுமாறும் இதுவரை பதிவு செய்யாதவர்கள் விரைவில் பதிவினை மேற்கொள்ளுமாறும் கேட்கப்படுகிறீர்கள் குறிக்கப்பட்ட இருக்கைளே இருப்பதனால் காலதாமதமின்றி பதிவினை மேற்கொள்ளவும் எமது நிறுவனத்தில் கற்கைநெறிக்கான பதிவினை மேற்கொண்டோருக்கு முன்னுரிமை.

தொடர்புகளுக்கு 021 221 7092- 021 2214099 - 077 292 8853 (சி-719)

CENTRE FOR EXCELENCE
Powered By RATNAM FOUNDATION

# Job Vacancy

## Farm Manager ( Permanent Job)

We are looking for a Farm Manager
The minimum Qualification shall be Msc (Agriculture) Graduate with considerable experience in Modern farm or any other Farm Project. Bsc Agriculture graduate also to be considered.( Freshers too be considered if you think you are the right candidate)

**SALARY**
Initial Salary Rs 45,000/= PM + EPF 12% + ETF 3% PM= Total Remuneration Rs 51,750/= PM
Salary shall be fixed according to your qualification and work experience. We may pay you more than the above said salary too. Your annual increment shall be reviewed every year.

**Age shall be under 40 Years**
**Candidate should be a valid Driving License holder**
**Suitable vehicle shall be provided (Terms and conditions Apply)**

**Responsibility**
You shall have the ability to manage the Farm Project and willing to grow with the Project and shall be able to work with responsibility. Since you have to work with foreigners the proficiency in English is essential. Initially you have to be trained in Srilanka. We may send you abroad for an International training in Modern Farming.

**How to Apply**
You shall send your application with your Bio Data to our email address

**Project Description**
Our Company is Projecting to commence an Organic Agricultural Modern Farm Project in Northern Province shortly. Initial Project investment is Rs .100 Million. But the Targeted Project Is Rs 1000 Million. Our Moto is to how to sustainably increase rural incomes and promote the development of a Modern Agriculture sector that meets the need of an upper middle income country that Sri Lanka aspires to be, given this background we propose being made to commence farming in crops mostly vegetables and fruits that we could also play a role in rebuilding the agriculture sector.
This agriculture Project initially in the Northern Province and to be extended to other Provinces later and focus initially in crops such as chilies , Tomatoes, Ladies fingers and perhaps expand to other crops later.
It is our intention on a staggered basis to provide state of the art packaging as well for these products which will then open up high end buyers market overseas. Which will also provide more employment opportunities for the people of Northern Province. The Project will support agricultural value chain development to promote commercial and export oriented agriculture with particular focus on higher value vegetables.
Initially we concentrate on our Organic agricultural Farm Project and produce the minimum quantity which we have to export market only. Subsequently we purchase Non Organic Agricultural produce from other farmers of Northern Province to export purpose only. Our company is having an arrangement with a foreign buyer to purchase our produce.

**AGILE FARMS (PVT) LTD**
Email : gdf.agile@gmail.com
Arnman Kovilady , Palaly Road, Urelu West, Chunnakam

(C-718)

# இணுவில், மருதனார்மட
# ஆஞ்சநேயர் தேர்த்திருவிழ



## ஆசிச் செய்தி

"ஸ்ரீராம தூதம் சிரசாம் நமாமி"

அடியார்களே!

எல்லாம் வல்ல நல்லிறையாய் பக்திப்பாரம் பரிய பாவனையின் பூரணமானவனாய் தொண்டையும், தொழுதலையும் என்றும் போற்றும் தெய்வீக புருஷனாய் விளங்கும் ஸ்ரீ ஆஞ்சநேயப் பெருமான் திவ்விய தேகஸ்வரூபியாய் உறைகின்ற இலங்கை யாழ்ப்பாணம் இணுவில் மருதனார்மட ஸ்ரீசுந்தர ஆஞ்சநேயர் சுவாமி திருக்கோவிலின் இந்த வருட அனுமத்ஜெயந்தி பெருவிழா சிறப்புற ஏற்பாடாகி அதன் முதல்நாளான இன்று (17.12.2017) அஞ்சனை சுதன் ரதமேறி வருகின்ற இரதோற்சவப் பெருவிழாவானது சர்வ மங்கலங்களுடன் நிகழ்கிறது.

தன் எண்ணம், சொல், செயல் என அனைத்தையுமே முழுமையான அதாவது பரிபூரணமாக ஸ்ரீராமனுக்கே அர்ப்பணித்து அன்பினதும் பக்தியினதும் அடையாளமாய் திகழ்பவர் இந்த சாட்சாத் அனுமந்த மூர்த்தியே என்பதில் ஐயமில்லை. இத்தகைய ஆஞ்சநேயர் பஞ்ச முகம் தாங்கி, பகைவிரட்டி, பாவம் போக்கி, பக்தி பெருக்க பயணப்படுகின்ற இரதோற்சவ பெருவிழாவில் அடியார்கள் அனைவரும் கலந்து கொண்டு மனமொன்றி அந்த மாருதியை வழிபட்டு மங்கலங்கள் யாவும் பெற்று பேரானந்தம் அடைவீர்களாக.

"லோகாசமஸ்தா சுகினோ பவந்து"

ஆசிகளுடன்

சிவஸ்ரீ.இ.சுந்தரேஸ்வர குருக்கள், ஆதீன கர்த்தா, அருள்வளர் ஸ்ரீ சுந்தர ஆஞ்சநேயர் கோயில்.



## வாழ்த்துச்செய்தி

ராமநாமப் பிரியனாய் காலமெல்லாம் வாழும் வீரபக்த ஆஞ்சநேயப் பெருமான் உறையும்திருப்பதியாம் இணுவில் மருதனார்மட அருள்வளர் ஸ்ரீசுந்தர ஆஞ்சநேயர் திருக்கோவிலில் இன்றுதேர்த்திருவிழா. பக்தர்கள் வடம் பிடிக்க பக்குவமாய் நகர்ந்துவரும் இந்த பஞ்சமுக மாருதி பக்திப் பிரவாகத்தின் அடையாளம் என்பதில் மிகையில்லை. என்போன்ற தொலை தூர தேசங்களில் இருப்பவர்களை கூட அருகாமையாயும் அருளாளனாயும் ஆக்கும் தெய்வம். எண்ணங்களை அவரிடம் விட்டு விட்டு நாம் எந்தப் பணியையும் ஆற்றினாலும் அதை வெற்றிக்குரியதாகவே ஆக்கித்தரும் வித்தக மூர்த்தி.

இன்று எங்கள் வாழ்வில் நல்லவையும் நன்மைகளுமே நிகழ்வதற்கு இந்த காற்றின் மைந்தனே கதியாகிறான். அத்தகைய ஆஞ்சநேயப் பெருமானின் இரத பவனியில் பக்தர்கள் கூட்டத்துடன் அடியேனும் கலந்து கொள்வது ஆத்ம நிறைவை தருகிறது. அவ்வகையில் இந்த அஞ்சனை மைந்தனின் அருள் அனைவரும் பொலிய வேண்டி அவன் தாள் பணிகிறேன்.

திரு.சு.கதிர்காமநாதன் சுவிஸ்- எஸ்.கே.ரீ வர்த்தக ஸ்தாபனம், தேர் உபயகாரர்.



## வாழ்த்துச் செய்தி

இயற்கை எழில் கொஞ்சும் மருதனார்மடத்தின் மத்தியில் கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் அருள்வளர் ஸ்ரீ சுந்தர ஆஞ்சநேயப் பெருமானுக்கு தேர்த்திருவிழா. இத்தருணத்தில் வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மனநிறைவடைகிறேன்.

ஆஞ்சநேயப் பெருமானை மனதில் நினைப்பவர்கள் இம்மையில் சர்வ காரிய சித்தி பெற்று ஆரோக்கிய பலத்துடன் வாழ்வதுடன் மறுமையில் இராமன் அருளால் முத்தியின்பம் அடைவர் என்பது பக்தர்களின் நம்பிக்கை. ஆஞ்சநேயப் பெருமானை வழிபட்டால் உடல்வலிமை, புகழ், தொழில் விருத்தி, குடும்ப கஷ்டங்கள் நீங்கும் என்பது சித்தம்.

ஆஞ்சநேயப் பெருமான் தன் உடல், பொருள், ஆவி அனைத்தையும் ஸ்ரீ இராமனிடத்தில் ஒப்படைத்தவர். சிவ அவதாரமான அஞ்சனையின் புதல்வனை நாமனைவரும் வழிபட்டு இம்மையிலும், மறுமையிலும் பேரின்பப் பெருவாழ்வு பெற வேண்டும் என வாழ்த்தி வணங்குகிறேன்.

திருமதி. மதுமதி- வசந்தகுமார்
பிரதேச செயலாளர், பிரதேச செயலகம், உடுவில்.

## வாழ்த்துச்செய்தி

"சென்மமும் மரணமும் இன்றித் தீருமே
இம்மையே ராமா என்ற இரண்டெழுத்தினால்"

இணுவில்-மருதனார் மடம் அருள்வளர் ஸ்ரீ சுந்தர ஆஞ்சநேய சுவாமி திருக்கோவிலில் இன்று இரதோற்சவம் எனப்படும் தேர்த்திருவிழா. கடல்கடந்து இலங்கை வந்து சீதைக்கு ஆறுதல் நல்கிய ஆஞ்சநேயன் இங்கே அமர்ந்திருந்து அவர்தம் புகழ் இன்று கடல்கடந்து புலம்பெயர் நாடுகளிலும் பரவியிருப்பதில் வியப்பேதும் இல்லை. காற்றின் மைந்தன் ஆகையினால் காற்றிலே அவர்தம் பெருமை பரவி இன்று பல வெளிநாடுகளில் பக்தர்களை பெருக்கி இருக்கிறது. குறிப்பாக சுவிஸ் நாட்டில் இந்த மருதையம்பதி ஆஞ்சநேயரை மனதால் உருகி வழிபடும் அடியவர்கள் அதிகம் உண்டு.

மார்கழி மூலநட்சத்திர ஹனுமான் ஜெயந்தியை முன்னிட்டு முதல் பத்து தினங்கள் இலட்சார்ச்சனையும் இசை ஆராதனையும் அன்னதானங்களுமாக வழிபாட்டு பெருமைக்கு இவ்வடியவர்களும் உள்ளூர் உபயகாரர்களுமே துணைநிற்கிறார்கள்.

அனைத்து நன்மைகளும் மங்கலமும் அருளும் ஆஞ்சநேய பெருமான் தேரேறி வரும் திருக்காட்சியை காண்பதே பெரும்பாக்கியமாகும். அவ்வகையில் அருள் சுரக்கும் மாருதி நாதனின் மகிமையால் அனைவரும் இன்புற்றிருக்க அந்த ஆஞ்சநேயனை மனதார வழிபடுகின்றேன்.

அருள் பத்மநாதன்
சுவிஸ்கிளை தலைவர்.



ஆலய

யாழ்ப்பாணம் காங்கேசன்துறை வீதியில் இணுவில் மருதனார்ம
தைத்திங்களில் குடமுழுக்கு நடைபெற்று ஆஞ்சநேயப் பெருமானின் அ
நல்லாசியும் ஆதீனகர்த்தாவின் அருள் நிறைந்த தவிப்பாலும் வ
முன்னால் கோபுரம் மலை என எழுந்து நிற்க சஞ்சீவி மடம் அருட் சிறப்
சிறப்பாய் அமைய வீதி சுற்றி வழிபட காணிசேர பஞ்சமுகர் வீதியுலா
சுற்று மதில்களோடு ஆலயம் சிறப்பாய் மிளிர 2013 இரண்டாவது
17.12.2017 இல் பஞ்சமுகர் தேரேறி வருகின்றார் என்றால் அனுமந்

இந்த நாட்டிலேயே மட்டுமல்ல சுவிஸ் கனடா, ஜேர்மன், அமெரி
அந்நிய தேசத்திலிருந்து ஆலயத்தின் வளர்ச்சி யிலும் சமூகப் ப
திகழ்கின்றார்கள். இன்று நடைபெறுகின்ற தேர் உற்சவத் திற்கு
கதிர்காமநாதன் தனது உபயமாக ஏற்று செய்திருக்கிறார்கள். ஒவ்
மட்டுமல்லாமல் தனது உறவினரை அனுப்பி உற்சவத்தை திறம்ப
தேருக்கு வர்ணப்பூச்சுகளினாலே அலங்காரம் செய்து தேர் உற்சவ
உற்சவத்தில் அடியவர்கள் அனைவரும் கலந்து பஞ்சமுக ஆஞ்சநேய
கூறுகின்றோம். குறிப்பாக திரு.அருளம்பலம் - பத்மநாதன் அவ
ஆலயத்தோடு இணைத்து நல்ல பணிகளை ஆற்றுகிறார்கள். அவ

**மலரமைப்பு:- எஸ்.ஞானேஸ்வரன், ப**

R. VASI & CO
Hardwares Ceramics-Parts Paint & Electical
Dutch Road, Uduvil | K.K.S Road, Maruthanarmadam | Temple Road, Nallur.
T.P: 077 668 5092

TELESOON
MAKING GREAT THINGS POSSIBLE
Making Create Thing Possible
All Kinds of Accessories and CC TV Camera
Head office: No: 259G Power House Road, Jaffna. 021 221 7995
Branch: K.K.S.Road, Chunnakam. 021 224 1552
First Floor Cargils Square, Jaffna. 021 221 5793

ஸ்ரீ சிவராம் ரேடர்ஸ்
SRI SIVARAM TRADERS
248,Hospital Road, Jaffna
189, Katheresan Street, Colombo. T.P : 0777560760
Tel : 0777560760 0773076917 021 2228629

கிருபா லேணர்ஸ்
KIRUBAA LEARNERS
DS.589 அரச அங்கிகாரம் பெற்ற கனரக (A) தர சாரதிப் பயிற்சி பாடசாலை
இல. 226, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
021 222 4353, 0777 225 292
071 4546 960


Vene Transport
J.C.B Backhoe Loader
T.P: 021 222 2046
077 908 2146
165, K.K.S Road,Jaffna.

NARMATHA
Gold Center & Money exchange Pvt.Ltd
நர்மதா
187,மின்சார நிலையவீதி, யாழ்ப்பாணம்.
Tel : 021 222 1933
Fax : 021 222 4779
Email:narmathagc187@Gmail.com
187,Power House Road,Jaffna.

அனைத்து விதமான வயறிங், பிளமிங்,எலக்ரிக்கல் பொருட்களையும் பெற்றிட
NEW LUCKY HARDWARE
Kandy Road, Ariyalai, Jaffna.
T.P: 077 237 8062, 021 222 2299

STUDIO BHARATHI
Maruthanarmadam / studiobharathi.sb@gmail.com / 0774533191
K.K.S.Road
Maruthanarmadam
T.P:- 077 453 3191
Mail Studiobharathi.sb@gmail.com

# ...டம் அருள்வளர் ஸ்ரீ சுந்தர
# ...ழா சிறப்புமலர் -17.12.2017





## ஆலய வரலாறு

...தனார்மடத்தில் அமைந்துள்ள ஸ்ரீ சுந்தர ஆஞ்சநேயர் ஆலயத்தில்2001 ...ரின் அருளாலும் இறை அருள் பெற்ற விளாசித் தம்பி ஐயா அவர்களின் ...ாலும் வளர்பிறையென ஆலயம் வளர்ச்சியுற்று மாமலைக் கோயிலின் ...நட் சிறப்பாய் அமைய பஞ்சமுக ஆஞ்சநேயர் தேடி வர வசந்த மண்டபம் ...ீதியுலா வர சித்திரத்தேர் அமைய விஸ்வரூப ஆஞ்சநேயர் சிறப்பாய் அமைய ...டாவது குடமுழுக்கோடு நிறைவாக ஆலயம் அருட் சிறப்போடு விளங்கி ...அனுமந்தன் பேரருளும் ஆசியுமே சான்றாகும்.

... அமெரிக்கா, லண்டன், அவுஸ்திரேலியா, நோர்வே, கொலண்ட் போன்ற ...மூகப் பணியிலும் உபயத்தை ஏற்று செய்வதில் நிகரற்ற வர்களாகத் ... திற்கு கடந்த ஏழு ஆண்டுகளுக்கு முதல் திருவாளர் சுப்பிரமணியன் ...ா. ஒவ்வொரு வருடமும் தேர் உற்சவத்திற்குரிய நிதியை அனுப்புவதோடு ... திறம்பட நடத்திக் கொண்டிருக்கிறார்கள். அதுமட்டுமல்ல இவ்வருடம் ... உற்சவம் சிறப்புற வாழ்த்திக் கொண்டிருக் கிறார்கள். ஆகவே இந்த தேர் ...ஞ்சநேயருடைய திருவருளைப் பெற்று வாழ்வாங்கு வாழ வேண்டி நல்லாசி ...ன் அவர்கள் சுவிஸ் மாநகரத்திலே இருந்து கொண்டு உபயகாரர்களை ...ள். அவர்களுக்கும் எங்களுடைய ஆசீர்வாதம் கிடைப்பதாக .

**...ன், புன்னாலைக்கட்டுவன் செய்தியாளர்**

## வாழ்த்துச் செய்தி



இயற்கை வளங்களும் பேரெழிலும் மிக்க மருதனார்மடத்தின் மத்தியிலே அக்கிராமத்திற்கே பெருமை சேர்க்கும் வகையிலும் அவ்வழியால் செல்வோரை வணங்கிச் செல்லும்படி தூண்டும் அழகுடனும் அமைந்திருப்பது ஸ்ரீ சுந்தர ஆஞ்சநேயர் ஆலயமாகும். இவ் ஆலயத்தின் தேர்த்திருவிழாவிற்கு வாழ்த்துச் செய்தி வழங்குவ தில் பெருமை யடைகிறேன்.

மார்கழியில் அமாவாசைத்திதியும் மூல நட்சத்திரமும் இணைந்திருக்கும் நாளில் அஞ்சனையின் புதல்வராக அவதரித்தார் ஆஞ்சநேயப் பெருமான். ஆஞ்சநேயர் சிவ அம்சம் என்பதால் ஆஞ்சநேயரை வழிபட சிவபுண்ணியம் கிட்டும். ஆஞ்சநேய வழிபாட்டின் மூலம் ஆன்மபலம், மனோ பலம், உடல்பலம், பிராணபலம், சம்பத்பலம் என்பவற்றைப் பெறலாம். மனதில் உள்ள தீய எண்ணங்கள் அழிந்து புத்திக் கூர்மை, வீரம், விவேகம் உண்டாகும்.

சர்வகாரிய சித்திக்கு ஆஞ்சநேயர் வழிபாடு சிறப்பானது.

"ஓம் ஆஞ்சநேயாய வித்மஹே
வாயு புத்ராய தீமஹி தந்நோ
ஹனுமன் பிரசோதயாத்"

என்பது அனுமனுக்குரிய காயத்திரி மந்திரம். தேர்த் திருவிழா அன்று இம்மந்திர ஜெபத்துடன் துளசி மாலை , வெற்றிலை, மாலை சாற்றி வழிபட்டு சகல சௌபாக்கியங் களும் பெறுவோமாக என வாழ்த்தி வணங்குகிறேன்.

**திருமதி. தர்ப்பனா– சுதர்சன்**
**அபிவிருத்தி உத்தியோகத்தர்**
**(இந்து கலாசாரம்), பிரதேச**
**செயலகம், உடுவில்.**

## வாழ்த்துச்செய்தி



யாழ்.குடாநாட்டிலே அழகுச் சிறப்பு மிக்க மருதனார் மடத்திலே அடியவர்களுக்கு அருள் பாலித்துக் கொண்டிருக்கும் ஸ்ரீ சுந்தர ஆஞ்சநேயப் பெருமான் இன்று தேரேறி திருவீதி உலா வருகின்ற காட்சி மிகவும் சிறப்பானதாகும். இன்று மக்களை அவலப்படுத்திக் கொண்டிருக்கும் கஷ்டங்கள், துன்பங்கள், வறுமைகள் போன்றவற்றிலிருந்து எதிர்நீச்சல் பெறும் வல்லமை யினையும், அனைவரிட த்திலும் நன்மதிப்பைப் பெற்றிடவும் இந்த நாட்டிலே பொருளாதாரம் வளர்ச்சி பெற்று சாந்தியும், சமாதானமும் நிலைத்திடவும் விவசாயத்தில் நல்ல விளைச்சலைப் பெற்றிடவும் மாணவர்கள் கல்வியிலே மேலோங்கி உத்தியோக வாய்ப்புக்கள் பெற்றுக் கொள்ளவும் எல்லாம் வல்ல ஆஞ்சநேயரின் பொற்பாத கமலங்களை வேண்டி வணங்குகிறேன்.

"ஓம் ஸ்ரீ ராம ராம ராம ஜெயம்"

**Mr.K.Sriram**
**Senior Regional Distribution Manager**
**Softlogic Life**

## வாழ்த்துச்செய்தி




சைவமும் தமிழும் தழைத்தோங்கும் யாழ்ப்பாணம் மருதனார்மடத்திலே கோவில் கொண்டு எழுந்தருளி இருக்கும் ஸ்ரீ சுந்தர ஆஞ்சநேயப் பெருமான் இன்று தேரேறி திருவீதி உலா வருவதையிட்டு பெருமகிழ்வடைகிறேன்.

இப்போது சமூகத்தில் நடக்கின்ற வாள்வெட்டு மற்றும் சமூகவிரோத செயற்பாடுகள் போன்றவற்றில் ஈடுபடும் இளைஞர்கள் மற்றும் யுவதிகள் அதிலிருந்து விடுபட்டு நல்ல ஒரு சமுதாயத்தை கட்டியெழுப்பவும் இறைவழிபாட்டில் ஈடுபட்டு தீய செயற்பாடுகளிலிருந்து விடுபட்டு மனநிம்மதியையும் மன அமைதியையும் பெற்றுக் கொள்ளவும் எல்லாத்துறைகளிலும் இருப்பவர்களும் அத்துறைகளிலே வளர்ச்சி பெற்று மேலோங்கிடவும் இந்நாளில் தேரேறி திருவீதி உலா வருகின்ற பஞ்சமுக ஆஞ்சநேயப் பெருமான் அருள்பாலிக்க வேண்டி வணங்குகிறேன்.

**ஸ்ரீராம ஜெயம்.**

**திரு.எம்.செல்வகுமார் பிரதம பொறுப்பதிகாரி,**
**சுன்னாகம் பொலிஸ் நிலையம்.**

## வாழ்த்துச்செய்தி



மருதனார்மடத்தின் பேரழகிற்கும் சிறப்பிற்கும் காரணியாக இருக்கின்ற ஸ்ரீசுந்தர ஆஞ்சநேயப் பெருமானின் தேர்த்திருவிழாவிற்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன்.

எமது பிரதேசத்தில் அமைந்திருக்கின்ற ஸ்ரீசுந்தர ஆஞ்சநேயர் ஆலயம் இரண்டு தளங்களைக் கொண்டதாகவும் மூலமூர்த்தியான ஆஞ்சநேயர் ஒரே கருங்கல்லில் வார்க்கப்பட்ட 18 அடி உயர சிலையாக அமைந்துள்ளமையும் இதன் வாயிற்பகுதியில் 72 அடி உயரமான ஆஞ்சநேயர் சிலை வடிவமைக்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்க சிறப்பம்சங்களாகும்.

இவ்வாறு பல சிறப்பம்சங்களுடன் பொன்போன்று மிளிரும் கண்கொள்ளாக்காட்சியைக் கொண்டுள்ள இவ் ஆலயத்தைப் போற்றி வணங்கும் அடியவர்களுக்கும் ஆலய நிர்வாகத்தினருக்கும் அனைத்து அடியவர்களுக்கும் ஆஞ்சநேயப் பெருமானின் அருளாசி கிடைக்க வேண்டி வாழ்த்துகின்றேன்.

பஞ்சமுக ஆஞ்சநேயரின் தேர்வடம் பிடிக்க ஓடோடி வாரீர்.!!

**Dr.T.Shethirabalan (MD)**
**ATLANTAHOSPITAL**
**No.54, Uduvil Road, Maruthanarmadam**
**077 371 5670**


L.R.M
லீலா அரிசி ஆலை
கே.கே.எஸ். வீதி,
ஆஞ்சநேய சுவாமி கோவில்
முன்பாக,
மருதனார்மடம். 077 718 7103

Hari Bol
Guest House
• Rooms Available • Wedding House
• A/C & Non A/C • Travel & Tourism
• Wifi • Luxury Family Rooms
• Parking • 24 Hrs Security
Tel: 077 914 4520, 021 321 2863
No.342, K.K.S Road, Maruthanarmadam, Chunnakam.

அனைத்துவிதமான ஆடைத் தெரிவுக்கும் நாடவேண்டிய இடம்
கீர்த்திகா
ரெக்ஸ்ரைல்ஸ்
& K.T Fashion
Boys & Baby Selection
பலாலி றோட், உரும்பிராய் சந்தி,
உரும்பிராய். 077 228 8245

N MOBILE
Dealers in Wholesale & Retail
Mobile Phone, Accessories & Repairing
No.11, (Up Stairs) New Market,
Hospital Road, Jaffna.
021 222 0875

Thiveya Cellular Center
No 382, K.K.S Road,
Maruthanarmadam,
Chunnagam.
T.P: 021 320 9851

Sri Ram Gym
ஸ்ரீ ராம் ஜிம்
TP:- 077 220 3077
ஸ்ரீராம் ஜிம் 19 வருடங்களாக ஆண்கள், பெண்கள்
K.K.S வீதி இணுவில், மருதனார்மடம்.

V.M.K JEWELLERY
என்றும் முதற்தர
நகைகளுக்கு
New V.M.K. ஜுவல்லறி
தங்கப்பவுண் நகை வியாபாரம்
No. 80/3, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
T.P:- 021 720 1117, 077 784 9369
V.M.K. ஜுவல்லறி, கண்டி வீதி,
சாவகச்சேரி.
021 227 1616

# கூட்டு எதிர்க்கட்சி வெட்கத்தை மறைக்க ஐ.தே.க. மீது குற்றம் சாட்டுகிறது-அஜித்

(கொழும்பு)

கூட்டு எதிர்க் கட்சியினர் வேட்பு மனு தயாரிக்கும் போது பேராசிரியர் ஜி.எல். பீரிஸிடம் ஆலோசனை பெறாமல், சட்டத்தரணிகளிடம் பெற்றிருந்தால் இவ்வாறு வேட்பு மனுக்கள் நிராகரிக்கப்பட்டிருக்காது என பிரதி அமைச்சர் அஜித் பி.பெரேரா தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் வேட்பு மனு தொடர்பில் முன் வைக்கப்படும் குற்றச்சாட்டு தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,



ஐ.தே.கவின் வேட்பு மனுக்களில் எந்தக் குறையும் இல்லை. கூட்டு எதிர்க்கட்சியின் வேட்பு மனுவில் காணப்படுவது போன்ற எந்தக் குறையும் எமது மனுவில் இருக்கவில்லை.

கைச்சாத்திட்ட திகதி இன்மை, கட்சியின் செயலாளருடைய ஒப்பம் இன்மை என்பன சிறிய தவறுகள் அல்ல.

கூட்டு எதிர்க்கட்சி தனது வெட்கத்தை மறைத்துக் கொள்ள இவற்றை சிறிய தவறுகளாக காட்ட முயற்சிக்கின்றது எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# ஐ.தே. கவின் வேட்பு மனுவில் கட்சியின் பெயருக்கு பதிலாக செயலாளரின் பெயர்

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் வேட்பு மனுவில் பாரிய தவறுகள் காணப்பட்ட போதிலும் அவை ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளதாகவும், தமது கட்சியின் சிறு தவறுகளுக்காக வேட்பு மனுக்கள் புறக்கணிக்கப்பட்டுள்ளதாகவும் கூட்டு எதிர்க்கட்சி குற்றஞ்சாட்டியுள்ளது.

பாராளுமன்ற உறுப்பினர் பியல் நிஷாந்த இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்துள்ளார்.

எமது வேட்பு மனுவிலும் சிறு தவறுகள் காணப்படுகின்றமையை ஏற்றுக் கொள்கின்றோம். இருப்பினும், ஐக்கிய தேசியக் கட்சியின் வேட்பு மனுவில் கட்சியின் பெயர் இருக்க வேண்டிய இடத்தில் பொதுச் செயலாளர் கபீர் ஹாஸிமின் பெயர் இடப்பட்டுள்ளதாகவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார். (இ-7)

# அணிமாறி அமைச்சரான ஸ்ரீயானி மீது தினேஷின் கட்சி சட்ட நடவடிக்கை

(கொழும்பு)

ஸ்ரீயானி விஜேவிக்ரமவுக்கு எதிராக தமது கட்சியின் சட்ட திட்டங்களுக்கு அமைவாக ஒழுக்காற்று நடவடிக்கை முன்னெடுக்கவுள்ளதாக மஹஜன எக்ஸத் பெரமுன கட்சியின் தலைவர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்தார்.

தமது கட்சியினருக்கு வேட்பு மனுவில் பெயர் வழங்குவதில் சிக்கல் இருந்தமை உண்மை தான். அதற்காக தமது எதிரியுடன் கூட்டுச் சேர்வதற்கு தமது கட்சியில் அவருக்கு வாக்களித்த மக்கள் விரும்புவதில்லை.

எதிர்வரும் தேர்தலில் அவருக்கு மக்கள் ஆதரவு இல்லை யென்பது தெரியவரும். கட்சியின் வாக்கினால் தெரிவான அவர், கட்சியிலுள்ள மக்களின் விருப்புக்கு எதிராக செயற்பட முடியாது என நேற்று முன்தினம் கொழும்பில் நடந்த ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையில் கூட்டு எதிர்க் கட்சியின் தலைவர் தினேஷ் குணவர்த்தன இவ்வாறு தெரிவித்தார். (இ-7)



# குப்பை பிரச்சினைக்கு தீர்வுகாண இம்மாதம் முதல் அதிரடி நடவடிக்கை

(கொழும்பு)

நாடு முழுவதுமுள்ள குப்பைப் பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கு இம்மாதம் முதல் அதிரடி நடவடிக்கைகள் முன்னெடுக்கப் போவதாகவும் இதற்கு அரசியல் கட்சிகளும், அமைப்புக்களும் தடையாக வரவேண்டாம் எனவும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்க வேண்டுகோள் விடுத்தார்.

கம்பஹாவில் நேற்று நடைபெற்ற புதிய பேருந்து தரிப்பு நிலைய திறப்பு நிகழ்வில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையில் அவர் இதனைத் தெரிவித்தார்.



நாம் இப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு முயற்சித்த சந்தர்ப்பங்கள் அனைத்திலும் அரசியல் கட்சிகள் தடையாகவே செயற்பட்டதாகவும், இதனாலேயே அம் முயற்சிகள் கைவிடப்பட்டதாகவும் சம்பிக்க குற்றம்சாட்டினார். (இ-7)

# ரஷ்யாவின் தடையினால் இலங்கை அரசு அதிர்ச்சி

## மொஸ்கோவுக்கு விரைகிறது உயர்மட்டக் குழு

(கொழும்பு)

இலங்கையிலிருந்து தேயிலை உள்ளிட்ட விவசாய விளை பொருட்களை இறக்குமதி செய்வதற்கு ரஷ்ய அரசாங்கம் தடை விதித்திருப்பது, இலங்கை அரசாங்கத்துக்கு அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

ரஷ்யாவுக்கு ஏற்றுமதி செய்யப்பட்ட தேயிலைப் பொதிக்குள் வண்டு இருந்தது கண்டுபிடிக்கப்பட்டதையடுத்து, இலங்கையிலிருந்து தேயிலை உள்ளிட்ட விவசாய விளைபொருட்களை இறக்குமதி செய்வதற்கு ரஷ்யா தற்காலிக கட்டுப்பாடு விதித்துள்ளது.

நாளை தொடக்கம் இந்த தடை நடைமுறைக்கு வரவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையின் தேயிலைச் சந்தையில் ஈரானுக்கு அடுத்த இரண்டாவது இடத்தில் ரஷ்யா உள்ளது. இலங்கையின் தேயிலை ஏற்றுமதியில் 11.3 வீதம் ரஷ்யாவுக்கே மேற்கொள்ளப்படுகிறது. 143 மில்லியன் டொலர் பெறுமதியான இலங்கை தேயிலையை ரஷ்யா இறக்குமதி செய்து வருகிறது.

இந்த நிலையில் ரஷ்யாவின் தற்காலிக தடை இலங்கைக்கு அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. இதையடுத்து, இந்தப் பிரச்சினை தொடர்பாக ரஷ்ய அரசாங்கத்துடன் பேச்சுக்களை நடத்துவதற்கு உயர் மட்டக் குழுவொன்றை மொஸ்கோவுக்கு இலங்கை அரசாங்கம் அனுப்பவுள்ளது.

இலங்கையின் பெருந் தோட்டத்துறை அமைச்சர் நவீன் திசநாயக்கவும், அடுத்த வாரம் ரஷ்யாவுக்குப் பயணமாகவுள்ளார். அதேவேளை, இந்தச் சம்பவம் தொடர்பாக விசாரணைகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (இ-7)

# ரஷ்யாவுக்கான தேயிலையிலிருந்த 'வண்டு' இலங்கை வண்டு இல்லை

(கொழும்பு)

இலங்கையில் இருந்து தேயிலை இறக்குமதியை கட்டுப்படுத்த ரஷ்யா எடுத்த தீர்மானம் தொடர்பில் கலந்துரையாட, பெருந் தோட்டத் துறை அமைச்சர் நவீன் திஸாநாயக்க ரஷ்யாவுக்கு செல்லவுள்ளார்.

இலங்கையில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட தேயிலையில் வண்டு ஒன்று இருந்தமையை அடுத்து ரஷ்யா தமது கட்டுப்பாட்டு தீர்மானத்தை அறிவித்திருந்தது.

எனினும் இது ஒரு பிரத்தியேக சம்பவம் என்று இலங்கையின் தேயிலை சபை தெரிவித்துள்ளது.

எனவே இது இலங்கையின் தேயிலை உற்பத்தி தரத்தில் மதிப்புக் குறைப்பை ஏற்படுத்தாது என்றும் சபை சுட்டிக்காட்டியுள்ளது.

இறக்குமதி தேயிலையில் கண்டுபிடிக்கப்பட்டதாக கூறப்படும் வண்டு அரிசி போன்ற பொருட்களில் இருந்தாலும் கூட அது தேயிலையுடன் இருந்திருக்க வாய்ப்பில்லை.

இந்நிலையில் அந்த வண்டு இலங்கையிலுள்ள வண்டு என்பதை விட தேயிலையை ஏற்றிச் சென்ற கப்பலில் இருந்த வண்டாக இருந்திருக்கலாம் என்றும் இலங்கை தேயிலை சபை தெரிவித்துள்ளது. (இ-7)

# மாணவர்கள் சீருடை விடயத்தில் மோசடி அதிபர்களுக்கு எதிராக கடும் நடவடிக்கை

## கல்வியமைச்சர் காரியவசம் பணிப்பு

(கொழும்பு)

பாடசாலை மாணவர்களுக்காக இலவசமாக வழங்கப்படும் சீருடை வவுச்சர்களை மாணவர்களிடம் கையளிக்காது அதன் பொருட்டு புடைவைகளை வழங்குதல் அல்லது வேறு தலையீடுகளை மேற்கொள்ளும் அதிபர்களுக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்குமாறு பணிக்கப்பட்டுள்ளது.

கல்வியமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் தமது அதிகாரிகளுக்கு நேற்று முன்தினம் இந்த அறிவுறுத்தலை விடுத்துள்ளார்.



அது தொடர்பாக வெளியாகியுள்ள சில செய்திகள் தொடர்பாக கவனம் செலுத்தியதன் அடிப்படையில் அமைச்சர் இந்த அறிவுறுத்தல்களை வழங்கியுள்ளதாக கல்வியமைச்சு தெரிவித்துள்ளது.

சீருடை வவுச்சர் சீட்டுக்களின் ஊடாக பாடசாலை மாணவர்கள் தமக்கு விருப்பமான விற்பனை நிலையத்தில் சீருடைகளை பெற்றுக் கொள்வதற்கான வசதிகளை பெற்றோர் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும்.

வர்த்தக நிலையங்களை விளம்பரப்படுத்தல், அங்கு கொள்வனவு செய்யுமாறு மாணவர்களை வலியுறுத்தல் போன்ற செயற்பாடுகளை மேற்கொள்வதற்கு பாடசாலை அதிபர்களுக்கு எந்தவித அதிகாரமும் இல்லை.

இவ்வாறான செயற்பாடுகளை மேற்கொள்ளும் அதிபர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும் என கல்வியமைச்சு சுட்டிக் காட்டியுள்ளது. (இ-7)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | கொடிகாமம் | சாவகச்சேரி | கிளிநொச்சி | மருதனார்மடம் |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 80 | 100 | 80 | 100 | 80 | 100 |
| உருளைக்கிழங்கு | 100 | 100 | 50 | 80 | 80 | 80 |
| பச்சைமிளகாய் | 400 | 250 | 300 | 350 | 400 | 400 |
| தக்காளி | 120 | 140 | 110 | 140 | 160 | 120 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 40 | 30 | 60 | 40 | 50 |
| கோவா | 100 | 150 | 80 | 140 | 160 | 120 |
| கரட் | 160 | 200 | 140 | 200 | 200 | 140 |
| பூசணி | 60 | 60 | 40 | 60 | 80 | 50 |
| புடோல் | 100 | 130 | 70 | 120 | 120 | 140 |
| வாழைக்காய் | 60 | 70 | 70 | 100 | 120 | 70 |
| சின்ன வெங்காயம் | 350 | 400 | 300 | 400 | 400 | 300 |
| பெரிய வெங்காயம் | 150 | 200 | 140 | 160 | 160 | 120 |
| பாகற்காய் | 300 | 400 | 250 | 280 | 400 | 300 |
| வெண்டிக்காய் | 120 | 100 | 100 | 120 | 120 | 120 |
| கருணைக் கிழங்கு | 60 | 100 | 50 | 80 | 80 | 50 |
| பயற்றங்காய் | 120 | 200 | 120 | 160 | 200 | 250 |
| லீக்ஸ் | 250 | 250 | 200 | 280 | 280 | 200 |
| பீற்றூட் | 200 | 250 | 140 | — | 200 | 140 |
| கறிமிளகாய் | 300 | 450 | 250 | 400 | 400 | 300 |
| முருங்கைக்காய் | 500 | — | 300 | 600 | 400 | — |
| போஞ்சி | 180 | 250 | 200 | 240 | 200 | 220 |
| கத்தரிதம்புள்ள | 80 | 50 | 80 | 100 | 80 | 100 |
| கீரை - 1பிடி | 50 | 50 | 40 | 80 | 50 | 40 |
| தேசிக்காய் | 80 | 40 | 40 | 80 | 80 | 50 |
| தேங்காய் (ஒன்று) | 100 | 100 | 70 | 65 | 75 | 100 |
| இராசவள்ளி | 400 | 400 | 250 | 450 | 300 | 500 |
| வெங்காயப்பூ | 400 | — | — | — | 240 | — |
| முள்ளங்கி | 120 | — | 70 | 120 | 120 | 100 |
| பொன்னாங்காணி | 40 | — | 30 | 60 | 40 | 40 |
| வல்லாரை | 20 | — | 10 | 20 | 20 | 30 |
| [illegible] | 80 | — | — | 100 | 100 | — |

# சங்கடம் போக்கும் இராம பக்தன் அனுமன்



## இன்று அனுமன் ஜெயந்தி

காத்தல் தொழில் புரியும் மகா விஷ்ணுவின் சிறிய திருவடிச் சேவகனாக விளங்குபவன் ஆஞ்சநேயர். சிவ பெருமானின் அம்சமாக, வாயு பகவான் திருவருள் வாயிலாக வானரர் குலத் தலைவன் கேசரி என்பவனுக்கும், அஞ்சனைக்கும் மகனாக மார்கழி மாதம், மூல நட்சத்திரத்தில் , அமாவாசை திதியில் ஆஞ்சநேயர் இவ் நிலவுலகில் அவதரித்தார். இவ் இனிய நன்நாள் இன்றாகும். சொல்லின் செல்வன் எனப்படும் அனுமன், ஆஞ்சநேயர், கேசரி நந்தன், அஞ்சனை மைந்தன், வாயு புத்திரன், இராம தூதன், சுந்தரன், மாருதி எனப் பல பெயர்களால் அழைக்கப்பட்டு வருகின்றான்.

இத்தகைய அனுமன், இராமபிரானின் மிகச் சிறந்த பக்தன், இராம நாமத்தை தன் திருவாயினால் எந்நேரமும் கூறிக் கெண்டிருப்பவர். வாயுவின் வேகம் பொருந்தியவன். ஆகாயத்தில் பறந்து திரிபவன், வானரர் குலத்தின் தன்னிகரற்றவன். என்றும் மரணமின்றி சிரஞ்சீவியாய் வாழ்ந்து வருபவன். இராமனுக்காக எண்ணற்ற சேவைகள் புரிந்தவர்.

சிறு வயதில் ஆஞ்சநேயர் ஆகாயத்தில் தோன்றிய சூரியனைப் பழம் எனக் கருதி அதனைப் பற்ற அதன் அருகில் பறந்து சென்றார். அப்போது சூரியனின் வெப்பத்தால் ஆஞ்சநேயர் தாக்கப்படுவார் எனக் கருதிய இந்திரன் தன் வச்சிராயுதத்தை ஏவினான். அது ஆஞ்சநேயரைத் தாக்கவே ஆஞ்சநேயர் மூர்ச்சை அடைந்து நிலத்தில் விழுந்தார். இதனால் அவரது தந்தை நீண்ட நேரமாகியும் தன் மகன் எழுந்திராதது கண்ட வாயுதேவன் தன் செயற்பாடுகளை நிறுத்திக் கொண்டான். இதனால் வாயுவின் துணையின்றி பூமியின் செயற்பாடுகள் பாதிக்கப்பட்டன. அப்போது தேவர்களின் வேண்டுகோளின் படி மும்மூர்த்திகளும் அங்கு தோன்றி ஆஞ்சநேயரை மூர்ச்சையில் இருந்து விடுவித்து அவன் என்றும் சிரஞ்சீவியாக வாழும் வரத்தை வழங்கினர். அத்தோடு தேவர்கள் அனைவரும் ஆஞ்சநேயருக்கு பற்பல வரங்களை அழித்தனர்.

இவ்வாறாக, சிறு வயதிலேயே சிறப்பினைப் பெற்ற அனுமன் சூரியதேவனிடம் கல்வி கற்க விரும்பினார். இதன்படி சூரியனும் அனுமனுக்கு குருவாக இருந்து கல்வி கற்றுக் கொடுத்தார். தனக்கு கல்வி போதித்த குருவாகிய சூரியனுக்கு குரு தட்சணையாக யாது தர வேண்டும்? எனக் கேட்க, அதற்கு சூரியன் என் மகனாகிய சுக்ரீவனுக்கு நல் மந்திரியாக இருந்து, அவனை வழிநடத்தி வர வேண்டும் என வேண்டினார். அதன்படி அனுமனும் தன் குருவின் விருப்பப்படி சுக்ரீவனுக்கு நல் அமைச்சனாக விளங்கி அவனை வழி நடத்தினார் என்பதை இராமாயணம் எடுத்துரைக்கின்றது.

இராமாயண காவியத்தில் முக்கியமான கதாபாத்திரமாக விளங்குபவர் அனுமனே. அனுமனின் சிறப்பைக் கூறுவதற்கு என்றே சுந்தரகாண்டம் எனத் தனி ஒரு பகுதியை கம்பர் வகுத்தார். சுந்தர காண்டமே இராமாயணத்திற்கு அழகு சேர்ப்பது. அத்தகு சுந்தரகாண்டத்திற்கு அழகு சேர்ப்பவன் அனு மனேயாவான். இராமபிரான் மனைவி சீதை சிறை வைக்கப்பட்டிருக்கும் இலங்கை நோக்கி செல்வதற்காக நூறு யோசனை தூரம் உள்ள கட லைக் கடந்து இலங்கையைச் சென்றடைந்தான். அங்கு சீதை இருக்கும் அசோக வனம் அடைந்து சீதையைக் கண்டு அவளிடம் இராமன் உரைத்த செய்தி, சீதையின் மனத் துயரம் நீக்கி பின் தன்னை எதிர்த்த இராவணன் மகன் அக்சயக்குமாரனைக் கொன்று, இராவணன் சபையிலே இராமதூதனா வீர வசனம் உரைத்து, இலங்கையை எரித்து, இராமபிரானிடம் திரும்பி வந்து சீதை இருக்கும் இடம் அறிந்த செய்தி உரைத்து இராமன் துயரத்தை நீக்கியருளியவன். பின் இராமபிரான் வானர சேனையுடன் கடல் கடந்து இலங்கை செல்வதற்காக பாலம் அமைக்கும் பணியை செவ்வனே செய்து முடித்தபெருமைஅனுமனையே சாரும்.

மற்றொரு சமயம், போர்க்களத்தில் இராவணன் மகன் இந்திரஜித்தின் சக்தி ஆயுதத்தால் தாக்குண்டு, மூர்ச்சடைந்த இராமன் இள வல் இலக்குவனன் உயிர் காப்பதற்காக சஞ்சீவி எனும் மூலிகை நிறைந்த பர்வதத்தினை தன் கையிலே சுமந்து வந்து இலக்குவனன் உயிரைக் காத்தவனும் இந்த அனுமனே. இதனால் சஞ்சீவி மலை சுமந்த தெய்வம் எனவும் போற்றப்படுகின்றான்.

இவ்வாறு இராமாயணத்தில் பொலிவு பெறும் அனுமன் இராமபிரானின் மிகச் சிறந்த பக்தனாவார். இராம நாமத்தை எந்நேரமும் உரைத்துக் கொண்டிருப்பவர். அந்த இராமநாமத்தின் துணையினால் கடினமான பல செயல்களையும் எளிதில் செய்து முடித்தவர். இராம நாமம் மற்றும் இராமாயணம் எங்கெல்லாம் உரைக்கப்படுகின்றதோ அவ்விடத்தில் ஆஞ்சநேயர் வந்திருப்பார் எனக் கூறுவர். தன் மார்பினைப் பிளந்து தன் இதயத்தில் இராமர், சீதை வீற்றிருப்பதை உலகத்தவர்க்கு காண்பித்தவர். இராமபிரான் திருவடி பணிந்து அவருக்கு சேவை புரிபவர். இராமரின் பக்தர்களை என்றும் காத்தருள்பவர். இன்றும் மரணமின்றி வாழும் சிரஞ்சீவிகள் ஏழு பேரில் ஒருவராக விளங்கும் சிறப்பினைப் பெறுபவர். இதன் காரணமாக இராமாயணத்தின் பின் வந்த மகாபாரதத்திலும் இடம்பெற்றிருப்பவர் இந்த ஆஞ்சநேயர்.

மகாபாரதத்தில் வாயுவின் புதல்வனாக வீமன் விளங்குகின்றான். அவ்வகையில் அனுமன் வீமனுக்கு அண்ணனாவார். ஒருமுறை வீமன் ஒருவிதமான வாசனை மலர்களைத் தேடி காட்டு வழியே செல்லும் போது, வழியில் ஒரு வயோதிபமடைந்த குரங்கு அமர்ந்திருந்தது. அது அனுமன் என்பதை வீமன் அறியவில்லை. தான் செல்லும் வழியில் குறுக்கிட்ட அக்குரங்கினை நோக்கி தன் வழியை விட்டு விலகுமாறு வீமன் கூறினான். அதற்கு அனுமன் என் வாலை, விலக்கி விட்டு உன் பயணத்தை தொடரலாம் எனக் கூறினார். வீமனும் தன் வலிமையால் அவ் வாலை விலக்கி விடலாம் எனக் கருதிய வீமன் தன் கையால் பலவாறு முயற்சித்தும் அனுமனின் வாலை சிறிதும் அசைக்க முடியவில்லை. அப்போது அனுமன் வீமனிடம் தன்னை யாரென உரைக்கவே தன் அண்ணனே அனுமன் என்பதை அறிந்த வீமன் அனுமன் பாதங்களில் வீழ்ந்து வணங்கினான். இது மட்டுமன்றி மகாபாரதப் போரில் அர்ச்சுனனின் தேரில் கொடியாக விளங்கியவரும் அனு மனேயாவார்.

இவ்வாறான ஆஞ்சநேயர் இன்றும் விஷ்ணு ஆலயங்களில் ஓர் பரிவார தெய்வமாக இடம்பெறுகின்றார். மேலும் ஆஞ்ச நேயருக்கு என்று தனியான ஆலயங்களும் இன்று எழுப்பப்பட்டுள்ளன. நம் வீட்டிலும் ஆஞ்சநேயரை தாரா ளமாக வைத்து வழிபாடியற்றலாம். ஆஞ்சநேயரின் வால் மிகவும் சிறப்பு வாய்தது. பார்வதி தேவியின் அம்சமாக அந்த வால் விளங்குவதாக புராணங்கள் பரிந்துரைக்கின்றன. ஆஞ்சநேயருக்கு அழகு சேர்ப்பதும், வலிமை வாய்ந்ததும் அதுவே. இராவணன் சபையில் அந்த வாலின் துணை கொண்டே தான் இருப்பதற்குப் பெரிய ஆசனம் அமைத்தார். மேலும் அந்த வாலில் வைக்கப்பட்ட தீயினாலேயே இலங்கையை எரித்துச் சாம்பலாக்கினார். இத்தகைய சிறப்புப் பொருந்திய வாலில் குங்குமப் பொட்டு வைத்து வழிபடுவதையும் இன்று காணலாம். இதற்குக் காரணம் பெண்களின் திருமணத் தடை நீங்கவும், நாம் விரும்புபவை நிறைவேறுவதற்குமாகும், நாம் தொடங்கும் காரியத்தை விநாயகர் ஆரம்பிப்பவர் என்றால் அக்காரியத்தை முடித்து வைப்பவர் ஆஞ்சநேயர்.

ஆஞ்சநேயரை அர்ச்சிப்பதற்கும், வழிபடுவ்தற்கும், வெற்றிலை மாலை,வடை மாலை, துளசி, பழங்கள், நெய், வெண்ணெய் போன்றன சிறப்புக்குரியனவாகும். இவை அனுமனுக்கு மிகவும் பிடித்தவையுமாகும். மேலும் ஓம் ஸ்ரீராமஜெயம் எழுதி மாலையாகவும் சாற்றிவரலாம். ஆஞ்சநேயரை எல்லா நாட்களிலும் வழி பாடியற்றலாம். வியாழன், சனி போன்ற தினங்கள் அவ் வழிபாட்டிற்கு சிறப்பு வாய்ந்தவையாகும்.

இராமநாமம் உரைத்தாலே அந்த ஆஞ்சநேயன் திருவருளை எம்மால் குறைவின்றிப் பெற முடியும். இத்தகைய அஞ்சனை நந்தன் ஆஞ்சநேயர் சிறுவர் முதல்பெரியோர்வரை அனைவரது விருப்பத்துக் குரியவராக விளங்குகின்றார். எனவே இராமநாம மகிமையை உலகறியச் செய்தவனும் தடை தகர்க்கும் வாயுவின் மைந்தனும், பஞ்ச முகங்களை படைத்த பஞ்சமுக ஆஞ்சநேயனாகவும் விளங்குகின்ற அனுமந்தனைவழிபாடியற்றி நல்வாழ்வு பெறுவோமாக.

இரா.நிஷாந்தன்
இராமநாதபுரம்.

---

### அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப்

# இஸ்ரேலின் தலைநகராக ஜெருசலேமை அறிவித்தமை குறித்து இலங்கை அதிருப்தி

(கொழும்பு)

இஸ்ரேலின் தலைநகராக ஜெருசலேமை அறிவித்தமையினால் மத்திய கிழக்கு நாடுகளின் அமைதி நடவடிக்கைகளுக்கு பாதிப்பு ஏற்படலாம் என அரசாங்கம் அமெரிக்காவிற்கு அறிவித்துள்ளது.

இது குறித்த அறிவிப்பை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் அதுல் கெசாப்பை அழைத்து உத்தியோக பூர்வமாக விடுத்துள்ளார்.

அலரிமாளிகையில் இந்த சந்திப்பு இடம்பெற்றது. மத்திய கிழக்கு நாடுகளின் அமைதி தொடர்பில் இலங்கை கரிசனையுடன் உள்ளது. எனவே இஸ்ரேலின் தலைநகராக ஜெருசலேமை அறிவித்துள்ளமையின் ஊடாக அந்த நாடுகளின் அமைதிக்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளது என்று பிரதமர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஜெருசலேமை இஸ்ரேலின் தலைநகராக அங்கீகரிக்கும் அறிவிப்பை, அமெரிக்க ஜனாதிபதி டொனல்ட் ட்ரம்ப் அண்மையில் வெளியிட்டார். இதனையடுத்து இலங்கை உள்ளிட்ட உலகளாவிய ரீதியில் முஸ்லிம்கள் அதிருப்தியை வெளியிட்டு போராட்டங்களை முன்னெடுத்தனர்.

சர்ச்சைக்குரிய ஜெருசலேம் நகரை இஸ்ரேலின் தலைநகராக அங்கீகரிக்கும் அறிவிப்பை அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் வெளியிட்டதுடன் ஜெருசலேம் நகரில் அமெரிக்காவின் புதிய தூதரகம் 2 ஆண்டுகளுக்குள் அமைக்கப்படும் எனவும் அறிவித்தார். இதன் பின்னர் நிலைமை மோசமடைந்ததுடன் ஐ.நா. பாதுகாப்புச் சபை அவசரமாகக் கூடி இந்த விடயம் குறித்து ஆராய்ந்தது.

இந்நிலையில் இலங்கை தனது நிலைப்பாட்டை அமெரிக்காவிற்கு அறிவித்துள்ளது. மத்திய கிழக்கு நாடுகளின் அமைதிக்கு சவாலானதாகவே இஸ்ரேலின் தலைநகராக ஜெருசலேமை அறிவித்தமை அமைந்துள்ளது. எனவே இந்த விடயத்தில் மீண்டும் கவனம் செலுத்த வேண்டும் என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கோரியுள்ளார். (இ-7)

---

# தேர்தல் காலத்தில் பொருட்களை விநியோகம் செய்யக்கூடாது

(கொழும்பு)

தேர்தல் காலத்தில் பொருட்களை விநியோகம் செய்யக்கூடாது என தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் மகிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

அத்துடன், உள்ளூராட்சி மன்றத் தேர்தல் அறிவிக்கப்பட்டுள்ள நிலையில் தேர்தலில் போட்டியிடும் கட்சிகள் மற்றும் வேட்பாளர்கள் பிரசார நோக்கில் எவ்வித நிகழ்ச்சிகளையும் நடத்தக்கூடாது எனவும் அவர் தெரிவித்தார்.

ஏற்கனவே திட்டமிடப்பட்டு அத்தியாவசியப் பொருட்கள் ஏதேனும் வழங்கப்படவிருந்தால் அதனை அரசியல் தலையீடு இன்றி மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் எனவும் தேர்தல் சுயாதீனமானதும் நீதியானதுமான முறையில் நடத்தப்பட வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

மேலும், வேட்பாளர்கள் அல்லது கட்சிகள் பாதிக்கப்படும் வகையில் அரச சொத்துக்கள் பயன்படுத்தப்படுவது ஏற்றுக்கொள்ளப்பட முடியாது எனவும் தேர்தல் ஆணைக் குழுவினால் வெளியிடப்பட்டுள்ள சுற்றுநிருபம் மற்றும் வழி காட்டல்களை அனைத்து அதிகாரிகளும் பின்பற்ற வேண்டுமெனவும் அவர் தெரிவித்துள்ளார். (இ-7)

# வவுனியா புதிய பேருந்து நிலையத்திலிருந்து நத்தாரன்று பேருந்து சேவைகள் ஆரம்பம்

(குருமன்காடு)

நத்தாரன்று வவுனியா புதிய பேருந்து நிலையத்தில் இருந்து அனைத்து பேருந்து சேவைகளும் நடைபெறும் என வவுனியா மாவட்ட தனியார் பேருந்து உரிமையாளர் சங்கத்தலைவர் எஸ்.ரி. இராஜேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

வவுனியா புதிய பேருந்து நிலையம் கடந்த 2017 ஜனவரி 16 ஆம் திகதி திறந்து வைக்கப்பட்டதன் பின்னர் பேருந்து சேவைகள் எவையும் அங்கிருந்து நடைபெறாத நிலையில் பயன்பாடின்றி காணப்பட்டு வருகின்றது.

இந் நிலையில் வடமாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரனுடன் வடக்கு மாகாணசபை கட்டடத் தொகுதியில் புதிய பேருந்து நிலையம் தொடர்பாக நடைபெற்ற கலந்துரையாடலின் பின்னர் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

வவுனியா பேருந்து நிலையமானது பயன்பாடின்றி காணப்படுவது தொடர்பாக நாம் பல தடவைகள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் அரசியல்வாதிகளுக்கும் சுட்டிக்காட்டியிருந்தோம். எனினும் அங்கிருந்து சேவைகளை மேற்கொள்வதற்கு இலங்கை போக்குவரத்துச் சபை முன்வராத நிலையில் எம்மாலும் சேவையை அங்கிருந்து செயற்படுத்த முடியாதிருந்தது.

இந் நிலையில் வடக்கு மாகாண முதலமைச்சரும் போக்குவரத்து அமைச்சருமான சி.வி.விக்னேஸ்வரனைச் சந்தித்து கலந்துரையாடியிருந்தோம்.

இதன்போது தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் தலைவர், வடக்கு மாகாண போக்குவரத்து அதிகார சபையின் தலைவர் மற்றும் செயலாளர், வடக்கு மாகாண தனியார் பேருந்து உரிமையாளர் சங்கங்களின் ஒன்றியத்தினர், ஐந்து மாவட்ட தனியார் பேருந்து உரிமையாளர் சங்கப் பிரதிநிதிகள் இலங்கை போக்குவரத்து சபையின் 7 சாலை முகாமையாளர்கள் இப் பேச்சுக்களில் ஈடுபட்டிருந்தோம்.

இதன்போது இறுதி முடிவாக அனைவரும் இணைந்து எதிர்வரும் 25 ஆம் திகதி நத்தார் தினத்தன்று புதிய பேருந்து நிலையத்தில் இருந்து சேவைகளை ஆரம்பிப்பது என முடிவு எட்டப்பட்டுள்ளது என தெரிவித்தார். (2-250)

# வன்னி விளாங்குளத்தில் இயந்திரம் மூலம் நெல் நடுகை

(பனிக்கன்குளம்)



மாந்தை கிழக்கு பாலிநகர் விவசாய போதனாசிரியர் கீ.கீர்தியன் தலைமையில் நேற்று முன்தினம் வன்னிவிளாங்குளம் விவசாய கிராமத்தில் இயந்திரம் மூலம் நெல் நாட்டும் விழா நடைபெற்றுள்ளது.

நெல் பயிர்களை நெல் நாட்டும் இயந்திரம் ஒன்றின் ஊடாக விவசாயிகள் நாட்டுவதன் மூலம் விளைச்சலை அதிகரித்துக்கொள்ளலாம் என்ற விவசாய உத்தியோகத்தர்களின் ஆலோசனைக்கு அமைவாக பாலிநகர் விவசாயக் கிராமத்தில் முதல் முறையாக நெல் நாட்டும் இயந்திரம் ஒன்றின் ஊடாக நெல் நாட்டி வைக்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினராக கமநல உத்தியோகத்தர் சுஜீவறூபன் மற்றும் கமநல அபிவிருத்தி திணைக்களம், விவசாயத் திணைக்கள ஊழியர்கள், விவசாயிகள் என பெருமளவானவர்கள் கலந்து கொண்டிருந்தனர். (2-281)

# குற்றச் செயல்களில் ஈடுபட்ட ஏழு நபர்களுக்கு தண்டப்பணம் விதிப்பு

(மல்லாவி )

மல்லாவி பொலிஸ் நிலையப் பிரிவில் சட்டவிரோதமான மூன்று குற்றச் செயல்களில் ஈடுபட்ட ஏழு சந்தேக நபர்களை கைது செய்து முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றத்தின் நீதிபதி எம். எஸ். எம்.சம்சுதீன் முன்னிலையில் முற்படுத்திய போது சந்தேக நபர்கள் தமது குற்றத்தை நீதிபதி முன்பாக ஏற்றுக் கொண்டதை அடுத்து ஒரு இலட்சத்து 40 ஆயிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டதுடன் நீதிபதியினால் சந்தேக நபர்களுக்கு கடுமையான எச்சரிக்கையும் விடுக்கப்பட்டுள்ளதாக மல்லாவி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஜ.பி.இராஜநாயக்கா தெரிவித்துள்ளார்.

மேற்படி வழக்குகள் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றத்தில் நடைபெற்றது.


இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாது. துணுக்காய் பகுதியில் இரு வெவ்வேறு சம்பவங்களின் போது விற்பனை செய்யும் நோக்கோடு தமது உடைமையில் கசிப்பை வைத்திருந்த 6 சந்தேக நபர்களைக் கைது செய்து நீதிமன்றத்தில் முற்படுத்திய போது சந்தேக நபர்கள் தமது குற்றத்தை நீதிபதி முன்பாக ஏற்றுக் கொண்டதை அடுத்து பிரதான சந்தேக நபர்கள் இரண்டு பேருக்கு தலா 50 ஆயிரம் ரூபா வீதம் மொத்தம் ஒரு இலட்சம் ரூபாவும், நான்கு சந்தேக நபர்களுக்கு தலா 5 ஆயிரம் ரூபா வீதம் மொத்தம் 20 ஆயிரம் ரூபாவும் தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, தேறாங்கண்டல் காட்டுப்பகுதியில் அரசாங்கத்தினால் பாதுகாக்கப்பட்டு வரும் அரியவகை காட்டு விலங்குகளை இறைச்சிக்காக தொடர்ந்து வேட்டையாடி வந்த நபர் ஒருவரை உள்ளூரில் தயாரிக்கப்பட்ட துப்பாக்கியுடன் கிளிநொச்சி/ முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களுக்கான பிரதிப் பொலிஸ்மா அதிபரின் கீழ் இயங்கி வரும் போதைப் பொருள் மற்றும் குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்தும் படைப் பிரிவுப் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு மல்லாவி பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டிருந்த நிலையில், நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்ட போது, சந்தேக நபர் தனது குற்றத்தை ஏற்றுக் கொண்டதை அடுத்து 20 ஆயிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளது.

மேற்படி குற்றவாளிகளுக்கு எதிராக மீண்டும் ஒரு முறை நீதிமன்றத்தில் குற்றச் செயல்களில் ஈடுபட்டதாக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டால் அதியுச்ச தண்டப்பணம் விதிக்கப்படுவதுடன், சிறைத் தண்டனையும் அனுபவிக்க வேண்டி வரும் என நீதிபதியினால் எச்சரிக்கையும் செய்யப்பட்டுள்ளதாக மல்லாவி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஜ. பி.இராஜநாயக்கா தெரிவித்துள்ளார். (2-15)

# ஐயாயிரம் காட்டு காயாத்தடிகளை ஏற்றிப் பயணித்த பாரவூர்தி சிக்கியது

(மல்லாவி )



தருமபுரம் பொலிஸ் நிலையப் பிரிவில் பரந்தன் - முல்லைத்தீவு (ஏ-35) வீதியில் உள்ள புளியம்பொக்கணைக்கு அண்மையாக பார ஊர்தியில் கடத்திச் செல்லப்பட்ட 5 ஆயிரம் காட்டுக் காயாத் தடிகளையும், அதனை ஏற்றிப் பயணித்த பார ஊர்தியையும் கைப்பற்றியுள்ளதுடன் சந்தேகத்தின் பேரில் அதன் சாரதியும் அதன் நடத்துநரும் கைது செய்யப்பட்டுள்ளதாக கிளிநொச்சி/முல்லைத் தீவு ஆகிய மாவட்டங்களுக்கான பிரதிப் பொலிஸ்மா அதிபரின் அலுவலகத் தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் நடைபெற்றுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது, கிளிநொச்சி/முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களுக்கான பிரதிப் பொலிஸ்மா அதிபர் மகேஷ் வெலிகன்னவின் விசேட உத்தரவுக்கு அமைய தருமபுரம் பொலிஸ் நிலையப் பிரிவில் குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்தும் வகையில் விசேட ஊர்சுற்றுக் காவல் கடமையில் ஈடுபட்டிருந்த கிளிநொச்சி/முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களுக்கான போதைப் பொருள் தடுப்பு மற்றும் குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்தும் படைப் பிரிவுப் பொலிஸ் அணியினர் பரந்தன் - முல்லைத்தீவு வீதியில் புளியம் பொக்கணைக்கு அண்மையாக 5 ஆயிரம் காயாத்தடிகளை உடையார் கட்டு காட்டுப் பகுதியில் இருந்து யாழ்ப்பாணத்திற்கு ஏற்றிப் பயணித்த பார ஊர்தியை தடுத்து நிறுத்தி சோதனையிட்டுள்ளனர்.

இதன் போது, ஆயிரம் காயாத் தடிகளுக்கு அனுமதி பெறப்பட்ட நிலையில் 5 ஆயிரம் காயாத் தடிகளை ஏற்றிப் பயணித்தமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு கைப்பற்றப்பட்டுள்ள தடயப் பொருட்களையும் கைதான சந்தேக நபர்களையும் தருமபுரம் பொலிஸ் நிலையத்தில் மேலதிக விசாரணைகளுக்காகவும், அதன் பின்னரான நீதிமன்ற நடவடிக்கைகளுக்குமாக ஒப்படைத்துள்ளதாக கிளிநொச்சி/ முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களுக்கான பிரதிப் பொலிஸ்மா அதிபரின் அலுவலகத் தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-15)



# இலங்கை தமிழரசுக்கட்சி கட்டுப்பணம்



(பனிக்கன்குளம்)

எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் மன்னார் மாவட்டத்தில் போட்டியிடுவதற்காக தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு சார்பாக இலங்கை தமிழரசுக்கட்சி நேற்று முன்தினம் பிற்பகல் 2.30 மணியளவில் மன்னார் தேர்தல் திணைக்களத்தில் கட்டுப்பணத்தை செலுத்தியுள்ளது.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் மன்னார் மாவட்ட முகவராக நியமிக்கப்பட்டுள்ள பாராளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் தலைமையில் கட்டுப்பணம் செலுத்தப்பட்டுள்ளது.

மன்னார் நகர சபை, மன்னார் பிரதேச சபை, மாந்தை மேற்கு பிரதேச சபை, நானாட்டான் பிரதேச சபை, முசலி பிரதேச சபை ஆகிய 5 உள்ளூராட்சி மன்றங்களுக்குமான கட்டுப்பணம் செலுத்தப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (2-281)

# மோ.சைக்கிள் - துவிச்சக்கரவண்டி மோதுண்டு விபத்து; மூவர் படுகாயம்

(மல்லாவி )

வவுனியா பொலிஸ் நிலையப்பிரிவில் உள்ள வேப்பங்குளம் ஐந்தாவது வீதிக்கு அருகாமையில் மோட்டார் சைக்கிள் ஒன்றும் துவிச்சக்கர வண்டி ஒன்றும் மோதுண்ட விபத்துச் சம்பவத்தில் மூன்று பேர் படுகாயமடைந்த நிலையில் மீட்கப்பட்டு வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக வவுனியா பொலிஸ் நிலையத் தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் நேற்று சனிக்கிழமை காலை ஏழு மணியளவில்நடைபெற்றது. இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது, மன்னார் வீதியூடாக வவுனியா நோக்கி துவிச்சக்கர வண்டியில் பயணித்துக் கொண்டிருந்த வயோதிபர் மீது, அதே வீதி வழியாக வவுனியா நோக்கி மோட்டார் சைக்கிளில் குடும்பப் பெண் ஒருவர் பயணித்த நிலையில், மோட்டார் சைக்கிள் துவிச்சக்கர வண்டி மீது மோதுண்டு விபத்துக்குள்ளானது.

இந்த விபத்துச் சம்பவத்தின் போது, துவிச்சக்கரவண்டியில் பயணித்த67 வயதுடையவயோதிபரும் மற்றும் மோட்டார் சைக்கிளில் பயணித்த 38 வயதுடைய குடும்பப் பெண் ஒருவரும் அவரது 5 வயதுடைய மகளும் படுகாயமடைந்த நிலையில்வீதியால்சென்ற பொதுமக்களினால் மீட்கப்பட்டு வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் தகவல் கிடைத்து சம்பவ இடத்துக்குச் சென்ற பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளதுடன் விபத்துக்குள்ளான மோட்டார் சைக்கிள் மற்றும் துவிச்சக்கர வண்டிகளை பொலிஸ்நிலையத்திற்கு எடுத்துச்சென்றுள்ளனர். (2-15)

# வெள்ளம் வடிந்தோடும் வாய்க்கால்கள் துப்புரவு



(கண்டாவளை)

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் அனர்த்தத்தைக்குறைக்கும் வகையில் வெள்ளவாய்க்கால்கள் துப்புரவு செய்யப்பட்டு வருகின்றன.

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு பிரதேச சபைக்குட்பட்ட புதுக்குடியிருப்பு நகரத்தில் சீரான வடிகால் அமைப்புக்கள் இன்மை மற்றும் வீதியின் இரு மருங்கிலும் வடிகால்களுக்காக ஒதுக்கப்பட்ட பகுதிகள் அத்துமீறி அபகரிக்கப்பட்டமை என்பவற்றால் வடிகால் கட்டமைப்பு சீரழிந்து மழை காலங்களில் வெள்ளநீர் வடிந்தோடாது ஆங்காங்கே தேங்கிக் காணப்படுவதுடன், வர்த்தக நிலையங்களுக்குள்ளும் வெள்ளநீர் உட்புகுகின்றன.

இதனையடுத்து புதுக்குடியிருப்புப் பிரதேச சபை, புதுக்குடியிருப்பு பிரதேச செயலகம் என்பன இணைந்து அனர்த்தக்குறைப்பு வேலைத்திட்டத்தின் கீழ் குறித்த வேலைகள் முன்னெடுக்கப்பட்டு நீர் வடிந்தோடும் வெள்ள வாய்க்கால்கள் சீர் செய்யப்பட்டு வருகின்றன. (2-315)

இரக்கம் காட்டுங்கள். ஆனால், ஏமாந்து போய்விடாதீர்கள்! - மத்யூ கிரீன்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## ஈழத் தமிழ் மக்களும் தமிழ்க் கடவுளும் ஒன்றுதான்

*யாதும் ஊரே யாவரும் கேளிர்* என்று கூறிய புலவன் பாடலின் அடியில் கணியன் பூங்குன்றனார் என்று குறிப்பிட்டாராம்.

இதுபோலவே *ஒன்றே குலம் ஒருவனே தேவன்* என்று கூறிக்கொண்டாலும் சமயம் சார்ந்து, சமய அனுட்டான முறை சார்ந்து, கடவுள்களும் வழிபாட்டு முறைமைகளும் சமய வாழ்வியல்களும் வேறுபட்டே காணப்படுகின்றன.

சைவத்தின் முழுமுதற் கடவுளாகிய சிவப்பரம்பொருள் தன் நடராஜ வடிவத்தில் எந்த அழித்தலையும் செய்யவில்லை. இதற்குக் காரணம் நடராஜர் வடிவம் இந்தப் பிரபஞ்சத்தின் இயங்கு நிலைக்கானது.

பிரபஞ்சத்தை இயக்குகின்ற வடிவம் தாங்கி நிற்பவன் கொல்லுதல் ஆகாது எனும் பொருள் நிலை கருதியே சிவப்பரம்பொருள் தன் வடிவத்தினின்று உடல் அழித்தலைச் செய்யவில்லை.

சூரபன்மனை அழிக்க வேண்டும் எனத் தேவர்கள் இரஞ்சுகின்றனர். தேவர் குறை தீர்க்க சிவன் தன் நெற்றிக் கண்ணினின்று ஆறு பொறிகளை வரவழைத்து ஆறுமுகக் கடவுளை உற்பவம் ஆக்குகின்றார்.

இப்போது சூரனை சங்காரம் செய்யும் பொறுப்பு முருகனுடையதாகின்றது. போர் தொடங்குகிறது. சூரசங்காரத்துக்காக அவதரிக்கப்பட்ட முருகன், தன் வேற் சக்தி கொண்டு எடுத்த எடுப்பிலேயே சூரனை வதம் செய்திருக்க வேண்டும்.

ஆனால் தமிழ்த் திரைப்படங்கள் போன்று வில்லன் வாழ்வதற்குக் கதாநாயகன் பல சந்தர்ப்பங்கள் கொடுக்கும் காட்சி சூரசங்காரத்திலும் காணப்படுகின்றது.

முருகன் தன் திருப்பெரு வடிவத்தைக் காட்டுகிறான். திருப்பெருவடிவம் கண்ட சூரன் முருனைத் தொழுதேத்துகிறான்.

அட! முருகனின் திருப்பெரு வடிவம் கண்ட மாத்திரத்தில் சூரன் திருந்திவிட்டான் என்றால், அதுதான் இல்லை.

மீண்டும் போர் தொடுக்கிறான். அட! சூரா நீ திருந்த மாட்டாய் என்று சூரனைக் கொல்ல வேண்டிய முருகன்; சூரனை அடக்கி, மயிலாகவும் சேவலாகவும் ஆக்கிக் கொள்கிறான். தமிழ்க் கடவுள் முருகனின் இந்த விட்டுக் கொடுப்பும் இரக்கத் தன்மையும் அவனைத் தலைவனாகக் கொண்ட தமிழ் மக்களிடமும் இருக்கவே செய்கிறது.

ஆம், எவ்வளவுதான் தமிழ் அரசியல்வாதிகள் தமிழ் மக்களை ஏமாற்றினாலும் சரி, இந்த முறை மட்டும் அவர்களுக்கு வாக்களிப்போம் என்று நினைப்பது,

என்ன சொன்னாலும் அதனை அப்படியே நம்பி விடுவது, ஆய்ந்தறிந்து உண்மையைக் கண்டறிய முயற்சிப்பதில்லை, அரசியல்வாதி சொல்லிவிட்டால்-ஊடகத்தில் வெளிவந்துவிட்டால், அதுவே உண்மை என்று நம்புகின்ற பலயீனம் என்று நம்மை விட்டு நீங்குகிறதோ அன்றுதான் தமிழினத்துக்கு விடிவு கிடைக்கும்.

ஆனால் மீண்டும் மீண்டும் ஒரே தவறைச் செய்கின்ற குறைபாடு எங்கள் குருதியோடு கலந்துவிட்டது.

ஆம், முருகன் போல திருப்பெரு வடிவத்தைக் காட்டுவது பின்னர் சூரனைக் கொல்லாமல் அவனுக்கு ஏதோவொரு வகையில் சந்தர்ப்பம் கொடுத்து உயர்ந்த இடத்தில் வைத்திருப்பது என்ற தவறுகளை தமிழ் மக்களும் செய்து கொண்டேயிருக்கின்றனர்.

என்றைக்கு உரிய தண்டனை வழங்க தமிழ் மக்கள் தயாராகின்றனரோ அன்றைக்குத்தான் தமிழ் அரசியல்வாதிகள் தம்மை திருத்திக் கொள்ளுவர்.

தமிழ்க் கடவுள்போல தமிழ்மக்களும் இருந்தால் அதர்மவாதிகளும் உயர்ந்த இடத்தில் தான் இருப்பர்.

## நாடுமுழுவதும் 30,000 போலி வைத்தியர்கள்

(கொழும்பு)

நாடு முழுவதும் 30 ஆயிரம் போலி வைத்தியர்கள் இருப்பதாகவும் இது தொடர்பில் பல்வேறு அமைப்புக்களின் ஊடாக தகவல் கிடைத்துள்ளதாகவும் சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இவ்வாறு செயற்படுவோரைக் கைது செய்வதற்கு பொலிஸ் திணைக்களத்தின் உதவியை நாடவுள்ளதாகவும் சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

வைத்தியர்கள், தனியார் வைத்திய நிலையங்களை நடத்துவார்களேயானால் அவை, பதிவு செய்யப்பட வேண்டியது கட்டாயமாகும்.

எனினும் பதிவு செய்யப்படாத வைத்திய நிலையங்களிலேயே போலி வைத்தியர்கள் பெரும்பாலும் இயங்கி வருவதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (இ-7)

## மின்னுற்பத்தி நிலையங்கள் ஸ்தாபிப்பு

நுரைச்சோலை மற்றும் சம்பூர் ஆகிய பிரதேசங்களில் பாரியளவிலான இரண்டு நிலக்கரி மின்னுற்பத்தி நிலையங்களை அமைப்பதற்கு மின்சக்தி மற்றும் மாற்றுசக்தி வலுவூட்டல் அமைச்சு திட்டமிட்டுள்ளது.

இதன்படி அது குறித்த அமைச்சரவை அனுமதியை பெற்றுக்கொள்வதற்காக அமைச்சர் ராஜித சேனாரத்னவினால் அமைச்சரவை பத்திரம் ஒன்று அமைச்சரவையிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

## சிதைவடைந்த நாணயத்தாள்களை மாற்றிக்கொள்ளச் சந்தர்ப்பம்

(கொழும்பு)

சிதைவடைந்த நாணயத்தாள்களை பரிமாற்றிக்கொள்ள சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது. எதிர்வரும் 31 ஆம் திகதிக்கு முன்னதாக அருகாமையில இருக்கும் வணிக வங்கிக்கு சென்று சிதைவடைந்த, கிழிந்த நாணயத்தாள்களை கொடுத்து விட்டு புதிய தாளகளைப் பெற்றுக்கொள்ள சந்தர்ப்பம்வழங்கப்பட்டுள்ளது. (இ-7)

## ஐ.நா.பிரதிநிதிகள்மீது கப்டன் தசநாயக்கவின் மகள் மஞ்சரி விசனம்

(கொழும்பு)

எனது தந்தையான கப்டன் கே.பி. தசநாயக்கவை அநீதியான முறையில் கைது செய்து தடுத்துவைத்துள்ளனர். அவர் தொடர்பாக இலங்கை வந்த ஐ.நா. செயற்குழுவிடம் நான் முறைப்பாடு செய்ய வந்தபோதும் எனது முறைப்பாட்டை அவர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. புலி தரப்பாக இருந்தால் ஏற்றுக் கொள்வதாகவும், இராணுவ தரப்பாக இருந்தால் ஏற்றுக் கொள்ள முடியாது என்றும் என்னிடம் தெரிவித்து விட்டனர் என்று விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள கடற்படை அதிகாரி கப்டன் கே.பி.தசநாயக்கவின் மகள் மஞ்சரி தசநாயக்க தெரிவித்தார்.

இலங்கை வந்த தன்னிச்சையாக தடுத்துவைத்தல் தொடர்பாக ஆராயும் ஐ.நா. செயற குழு பிரதிநிதிகள் நேற்று முன்தினம் கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டப குழு அறையில் இலங்கை விஜயம் தொடர்பாக விளக்கமளிக்கும் செய்தியாளர் சந்திப்பை நடத்தினர். செய்தியாளர் சந்திப்பு முடிவடைந்ததும் ஊடகவியலாளர்கள் குழு அறையிலிருந்து வெளியே வந்தபோது கடற்படை அதிகாரியின் மகள் மஞ்சரி தசநாயக்க ஊடகங்களிடம் கருத்து வெளியிடுகையில்,

ஒவ்வொரு முறையும் ஐ.நா.பிரதிநிதிகள் வரும் போது நான் எனது தந்தைக்கு இழைக்கப்பட்டுள்ள அநீதி தொடர்பில் முறையிடுவதற்கு வருவேன். ஆனால் அவர்கள் அதனை ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். இதற்கு முன்னர் இலங்கை வந்த ஐ.நா. அதிகாரி பென் எமர்சன் எனது தந்தையின் கைது தொடர்பில் மகிழ்ச்சியடைவதாக கூறியிருந்தார். என்னுடைய தந்தை குற்றச்சாட்டுக்கள் இன்றி சிறையில் வைக்கப்பட்டுள்ளார். தற்போது 5 மாதங்களாக அவர் சிறையில் இருக்கிறார். இந்நிலையில் இலங்கை வந்த ஐ.நா. குழுவினர் புலிகள் இருந்த சிறைக்கூடங்களை சென்று பார்த்தனர். ஆனால் எனது தந்தை தடுத்து வைக்கப்பட்டிருக்கும் வெலிக்கடை சிறைச்சாலைக்கு செல்லவில்லை.

இராணுவ வீரர்களை இவர்கள் சென்று பார்க்கவில்லை. அதுமட்டுமன்றி நான் இவர்களிடம் எனது முறைப்பாட்டை தெரிவிக்க வந்தேன்.

ஆனால் அதனையும் ஏறறுக்கொள்ளவில்லை. இலங்கை அதிகாரி ஒருவரை அனுப்பி எனது முறைப்பாட்டை பெற்றுக்கொண்டனர். ஆனால் அது உரிய இடத்திற்கு போகுமா என்று தெரியவில்லை. என்னிடம் முதலில் வந்து புலி தரப்பா? என்று கேட்டனர். நான் இல்லை இராணுவ தரப்பு என்றேன். உடனே எனது முறைப்பாட்டை ஏற்காமல் சென்றுவிட்டனர் என அவர் குற்றஞ்சாட்டினார். (இ-7)

## 15 வயது சிறைக் கைதி தூக்கிட்டு தற்கொலை

(பொலநறுவை)

பொலநறுவைச் சிறைச்சாலையில் போதைப் பொருள் குற்றச்சாட்டின் பேரில் நீதிமன்றத்தினால் சிறைத் தண்டனை விதிக்கப்பட்ட 15 வயது சிறுவன் நேற்றுக் காலை தூக்கில் தொங்கி தற்கொலை செய்து கொண்டுள்ளதாக பொலநறுவைப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

பதியதலாவ மாவித்தாவெல பிரதேசத்தை நிரந்தர வசிப்பிடமாக கொண்ட 15 வயதுடைய ரணவக்க ஆரச்சிலாகே மலித் ரணவன என்ற சிறுவனே தற்கொலை செய்து கொண்டுள்ளார்.

குறித்த சிறுவனின் தற்கொலை சம்பவம் தொடர்பாக பொலநறுவை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம)

## மர்மமான முறையில் உயிரிழந்த 19 வயது யுவதி சடலமாக மீட்பு

(அம்பாறை)

அம்பாறையில் வீடொன்றில் மர்மமான முறையில் உயிரிழந்த யுவதி ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

19 வயதுடைய ஜீவனி லஷிக்கா என்ற யுவதியே இவ்வாறு சடலமாக நேற்று முன்தினம் மீட்கப்பட்டுள்ளார்.

உயிரிழந்த யுவதி இரு மாத கர்ப்பிணி எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த தினத்தில் யுவதியின் கணவர் உந்துருளியில் ஏறி சென்றதாக அயல் வீட்டு சிறுவன் ஒருவர் தெரிவித்துள்ளார்.

எனினும் குறித்த நபர் கழுத்தில் சுருக்கிட்டு தற்கொலை செய்ய முயற்சித்துள்ளார் எனவும், அவரின் சகோதரன் கண்காணித்ததை தொடர்ந்து அவர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த யுவதி உயிரிழந்தமைக்கான காரணம் இதுவரை கண்டறியப்படாத நிலையில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம)

## போதை மாத்திரை வைத்திருந்த 17 வயது இளைஞன் கைது

(மட்டக்குளி)

போதை மருந்துகளை தன்வசம் வைத்திருந்த இளைஞர் ஒருவர் மட்டக்குளிய பிரதேசத்தில் கைது செய்யப்பட்டுள்ளார்.

திட்டமிட்ட குற்றச் செயல்களை தடுக்கும் பிரிவின் அதிகாரிகள் சிலரால் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின்போது சந்தேகநபர் கைதாகியுள்ளார்.

அவரிடமிருந்து 400 போதை மாத்திரைகள் கைப்பற்றப்பட்டுள்ளன.

கைது செய்யப்பட்ட இளைஞர் மட்டக்குளிய - அலிவத்தை பிரதேசத்தை சேர்ந்த 17 வயது மதிக்கத்தக்க நபர் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

## குமுழமுனையில் சிறுமியை வன்புணர்வுக்கு உட்படுத்திய இளைஞன் கைது


(பனிக்கன்குளம்)

குமுழமுனை ஆறுமுகத்தான்குளம் கிராமத்தில் 08 வயது சிறுமியை பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்திய ஒருவர் முல்லைத்தீவு பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் பற்றி தெரியவருகையில், நேற்று ஆறுமுகத்தான்குள கிராமத்தில் 08 வயது சிறுமியை அழைத்த குறித்த நபர் மர்ம உறுப்பை சிறுமியின் வாய்க்குள் திணித்துள்ளார். இது குறித்து சிறுமி தனது தாய்க்கு தெரிவித்துள்ளார்.

இதனையடுத்து தாயார் முல்லைத்தீவு பொலிஸில் முறையிட்டுள்ளார் சம்பவம் குறித்து கிரிமினல் குற்றத்தின் கீழ் வழக்கை பதிவு செய்த பொலிஸார் கிராமத்திற்கு சென்று குறித்த இளைஞனை கைதுசெய்துள்ளார்கள். (ம-281)

## அன்றாட வாழ்வில் ஐஸ்வர்யம் அதிகரிப்பதற்கான ஆசாரங்கள்




### குழந்தையை தலைமாட்டில் இரும்புத் துண்டை வைக்கச் சொல்வது ஏன்?

சில நேரங்களில் பேய் பிசாசுகள் குழந்தைகளைக் காணவரும். இவற்றில் நசில தொல்லை தருபவைகளாகும்.

அது குழந்தையை வரும்பினால் உடலுக்குள் புகுந்துவிட வாய்ப்பு உண்டு. அவ்வாறு புகுந்துவிட்டால் குழந்தைக்கு பல்வேறு தொல் லைகள் ஏற்படும்.

இரும்புத்துண்டைத் தலைப்பகுதியில் வைத்தால் பேய் பிசாசுகள் நெருங்காது. இரும்பைக் கண்டால் அவற்றிற்குப் பயம்.

எனவே தான் குழந்தை களைத் தனியாகப் படுக்க வைக்கும் நேரத்தில் இரும்புத் துண்டை குழந்தையின் தலைமாட்டில் வைக்கச் சொல்கிறார்கள். (தொடரும்)

# சென். ஜோன்ஸ்- சென்.தோமஸ் துடுப்பாட்டப் போட்டி டினோசனின் பொறுப்பாட்டத்தால் சமநிலையில் முடிவு





யாழ்ப்பாணம் சென். ஜோன்ஸ் கல்லூரி அணிக்கும் கல்கிசை சென். தோமஸ் கல்லூரி அணிக்கும் இடையில் நடைபெற்ற துடுப் பாட்டப் போட்டி சமநிலையில் முடிவடைந்தது.

இரண்டு பாடசாலைகளுக்குமிடையிலான, வண பிதா ஏ.ஜே.சி.செல்வரட்ணம் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்கான இரண்டு நாட்களைக் கொண்ட துடுப்பாட்டப் போட்டி கடந்த 13 மற்றும் 14 ஆம் திகதிகளில் யாழ்ப்பாணம் சென்.ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

ஏற்கனவே, கொழும்பு றோயல் கல்லூரியை வீழ்த்தியிருந்த துணிவுடன் யாழ்.சென்.ஜோன்ஸ் கல்லூரி இந்தப் போட்டியில் களமிறங்கியது.

நாணயச் சுழற்சியில் வென்ற கல்கிசை சென். தோமஸ் கல்லூரி அணி, முதலில் துடுப்பெடுத்தாடக் களமிறங்கியது. 62 ஓவர்களை எதிர்கொண்டு 128 ஓட்டங்களுக்குச் சகல விக்கெட்களையும் இழந்தது. துடுப்பாட்டத்தின் மந்தில விஜயரட்ண ஆட்டமிழக்காமல் 66 ஓட்டங்களையும், றியான் பேர்ணான்டோ 15 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர்.

பந்துவீச்சில் யாழ். சென். ஜோன்ஸ் அணி சார்பாக, முர்பின் அபினாஸ் 35 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்களையும், கனகரட்ணம் கபில்ராஜ் 31 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்களையும் கைப்பற்றினர்.

பதிலுக்கு தமது முதலாவது இனிங்ஸிற்காகத் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய யாழ்.சென்.ஜோன்ஸ் கல்லூரி அணி, 33.5 ஓவர்களில் 85 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்களையும் இழந்தது. துடுப்பாட்டத்தில் வசந்தன் யதுசன் 31 ஓட்டங்களையும், நாகேஸ்வரன் றதுசன் 14, தேவதாஸ் செரோபன் 13 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத்தனர்.

பந்துவீச்சில் கல்கிசை சென். தோமஸ் அணி சார்பாக, தெய்வின எரியகம 14 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்களையும், முகமட் அசாம் 15 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்களையும், சனன் பெர்ணான்டோ 9 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்களையும் கைப்பற்றினர்.

43 ஓட்டங்கள் முன்னிலையில் இரண்டாவது இனிங்ஸிற்காகத் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய கல்கிசை சென். தோமஸ் அணி, 54 ஓவர்களில் அனைத்து விக்கெட் களையும் இழந்து 97 ஓட் டங்களைப் பெற்றது. துடுப் பாட்டத்தில் மனிசா ருபசிங்க 26 ஓட்டங்களையும், மந்தில விஜயரட்ண 17 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தன்ர்.

பந்துவீச்சில் சென். ஜோன்ஸ் கல்லூரி அணி சார்பாக நாகேஸ்வரன்றதுசன் 26 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்களையும், கனகரட்ணம் கபில்ராஜ் 16 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்களையும் கைப்பற்றினர்.

141 ஓட்டங்கள் பெற்றால் வெற்றியென்ற இலக்குடன், இரண்டாவது இனிங்ஸிற்காக துடுப்பெடுத்தாடிய சென். ஜோன்ஸ் கல்லூரி அணி, 2 ஆவதும் இறுதியுமான நாள் முடிவில் 39 ஓவர்களை எதிர்கொண்டு. 6 விக்கெட் களை இழந்து 88 ஓட்டங் களைப் பெற்றிருந்தது. துடுப் பாட்டத்தில் வசந்தன் யதுசன் 26, தெய்வேந்திரன் டினோசன் ஆட்டமிழக்காமல் 21 ஓட்டங்களையும், முர்பின் அபினாஸ் 19 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர். பந்துவீச்சில் சனன் பெர்ணான்டோ 27 ஓட்டங்களுக்கு 4 விக்கெட் களைக் கைப்பற்றினார்.

இந்தப் போட்டியில் சிறந்த துடுப்பாட்ட வீரராக (யாழ். சென். ஜோன்ஸ்) வி.யதுசன், சிறந்த பந்துவீச்சாளராக (யாழ்.சென். ஜோன்ஸ்) எம். அபினாஸ் , சிறந்த களத்தடுப்பாளராக (சென். தோமஸ்) றியான் பெர் ணான்டோ , ஆட்டநாயகனாக (சென். தோமஸ்) மந்தில விஜயரட்ண ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். (க-26)

## திருக்குமரன் உதைபந்தாட்டப்போட்டி அடுத்த சுற்றில் சென்.லூட்ஸ், சென்.றொக்ஸ்

உரும்பிராய் திருக்குரன் சுற்றுப்போட்டியின் அடுத்த சுற்றுக்கு சென்.லூட்ஸ் மற்றும் சென்.றொக்ஸ் அணிகள் முன்னேறியுள்ளன.

உரும்பிராய் திருக்குமரன் விளையாட்டுக்கழகத்தின் ஏற்பாட்டில், யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த கால்ப்பந்தாட்ட அணி களுக்கிடையில் அணிக்கு 7 பேர் கொண்ட கால்ப்பந்தாட்ட சுற்றுப்போட்டியொன்றை திருக்குமரன் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்று வருகின்றது.

48 அணிகள் பங்கு பற்றுகின்ற இந்தச் சுற்றுப் போட்டியில், ஆட்டங்கள் விலகல் முறையில் நடைபெற்று வருகின்றன.

சென்.லூட்ஸ் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை அணிமோதியது. இதில் சென். லூட்ஸ் அணி, 3:1 என்ற கோல்கள் கணக்கில் வெற்றி பெற்றது.

யாழ்ப்பாணம் ஐக்கிய விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து சென்.றொக்ஸ் விளையாட்டுக்கழகம் மோதியது.இதில் சென்.றொக்ஸ் அணி, 6:1 என்ற கோல்கள் கணக்கில் வெற்றிபெற்றது. (க-26)

## துடுப்பாட்டப்போட்டிக்கு விண்ணப்பிக்குக

றிபேக்தாரகை விளையாட்டு கழகம் நடாத்தும் தென்மராட்சி ரீதியான மென்பந்தாட்டா துடுப்பாட்ட போட்டி 16,17திகதிகளில் நாடத்த திர்மானிக்கப்பட்டுள்ளது

ஆறு பந்து பரிமாற்றங்களுடன் அணிக்கு 7 பேரைக் கொண்ட இப் போட்டியில் விளையாட விரும்பும் அணிகள் 0783968300 எனும் இலக்கத்துடன் தொடர்பு கொண்டு பதிவுகளை மேற்க் கொள்ளலாம். (க)

# தொடரை வெல்லும் முனைப்பில் இலங்கை- இந்தியா பரபரப்பை ஏற்படுத்தும் இறுதிப்போட்டி இன்று





இலங்கை கிரிக்கெட் அணி இந்தியாவில் சுற்றுப் பயணம் செய்து விளையாடி வருகிறது.

இரு அணிகள் இடையேயான 3 டெஸ்ட் கொண்ட தொடரை இந்தியா 1-0 என்ற கணக்கில் கைப்பற்றியது.

இரு அணிகள் இடையேயான மூன்று ஒருநாள் தொடரில் இலங்கை அணி தர்மசாலாவில் நடந்த முதல் ஆட்டத்தில் 7 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. மொகாலியில் நடந்த 2 ஆவது போட்டியில் இந்தியா 141 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது. இதனால் தொடர் 1-1 என்ற கணக்கில் சம நிலையில் உள்ளது.

இந்தியா-இலங்கை அணிகள் மோதும் 3 ஆவது மற்றும் கடைசி ஒருநாள் போட்டி ஆந்திர மாநிலம் விசாகப்பட்டினத்தில் இன்று நடக்கிறது.

முதல் போட்டியில் ஏற்பட்ட மோசமான தோல்விக்கு இந்திய வீரர்கள் 2ஆவது ஆட்டத்தில் சரியான பதிலடி கொடுத்தனர். பேட்டிங் மற்றும் பந்துவீச்சில் சிறப்பாக செயல்பட்டனர்.

ரோகித்சர்மா 3 ஆவது இரட்டை சதத்தை அடித்து முத்திரை பதித்தார். தவான், புதுமுக வீரர் ஷிரேயாஸ் அய்யர் ஆகியோரும் பேட்டிங்கில் திறமையை வெளிப்படுத்தினர்.

தினேஷ் கார்த்திக், மனிஷ் பாண்டே திறமையை வெளிப்படுத்த வேண்டிய நெருக்கடியில் உள்ளனர்.

பந்துவீச்சில் யசுவேந்திர சகால் உள்ளிட்ட வீரர்கள் நல்ல நிலையில் உள்ளனர். தமிழக வீரர் வாஷிங்டன் சுந்தர் கடந்த போட்டியில் அறிமுகம் ஆனார். நாளைய போட்டிக்கான அணியில் ஒரு வேளை மாற்றம் இருந்தால் வாஷிங்டன் சுந்தருக்கு பதிலாக குல்தீப் யாதவ் இடம் பெறலாம்.

தொடர்ச்சியாக 8ஆவது ஒருநாள் தொடரை வெல்லும் வேட்கையில் ரோகித்சர்மா தலைமையிலான இந்திய அணி உள்ளது.

டெஸ்ட் தொடரை இழந்த இலங்கை அணி ஒருநாள் தொடரையாவது கைப்பற்றி விட வேண்டும் என்ற ஆர்வத்தில் உள்ளது. வெற்றிக்காக அந்த அணி வீரர்கள் கடுமையாக போராடுவார்கள்.

கடந்த போட்டியில் சதம் அடித்த முன்னாள் தலைவர் மேத்யூஸ், அணித்தலைவர் திசாரா பெரேரா, உபுல் தரங்க, டிக்வெல, லக்மல் போன்ற சிறந்த வீரர்கள் அந்த அணியில் உள்ளனர்.

இரு அணிகளும் வெற்றிக்காக கடுமையாக போராடுவார்கள் என்பதால் இந்த ஆட்டம் விறுவிறுப்பாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இரு அணிகளும் இதுவரை 157 ஆட்டத்தில் மோதியுள்ளன. இந்தியா 89-ல், இலங்கை 56-ல் வெற்றி பெற்றுள்ளன. ஒரு போட்டிகைவிடப்பட்டது. 11 ஆட்டம் சமனிலை ஆனது.

போட்டி இன்று காலை 11.30 மணிக்கு தொடங்குகிறது.

ஸ்டார் ஸ்போர்ட்ஸ் டெலிவிசனில் இந்த ஆட்டம் நேரடியாக ஒளிபரப்பு செய்யப்படுகிறது. (க)

# மலேசிய பிரதமர்...

மலேசிய பிரதமர் நஜீப் பின் துன் அப்துல் ரஸாக் இன்றைய தினம் இலங்கைக்கான விஜயத்தினை மேற்கொள்ளவுள்ளார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் அழைப்பினை ஏற்று இலங்கை வரும் மலேசிய பிரதமர் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை வரை இலங்கையில் தங்கியிருப்பார்.

இந்நிலையில், நாளை திங்கட்கிழமை ஜனாதிபதி செயலகத்திற்கு முன்பாக மலேசிய பிரதமரை வரவேற்கும் நிகழ்வு இடம்பெறவுள்ளது.

இதன்போது, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிற்கும், மலேசிய பிரதமருக்கும் இடையிலான விசேட பேச்சுவார்த்தை இடம்பெறவுள்ளது.

மேலும், விஞ்ஞான தொழில்நுட்பம், புதிய உற்பத்திக்கான உடன்படிக்கை ஆகியன தொடர்பில் இரு நாடுகளுக்கு இடையிலும் மூன்று புரிந்துணர்வு உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்படவுள்ளன.

தொடர்ந்து பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவையும் மலேசிய பிரதமர் சந்திக்கவுள்ளார் என தெரிவிக்கப்படுகின்றது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுடனான சந்திப்பில் இரு நாடுகளுக்குமிடையில் பொருளாதார புரிந்துணர்வு மற்றும் வர்த்தகம், முதலீடுகளுக்கான சந்தர்ப்பத்தை விரிவுபடுத்துவது குறித்து கவனம் செலுத்தப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

மேலும் இலங்கை முதலீட்டாளர்கள் மற்றும் வர்த்தகர்களின் வட்டமேசை பேச்சு வார்த்தையிலும் மலேசிய பிரதமர் பங்கேற்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)

# நாடளாவிய ரீதியில்...

பிடியாணை பிறப்பிக்கப்பட்ட 501 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பொலிஸ்மா அதிபரின் ஆலோசனைக்கமைய நேற்று அதிகாலை மேற்கொள்ளப்பட்ட இத் தேடுதல் நடவடிக்கையில் 14,706 பொலிஸ் உத்தியோகத்தர்கள் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

மேலும் தடைசெய்யப்பட்ட நச்சுத் தனமையுடைய போதை பொருட்களை வைத்திருந்த 586 பேரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.(ம)

# சாகசம் காட்டிய...

இந்த சம்பவம் நேற்று இரவு 7 மணியளவில் இடம்பெற்றது. இதன்காரணமாக குறித்த பகுதியில் சிறிது நேரம் பரபரப்பு ஏற்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கோண்டாவில் குட்சட் வீதி பகுதியில் 4 மோட்டார் சைக்கிள்களில் வந்திருந்த வாள்வெட்டு குழுவினர் அப்பகுதி மக்களை அச்சுறுத்த முற்பட்டுள்ளனர்.

அப்போது அங்கிருந்த ஊர் இளைஞர்கள் ஒன்று திரண்டு இவர்களை சுற்றி வளைத்து தாக்குதல் மேற்கொண்டுள்ளனர். இதை சற்றும் எதிர் பார்க்காது செய்வதறியாது திகைத்த வாள்வெட்டு குழுவினர் ஆயுதங்களை போட்டு விட்டு சிதறி ஓடியுள்ளனர்.

அவர்களிடம் இருந்த இரண்டு வாள்கள் மற்றும் ஒரு மோட்டார் சைக்கிளை கோப்பாய் பொலிஸாரிடம் பொதுமக்கள் பாரப்படுத்தியுள்ளனர். (ம)

# மதவாச்சியில்...

வயது சிறுமி ஒருவர் பலியானார்.

இந்த விபத்து நேற்றுமுன்தினம் இடம்பெற்றதாக பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த சிறுமி தனது தாயுடன் மதவாச்சியில் இருந்து வவுனியா நோக்கி உந்துருளியில் பயணித்துக் கொண்டிருந்த வேளை, பின்புறமாக வந்த டிப்பர் ரக வாகனம் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இதன்போது காயமடைந்த சிறுமி மதவாச்சி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் மேலதிக சிகிச்சைக்காக அநுராதபுரம் மருத்துவமனைக்கு மாற்றிய நிலையிலேயே உயிரிழந்துள்ளார். (ம)

# மந்திகை-கொடிகாம...

காலை 1.30 மணியளவில் இக் கொள்ளைச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

மந்திகை கொடிகாமம் வீதியில் வீதிக்கு அருகாமையாக வயோதிபத் தம்பதிகள் வசித்துவரும் வீட்டில் அதிகாலை வேளை சமையல் அறையில் புகைப் போக்கி வழியாக உள்நுழைந்ததாகத் தெரிவிக்கப்படும் கொள்ளையர்கள், வயோதிபத் தம்பதியினர் உறங்கிக் கொண்டிருந்த அறைக்குச் சென்று அவர்களின் கழுத்தில் வாளினை வைத்து அச்சுறுத்தியுள்ளனர்.

வீட்டிற்குள் மூன்று கொள்ளையர்கள் முகங்களை மறைத்தவாறு கத்திகள், வாள்கள், கொட்டன்களுடன் உள்நுழைந்தனர்.

சத்தமிட்டால் கொலை செய்து விடுவதாக மிரட்டிய கொள்ளையர்கள் வீட்டின் அனைத்துப் பகுதியினையும் சல்லடைபோட்டு தேடியுள்ளனர்.

அலுமாரிகள், கைப்பைகள் அனைத்தும் கொள்ளையர்களினால் சல்லடைபோட்டு தேடப்பட்டது. கொள்ளையர்களின் இத் தேடுதல் நடவடிக்கை சுமார் ஒன்றரை மணித்தியாலங்கள் இடம்பெற்றுள்ளதாக கூறப்படுகிறது.

இறுதியில் வீட்டில் இருந்த 30 பவுண் தங்க நகை மற்றும் 40 ஆயிரம் ரூபா பணம் என்பவற்றை கொள்ளையடித்ததுடன் வயோதிப மாதுவின் காதிலிருந்த தோட்டினையும் விட்டுச் செல்லாது அதனையும் கழற்றிச் சென்றுள்ளனர்.

கொள்ளையிடப்பட்ட வீட்டில் இருந்து 500 மீற்றர் தூரத்தில் உள்ள ஓர் வீட்டிற்கு நள்ளிரவில் இக் கொள்ளையர்கள் சென்றதாகவும் கொள்ளையர்களின் நடமாட்டத்தைக் கண்ட வீட்டார் கூக்குரல் எழுப்பியதையடுத்து தப்பிச் சென்ற கொள்ளையர்களே மேற்படி வீட்டில் கொள்ளையிட்டதாகவும் கூறப்படுகிறது.

இச் சம்பவம் தொடர்பில் பருத்தித்துறை குற்றத்தடுப்பு பொலிஸில் முறையிடப்பட்டதைத் தொடர்ந்து புலன்விசாரணைகளை முடுக்கி விட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை பொலிஸ் மோப்ப நாய் கொண்டு வரப்பட்டு சோதனை செய்யப்பட்டது. மோப்ப நாய் மந்திகை சந்தி வரை மோப்பம் இட்டதுடன் அவ்விடத்திலே நின்று விட்டது என்பது குறிப்பிடத்தக்கது. (ம-60)

# வாக்காளராக இல்லாத...

கூல் தெரிவித்துள்ளார்

ஆய்வு அபிவிருத்திக்கான நிறுவனத்தின் ஏற்பாட்டில் உள்ளூராட்சி தேர்தல் விதிமுறைகள் தொடர்பில் நல்லூர்பிரதேச செயலகத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலின் பின்னர் கருத்து தெரிவித்தபோது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் மேலும் கருத்து தெரிவிக்கையில்

தேர்தல் விதிமுறைகள் தொடர்பாக எமக்கு கிடைக்கும் முறைப்பாடுகளை விசாரணை செய்வது வழமை. அதன் அடிப்படையில் வவுனியாவில் இருந்து இரு முறைப்பாடுகள் கிடைத்துள்ளன, அதில் வவுனியா மாவட்ட செயலகத்திலுள்ள அரச அலுவலகங்களை உபயோகித்து கட்சிகள் வேலை செய்வதாக முறைப்பாடு வந்துள்ளது.

முக்கிய பிரதான கட்சிகளை சேர்ந்த அமைச்சு பதவிகளை வகிப்பவர்கள் மேற்குறித்த செயற்பாடுகளை மேற்கொள்வதாகவும். அரச அலுவலர்களை ஒரு புறம் வைத்து விட்டு தமது கட்சி சார்ந்தவர்களை வேலைக்கு இருத்தி அந்த அலுவலகங்களை உபயோகிப்பதாக முறைப்பாடு கிடைத்துள்ளது.

மேலும் வவுனியாவில் 3 அரச விடுதிகள் அமைந்துள்ளது. அவற்றில் 15 வருடங்களாக வாடகை செலுத்தாமல் 3 அரசியல் வாதிகள் இருப்பதாகவும் முறைப்பாடு கிடைத்துள்ளது. இது தொடர்பில் விசாரணை அறிக்கை கோரியுள்ளோம்.

மேலும் நாட்டில் எந்தவொரு பகுதியிலும் வாக்காளராக இல்லாத ஒருவரின் பெயரை ஒரு கட்சி சாவகச்சேரி நகர சபை தேர்தலுக்காக வாக்காளராக பதிவு செய்துள்ளது. இந்த வேட்பு மனு ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளதாக எமக்கு முறைப்பாடு கிடைத்தது.

அது குறித்து தேர்தல் ஆணைக்குழுவுக்கு நாம் தெரிவித்திருந்தும் முறைப்பாட்டை ஏற்றுக்கொள்ளவில்லை. ஆனால் குறித்த வேட்பாளர் தேர்தலில் வென்றால் அதன் பின்னர் அவருக்கு எதிராக வழக்கு பதிவு செய்து அவரை நீக்கலாம் என தெரிவித்துள்ளனர். ஆனால் அதுவரை வாக்காளர் ஒருவரின் வாக்கு வீணாகிவிடும் என்பது எமது கருத்து என அவர் மேலும் தெரிவித்தார். (ம-9)

# த.தே.கூட்டமைப்பிலிருந்து கிருஸ்ணபிள்ளை விலகல்

தமிழ்த் தேசிய கூட்டமைப்பில் இருந்து விலகி சுயேட்சையாகவோ அல்லது வேறு தமிழ்க் கட்சிகளுடனோ இணைந்து செயற்படவுள்ளதாக முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும், தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் முன்னாள் கிழக்கு மாகாணசபை உறுப்பினருமான வெள்ளிமலை என அழைக்கப்படும் ஞா.கிருஸ்ணபிள்ளை தெரிவித்துள்ளார்.

என்னை நம்பியுள்ள மக்களை வளம் பெறச் செய்ய வேண்டும் என்ற நோக்கில் சுயேச்சைக் குழுவாகுதல் அல்லது தனிப்பட்ட கட்சிகளோடு இணைந்து செயற்பட முடிவெடுத்துள்ளேன்.

தமிழ் மக்கள் கல்வி, கலாசாரம், பொருளாதாரம், பண்பாடு, பாரம்பரியம் என அனைத்து விடயங்களிலும் மேலோங்கி நிற்பதற்கான வழியை ஏற்படுத்திக்கொடுக்க வேண்டிய தமிழ்த் தலைமைகள் பதவிக்காக அடிபட்டு மக்களை மேலும் மேலும் படுபாதாளத்தில் தள்ளாது அனைத்து துறைகளிலும் மக்களை முன்னேற்றுவதற்கு வழியேற்படுத்த வேண்டும் என கிருஸ்ணபிள்ளை மேலும் தெரிவித்துள்ளார். (ம)

# மத்திய அரசாங்கம்...

வட மாகாண சபையின் காணி அமைச்சு நேற்று சனிக்கிழமை நடத்திய கலந்துரையாடலில் கலந்து கொண்ட பின்னர் ஊடகவியலாளர்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

நேற்றைய கூட்டத்தில் வட மாகாணத்தில் நிலவும் காணி தொடர்பான பிரச்சினைகள் குறித்து ஆராயப்பட்டன. இதற்குப் பல திணைக்களத் தலைவர்கள் மற்றும் காணி அதிகாரிகள், பிரதேச செயலாளர்கள் அனைவரும் அழைக்கப்பட்டிருந்தனர். தொல்பொருட் திணைக்களம், வன ஜீவராசிகள் திணைக்களம், வனவளத்திணைக்களம் ஆகியவற்றில் காணப்படும் பல்வேறுபட்ட பிரச்சினைகள் குறித்து நாம் ஆராய்ந்திருந்தோம்.

எனினும் இக்கூட்டத்திற்கு மத்திய அரசாங்கத்தினைச் சேர்ந்த திணைக்கள அதிகாரிகள் மற்றும் மன்னார் மாவட்டத்தினைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அதிகாரிகள் எவரும் சமுகமளிக்கவில்லை. அவர்களுக்கு மேற்படி கூட்டத்திற்கு வருவதற்கு அனுமதியளிக்கப்படவில்லை என அறியக்கிடைத்தது.

இதன்மூலம் மத்திய அரசாங்கம் வட மாகாண சபையுடன் இணைந்து செயற்பட விரும்பாத ஒரு நிலைமையே காணப்படுகின்றது. எனினும் எதிர்காலத்தில் அவர்களுடன் இணைந்து செயற்படுவதற்கு நாம் தயாராக இருக்கின்றோம் என வட மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் மேலும் தெரிவித்தார். (ம)

# சில அரசியல் கட்சி...

சில்வா தெரிவித்துள்ளார். ஜே.வி.வி. கட்சி தற்போதே வெற்றிப் பாதையில் பயணிக்கத் தொடங்கியுள்ளதாகக் குறிப்பிட்டுள்ள அவர் ஜே.வி.பி கட்சி தாக்கல் செய்த வேட்பு மனுக்கள் மட்டுமே நிராகரிக்கப்படாது ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

அதிகாரத்தில் இருப்பவர்கள் மற்றும் அதிகாரத்தைப் பெற்றுக்கொள்ள முயற்சிப்போரின் கவனயீனமே இவ்வாறு வேட்பு மனுக்கள் நிராகரிக்கப்பட்டமைக்கான காரணம் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். பிழையின்றி வேட்பு மனுக்களைக் கூட தயாரிக்க முடியாதவர்களிடம் எவ்வாறு ஆட்சி அதிகாரத்தை வழங்க முடியும் என அவர் கேள்வி எழுப்பியுள்ளார். (ம)

# தேர்தல் தொடர்பில்...

மற்றும் அம்பாறை பொலிஸ் அதிகாரத்துக்குட்பட்ட பிரதேசங்களில் பதிவாகியுள்ளதாக பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

போலியான கையெழுத்தை இட்டு தேர்தல் வேட்புமனுவை தயாரித்தல் மற்றும் வேட்பாளரின் பதாதையொன்றை அகற்றியது தொடர்பில் குறித்த முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதாக பொலிஸார் மேலும் குறிப்பிட்டுள்ளனர். (ம)

# மீண்டும் ஒரு போர்...

ஒற்றுமையாக இருக்க வேண்டும் என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

திருகோணமலையில் நேற்றைய தினம் இடம்பெற்ற அரச நத்தார் விழாவில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி இதனை கூறியுள்ளார்.

மேலும், நாட்டின் எதிர்காலத்திற்காக இனங்களுக்கிடையில் சமாதானமும், நல்லிணக்கமும் பலமாக இருக்க வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

ஒரே நாட்டில் வாழும் மக்கள் என்ற வகையில் நத்தாரின் செய்தியை பகிர்ந்து கொள்ளும் நோக்குடன், அன்பின் ஊற்று நத்தார் என்ற கருப்பொருளின் கீழ் இம் முறை திருகோணமலை மாவட்டத்தை மையப்படுத்தி அரச நத்தார் விழா ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

மானிட அன்பு நத்தாருடன் தோற்றம் பெறுவதாக குறிப்பிட்ட ஜனாதிபதி, நத்தாரின் நோக்கமான ஏழைகளுக்காக அன்பு தீபத்தை ஏற்றுவதும் அவர்களது வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பதும் அனைவருடைய பொறுப்பாகும் என்றும் குறிப்பிட்டார்.

நாட்டின் எதிர்காலத்திற்காக இனங்களுக்கிடையில் சமாதானமும், நல்லிணக்கமும் பலமாக இருக்க வேண்டும் என்பதுடன் நாட்டில் மீண்டும் ஒரு யுத்தம் ஏற்படாத வகையில் அனைத்து இனங்கள் மற்றும் சமயங்களுக்கிடையில் நல்லிணக்கத்தை கட்டியெழுப்புவதற்கு ஒன்றுபடுமாறு இந்த நத்தாரில் தாம் அனைவரிடமும் கேட்டுக் கொள்வதாகவும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

நத்தார் பண்டிகையை கொண்டாடுவதற்கு தயாராகிவரும் அனைத்து கிறிஸ்தவ மக்களுக்கும் ஜனாதிபதி தனது வாழ்த்துக்களை தெரிவித்தார்.

கரோல் கீதங்களுடன் அரச நத்தார் விழா மிகச் சிறப்பாக இடம்பெற்றதுடன், 2017 அரச நத்தார் விழாவுடன் இணைந்ததாக இடம்பெற்ற போட்டி நிகழ்ச்சிகளில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில்கள் மற்றும் சான்றிதழ்கள் ஜனாதிபதியினால் வழங்கி வைக்கப்பட்டன.

அப்போஸ்தலிக்க தூதுவர் பேராயர் நியுயான் வன் டெட், இலங்கை போராயர் சங்கத்தின் தலைவர் பேராயர் வின்சன் பிரனாந்து, திருகோணமலை பேராயர் நொயல் எம்மானுவெல் உள்ளிட்ட கிறிஸ்தவ பேராயர்கள், சுற்றுலா அபிவிருத்தி கிறிஸ்தவ சமய விவகார அமைச்சர் ஜோன் அமரதுங்க, கிழக்கு மாகாண ஆளுநர் ரோகித போகல்லாகம, பாராளுமன்ற உறுப்பினர் மஹ்ஷூப், சுற்றுலா அபிவிருத்தி கிறிஸ்தவ சமய விவகார அமைச்சின் செயலாளர் எசல வீரகோன், கிறிஸ்தவ அலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் ஏ.ஆர் குணவர்தன, பொலிஸ்மா அதிபர் பூஜித ஜயசுந்தர ஆகியோர் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.(ம)

# முன்னாள் தமிழ்...

புரிமையை பெற்று எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் வேட்பு மனுத் தாக்கல் செய்துள்ளார். சிலாபம் நகர சபைக்காக போட்டியிடும் நோக்கில் வேட்பு மனு கையெழுத்திடும் நடவடிக்கை நேற்று மாலை சிலாபம் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி காரியாலயத்தில் இடம்பெற்றது. (ம)

**வலம்புரி**
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532

பிறீமா கோழிக்குஞ்சுகளின் வடபிராந்திய அங்கீகாரம் பெற்ற ஏக விநியோகஸ்தர்.
**VSP**
**0777048972**
(சி-705)

## வீடு வாடகைக்கு

புதுக்குடியிருப்பு கோம்பாவில் விக்னேஸ்வரா மைதானத்துக்கு அருகாமையில் 05 அறைகளுடன் 2 குளியலறைகளுடனும் வட்ட வேலியுடன் கூடிய வீடு வாடகைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு:
**0775398889, 0714745344**
(சி-715)

## TVS Exchange on the Spot Sales

- புதிய TVS மோட்டார் சைக்கிள் ஒன்றை சொந்தமாக்க வேண்டுமா? இதோ உங்களது கனவு நிறைவேற
- உங்களிடம் உள்ள அனைத்து வகையான பழைய மோட்டார் சைக்கிள்களுக்கும் புதிய TVS மோட்டார் சைக்கிள் பெற்றுக்கொள்ளலாம்.
- குறைந்த வட்டி வீதத்தில் லீசிங் வசதி செய்து தரப்படும்.

இடம்: மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலய முன்றும்
காலம்: இம்மாதம் 22,23,24 ஆம் திகதிகளில்

தொடர்புகளுக்கு:
**J.P Motors - Chankanai**
0777585909, 0212252225, 0775087251

Jaffna ஒட்டோ மாட் - நல்லூர்
TVS உடன் இணைந்து வழங்கும்
நத்தார் விசேட சலுகை
(சி-727)

## CNR எக்ஸ்பிரஸ் பொதி விநியோக சேவை

உலகின் முதல் தர கூரியர் நிறுவனத்தின் ஊடாக உங்கள் வீட்டில் இருந்தவாறே உள்நாட்டு, 'வெளிநாட்டு முக்கிய ஆவணங்கள் பொதிகளை துரித கதியில் அனுப்பிட நாடுங்கள்.

CNR World Wide Express
இல.401, மனிக்கூண்டு கோபுர வீதி, (பெருமாள் கோவில் அருகாமை) யாழ்ப்பாணம்.

தொடர்புகளுக்கு:
021 5674145
077 2931062
follow us , cnrworldwideexpress
(சி-704)

## IT Spot

185, V.M. றோட், பருத்தித்துறை.

**ICT**
ஆரம்பம் : 03.01.2018
ஆங்கிலம், தமிழ் மொழிமூல வகுப்புக்கள்
தரம் - 10,11 & A/L வடமராட்சியில்
க.செந்தூரன் (B.Sc (Hons) BIT)
**077 087 1456**
(1647)

## உடனடி வேலைவாய்ப்பு

யாழ்ப்பாணத்தில் இயங்கிவரும் Leading Pest Control கம்பனிக்கு பின்வரும் பணியாளர்கள் உடனடித் தேவை.

- Pest Management Technicians with Valid Driving/Riding License
  - 30வயதிற்கு உட்பட்டவராக இருத்தல் வேண்டும்.
  - ஆரம்பச் சம்பளம் 20000+ சலுகைகள்
  - வாகனம் செலுத்த தெரிந்திருத்தல் அவசியம்.
- Documentation Clerk with Computer Knowledge (பெண்கள் மட்டும்)
  - ஆகக்குறைந்த கல்வித் தகைமை A/L கருதப்படும்.
  - சரளமாக ஆங்கிலத்தில் பேசக்கூடியவர் விரும்பத்தக்கது.
- Field/Site Supervisors (A/L Qualifications & Technical knowledge)

தங்களது சுயவிபரக்கோவையை (CV) termite.com@gmail.com என்ற மின்னஞ்சலுக்கு அல்லது Termite.com,(Pvt)Ltd. இல 06, புகையிரத லேன், சுண்டுகுளி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

தொடர்புகளுக்கு:
**0763156802, 0214927626**
(1843)

## வீடு விற்பனை

ஆனைக்கோட்டை ஆஸ்பத்திரி வீதியில் 4 அறைகள், 2 வரவேற்பறை, சமையலறை கொண்ட வீடு விற்பனைக்கு உண்டு.
தொடர்பு: 0779676783
(1832)

## விரைவு பொதிகள் சேவை, விமான பயணச்சீட்டுகள் விசா சேவைகள்

- அனைத்து சேவைகளும் மிக குறைந்த கட்டணத்தில்
- மேலதிக கட்டணமின்றி பொதிகள் வீடுகளில் வந்து பெற்றுக்கொள்ளப்படும்
- விடுமுறை நாட்களிலும் ஞாயிற்றுக்கிழமைகளிலும் அலுவலகங்கள் உண்டு
- எம்மிடம் சேவைகளை பெற்றுக்கொள்பவர்களுக்கு நாங்கப்பவுண் மோட்டார் சைக்கிள்கள் வெல்லும் வாய்ப்பு

(C-696)

UK-550/=Kg
மற்றும் அனைத்து நாடுகளுக்கும் குறைந்த விலையில்
DELIVERY IN 3 - 5 DAYS

**V2 TRAVELS-0768226240**
யாழ்ப்பாணம் • கிளிநொச்சி • நெல்லியடி • பருத்தித்துறை • வல்வெட்டித்துறை

## வெளிநாடுகளுக்கான துரித பொதிகள் சேவை

EXPRESS Courier Services
அண்ணா பொதிகள் சேவை
976,கே.கே.எஸ் வீதி, நாச்சிமார் கோவிலடி யாழ்ப்பாணம்
021 221 5656 070 330 5500

பொதிகள் மற்றும் கடிதங்களை துரிதமாகவும், நம்பிக்கையுடனும்,குறைந்த கட்டணங்களுடனும் அனைத்து நாடுகளுக்கும் மிகக் குறுகிய நாட்களுக்குள் அனுப்பிட எம்மை நாடுங்கள்.

யாழ்ப்பாணம் | வேலணை | சாவகச்சேரி | மீசாலை | முல்லைத்தீவு | கிளிநொச்சி | வவுனியா | திருகோணமலை

## புதிய வகுப்புக்கள் 'The World of Hopes'

- "மெல்லக் கற்கும்" மாணவர்களிற்கு மட்டுமேயானது.
- தரம் 4, தரம் 5 இற்கான புதிய குழு வகுப்புக்கள் ஆரம்பம்.
- புலமைப் பரிசில் பரீட்சையை அடிப்படையாகக் கொண்டது.
- ஒவ்வொரு மாணவரின் மீதும் தனிப்பட்ட கவனம் செலுத்தப்படும்.
- மட்டுப்படுத்தப்பட்ட மாணவர் அனுமதி

மேலதிக விபரங்களுக்கு : 075 333 9904
இல : 234, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
(1825)

# அகமகிழ்வோடு வாழ்த்துகின்றோம்



(1823)

## யே.நிரோஷானந் (J.P)

BBA (FMSPL) HNDA, PGD in PS

எமது அன்புக்குரிய நண்பரும் யாழ்.மாவட்ட செயலக திட்டமிடல் பிரிவு அபிவிருத்தி உத்தியோகத்தரும் நல்லூர் முருகன் சனசமூக நிலைய செயலாளரும், சமூக ஆர்வலரும், உயிர்த்துடிப்பு மிகு சமூக சேவகருமாகிய அன்புக்கும் பெருமதிப்புக்குரிய திரு.யே.நிரோஷானந் அவர்கள் 23.11.2017 ஆம் திகதி யாழ்.மேல் நீதிமன்ற நீதிபதி கௌரவ மா.இளஞ்செழியன் அவர்கள் முன்னிலையில் அகில இலங்கை சமாதான நீதவானாக சத்திய பிரமாணம் செய்தமையையிட்டு பாராட்டி அகமகிழ்ந்து வாழ்த்துகின்றோம்.

*வாழ்த்துவோர்:*
தனேந்திரன், கமல், விமல்ராஜ், உமாசங்கர், தமிழ்அழகன், விஜயன், பிரதீபன், பரமேஸ்வரன், சிறிகாந்

# குயின்சி விநியோகஸ்தர்கள் (புத்தகசாலை)






- மருத்துவபீட மாணவர்களுக்கான மருத்துவ நூல்கள்.
- ஆங்கில அகராதிகள், தேசிய பாடசாலைப் புத்தகங்கள்.
- சிறுவர்களுக்கான நகைச்சுவை கதைகள்
- மாணவர்களுக்கான அறிவியல் நூல்கள், நீதிநூல்கள்.
- மங்கையர்களுக்கான சமையலில் ருசி பார்க்க சமையல் குறிப்புப் புத்தகங்கள், அழகுக்குறிப்புப் புத்தகங்கள் மற்றும் கோலப்புத்தகங்கள்.
- சமயத்தினை வளர்க்க ஆன்மீக புத்தகங்கள்.




பாடசாலை புத்தகங்களுக்கு விசேட விலைக்கழிவு

பாடசாலை மாணவர்களுக்கான எழுதுகருவி உபகரணங்கள், பயிற்சிப் புத்தகங்கள், க.பொ.த சாதாரண தர மாணவர்கள் , க.பொ.த உயர்தர மாணவர்களுக்கான கடந்த கால வினாத்தாள்கள் போன்றவற்றை பெற்றுக் கொள்ள நாட வேண்டிய ஒரே இடம்.

**குயின்சி விநியோகஸ்தர்கள்**
271, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 0212217513, H.P: 0772268486
(1844)


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 17.12.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a Newspaper in Srilanka
Viber 076 636 3378

வாரமலர்

# வலம்புரி

சங்குநாதம்

நாதம் 147

வள்ளுவர் ஆண்டு 2048 17.12.2017 தொலைபேசி : 021 222 3378











# தேர்தல் வந்தாச்சு

உங்கள் சங்குநாதத்தில் அரசியல் - அறிவியல் - ஆன்மிகம் - ...

# வடபுலத்து மண்ணில் சர்வாதிகார அரசியல்

வடபகுதியின் உள்ளூராட்சி சபைத் தேர்தல் நிலைமைகள் கண்டு தமிழ்மக்கள் மிகுந்த வெறுப்பும் வேதனையும் அடைந்துள்ளனர்.

எதிலும் ஏமாற்று வேலைகள் என்பதாக தமிழர் அரசியல் மாறி விட்டது. குறிப்பாக சாவகச்சேரி நகர சபைக்கான வேட்பு மனுத் தாக்கலின் போது சுத்து மாத்துக்கள் நடந்ததான தகவல்கள் சீ...! என்ன மனிதர்கள் இவர்கள் என்ற மனநிலையை மக்களிடம் தோற்று வித்து விட்டதென்பது மறுக்க முடியாத உண்மை.

தந்தை செல்வநாயகம் அவர்களிடம் சென்று சிலர் கூறினார்கள். ஐயா! சிங்களவர்களிடம் குறைவாகக் கேட்காதீர்கள். கூடுதலாகக் கேட்டால்தான் அவர்கள் குறையவேனும் தருவார்கள் என்று.

அதற்குத் தந்தை செல்வநாயகம் அவர்கள் கூறினார். என் மனச்சாட்சிக்கு விரோதமாக நான் எதனையும் கேட்க மாட்டேன். அதிகமாகக் கேட்கும் போது அதில் ஒரு நியாயம் இருக்க மாட்டாது.

ஆகையால் நாம் கேட்பது நியாயம் என்று மற்றவர்கள் சொல்ல வேண்டும். எனவே எங்களுக்குத் தேவையானதை மட்டுமே கேட்பேன் என்றார்.

இவ்வாறாக எதிலும் நியாயத்தை நிலை நாட்டிய தந்தை செல்வநாயகத்தின் தமிழரசுக் கட்சி இன்று நியாயம் என்றால் என்ன? என்பது பற்றி எதுவும் தெரியாதவர்களிடம் அகப்பட்டு அல்லோல கல்லோலப்படுகிறது.

தமிழ்மக்களிடம் இருக்கக்கூடிய ஓர் அரசியல் கட்சியின் ஏமாற்று வேலைகள் சுத்து மாத்துகளைப் பார்க்கும் போது ஏன்தான் இப்படிச் செய்கிறார்கள் என்று எண்ணத் தோன்றுவது இயல்பு.

அட, தமிழ்மக்களையே ஏமாற்றுபவர்கள் தங்களது கட்சி உறுப்பினர்களை ஏமாற்றுவதென்பது பெரிய வேலையா என்ன? என்று கூறுவோரும் இருக்கவே செய்வர்.

எது எவ்வாறாயினும் இத்தகைய அரசியல் குழப்பங்கள் தேர்தலும் வாக்களிப்பும் வேண்டாம். நாம் பேசாமல் இருந்து விடுவோம் என்ற ஒரு சூழ்நிலையை ஏற்படுத்தி விடும்.

அதாவது அரசியலில் நேர்மையற்ற தன்மை வெளிப்படும் போது அதன் விளைவு மக்கள் தேர்தலில் இருந்து ஒதுங்கிக் கொள்வதாக அமைவது தவிர்க்க முடியாததே.

சாவகச்சேரி நகர சபைக்கான வேட்பு மனுத்தாக்கலில் நடந்த குளறுபடிகளின் முடிவு, ஒன்றும் வேண்டாம், நாமுண்டு நம்பாடுண்டு என்பதாக மக்களை மாற்றிவிடும்.

ஆக, அரசியல் குழப்பங்கள், சுத்துமாத்துக்கள் இடம்பெறுவதைப் பார்க்கும் போது வடபுலத்து உள்ளூராட்சி சபைத் தேர்தலில் தமிழ்மக்களின் வாக்களிப்பு வீதத்தைக் கணிசமாகக் குறைப்புச் செய்ய வேண்டுமென்ற உள்நோக்கம் இருக்கிறதா என்றுகூட எண்ணத் தோன்றும்.

தவிர, அரசியல் சர்வாதிகாரமொன்று வடபுலத்தில் உருவாகி வருகிறது என்ற அறிகுறியாகவும் இவற்றைப் பார்க்க வேண்டியுள்ளது.



## வேரறுக்காவிட்டால் விளைவு பாரதூரமாகும்

பொதுவில் வடபுலத்தில் காலத்திற்குக் காலம் சர்வாதிகார ஆட்சிகள் சட்டத்திற்குப் புறம்பாக அமைந்து வந்துள்ளது என்பதை எவரும் மறுத்துரைக்கமாட்டார்.

விடுதலைப் போராட்ட காலத்தில் உருவாகிய போராட்ட அமைப்புகளும் முதலில் செய்தது தமிழ்மக்களை அடக்கி ஆள்வதாகவே இருந்தது.

உரிமையைப் பெறுவதற்காக அப்படியானதொரு தேவையுள்ளது என்று கருதப்பட்டதாயினும் அந்தக் கருத்தியல் ஏற்புடையதல்ல என்று கூறுமளவிற்கு போராட்டக் குழுக்கள் தத்தம் எல்லைக்குட்பட்ட பிரதேசங்களை தமது பூரண கட்டுப்பாட்டிற்குள் வைத்திருக்க முற்பட்டனர். இவ்வாறு தமது கட்டுப்பாட்டிற்குள் வைத்திருக்க முற்பட்டதனால் பலரைத் தண்டித்தும் பலருக்கு மரண தண்டனை விதித்தும் தங்களின் சர்வாதிகாரத்தை நிலைநாட்ட முற்பட்டனர் என்பது நிதர்சனமான உண்மை.

விடுதலைப் போராட்டம் என்ற காலகட்டம் முடிந்த போது இராணுவத்தின் சர்வாதிகாரம் வடபுலத்தில் கோலோச்சியது.

மகிந்த ராஜபக்ஷவின் ஆட்சி, படைத்தரப்பின் தலையீடு என்பன மிகவும் இறுக்கமான முறையில் தமிழ்மக்களை அழுத்தியது. தொடர்ந்து வடக்கு மாகாணத்தின் ஆளுநராக இருந்த ஜி.ஏ.சந்திரசிறியின் கட்டளைகளும் ஜனநாயகப் பண்புகளைச் சிதைத்தன என்பதை ஏற்றுத்தானாக வேண்டும்.

எனினும் உடைந்து போன வடபுலத்தை நிர்மாணிப்பதன்மூலமே தமது பாவங்களுக்கு கழுவாய் தேட முடியும் என்ற அடிப்படையில் ஆளுநராக இருந்த ஜி.ஏ. சந்திரசிறியின் உத்தரவுகளும் தீர்மானங்களும் வட பகுதிக்கு கட்டடங்களாக, புனர் நிர்மாணமாக அமைந்தது என்பதையும் கூறுவதே கட்டுரையின் நடுநிலைத் தன்மைக்குப் பொருத்தமாகும்.

இவ்வாறாக சர்வாதிகாரக் கரங்கள் காலத்திற்குக்காலம் தமிழ் மக்களின் தொண்டைக் குழியை இறுக்கிக் கொள்ள மாகாண சபைத் தேர்தலும் தமிழர் அரசும் ஒரு ஜனநாயக சூழலை ஏற்படுத்தும் என்று எதிர்பார்க்கப்பட்டது.

எனினும் தமிழர் அரசாக மலர்ந்த வடக்கு மாகாண சபையைக் குழப்புவதிலும் முதலமைச்சரின் இயங்கு நிலைக்குக் குந்தகம் செய்வதிலும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவையும் முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரனையும் முண்டிவிடுவதிலும் வடக்கு மாகாண சபை ஆளுந்தரப்பு உறுப்பினர்கள் கடுமையாக ஈடுபட்டனர். வடக்கு மாகாண சபை நடவடிக்கைகள் ஜனநாயக விழுமியங்களைமீறும் வகையில் இருந்தது.

ஈற்றில் தமிழ்மக்களின் ஏகோபித்த ஆதரவுக்கும் நம்பிக்கைக்குமுரிய வடக்கின் முதலமைச்சருக்கு எதிராக் நம்பிக்கையில்லாப் பிரேரணையை இலங்கைத் தமிழரசுக் கட்சி கொண்டு வந்ததுதான் மிகப்பெரிய சர்வாதிகாரம் எனலாம்.

அந்தச் சர்வாதிகாரத்தை தமிழ்மக்கள் பேரவை மக்கள் பலத்துடன் தகர்த்தெறிந்ததாயினும் இப்போதும் சர்வாதிகாரப் போக்குகள் பேச்சிலும் நடைமுறையிலும் இருக்கவே செய்கிறது.

ஆக, காலத்திற்குக் காலம் தமிழ்மக்களுக்கு அச்சுறுத்தலாக அமையும் சர்வாதிகாரத்தை அடியோடு வேரறுக்க மக்கள் முற்பட்டால் அன்றி மற்றும்படி வல்லமை கொண்டவர் தனித்தும் அல்லது கூட்டாகவும் தனது ஆதிக்கத்தை தமிழ் மக்களிடம் பிரயோகிக்கவே செய்வர்.

விதுரன்

# ஆலடி மாநாடு

**வா**த்தியார் வைத்திலிங்கம் தலைமையில் ஆலடி மாநாடு கூடியது. மாநாட்டு உறுப்பினர்கள் அனைவரும் ஆலடிக்கு வந்திருந்தனர். இறைவணக்கத்துடன் ஆலடி மாநாட்டை ஆரம்பிப்பம் என்று வாத்தியார் அறிவிக்க அனைவரும் எழுந்து நின்று இறைவணக்கம் செலுத்தி அமர்ந்தனர்.

மீண்டும் வாத்தியார் எழுந்து, சமூக சேவையாளர் சுப்பிரமணியம் பரமநாதன் அவர்களின் மறைவுக்கு இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்துவோம் என்று அறிவிக்க அனைவரும் எழுந்து இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்தி அமர்ந்தனர்.

**கங்காணி:** உள்ளூராட்சி சபைத் தேர்தல்சூடு எப்படி இருக்குதாம்.

**விதானையார்:** சனங்கள் தங்கட பாடு அரசியல்வாதிகள்தான் ஓடித்திரிகினம்.

**மூப்பர்:** இது வழமையான சங்கதிதானே!

**பண்டிதர்:** சாவகச்சேரி நகரசபைக்கு வேட்பு மனுத்தாக்கல் செய்யிற போது நடந்த திருகுதாளத்தைப் பார்த்தியளோ!

**வாத்தியார்:** அருந்தவபாலனுக்கு இது வேணும்.

**மூப்பர்:** ஏன் வாத்தியார் அப்படிச் சொல்லுறியள்.

**வாத்தியார்:** தமிழரசுக் கட்சியின்ர ஏமாற்று நாடகம் இவருக்குத் தெரியாதோ. பாராளுமன்றத் தேர்தலிலும் அவரை ஏமாத்தினவியள். இப்ப விடுவினமோ. கடைசி நாள்வரை வேட்பு மனுத்தாக்கல் செய்யிறதை இழுத்தடித்துப் போட்டு பிளான் பண்ணி அருந்தவபாலனை ஏமாற்றிப் போட்டினம்.

**மூப்பர்:** அவர்கள் ஏமாற்றினதுக்கு அருந்தவபாலன் என்ன செய்ய முடியும்?

**வாத்தியார்:** மூப்பர் அண்ணே! தென்மராட்சியில அருந்தவபாலனுக்கு நல்ல செல்வாக்கு இருக்குது. மக்கள் செல்வாக்கு இருந்தால் ஒரு சுயேட்சைக் குழுவை இறக்கினாலும் வெற்றி பெறலாம்தானே! சாவகச்சேரி நகர சபையில அருந்தவபாலனின்ர சுயேட்சைக் குழு வெற்றி பெற்றால் தமிழரசுக் கட்சி செங்கம்பளம் விரித்து அருந்தவபாலனை வரவேற்றிருக்கும். இப்ப..

**விதானையார்:** தமிழரசுக் கட்சி அருந்தவபாலனை மட்டுமோ ஏமாற்றினது. சித்தார்த்தன், செல்வம் அடைக்கலநாதன் இப்படி எல்லாரையும் தானே.

வடக்கு மாகாண சபைத் தேர்தல் நடக்கும்போது பாருங்கள் தமிழரசுக்கட்சி தனித்துப்போட்டியிடும். புளொட், ரெலோ எல்லாரும் வெளியிலதான்.

**கங்காணி:** அப்ப புளொட், ரெலோ, ஈ.பி.ஆர்.எல்.எப் எல்லாரும் ஒன்று சேருவினமோ.

**விதானையார்:** அப்படியும் நடக்கக்கூடாது எண்டுதான் அவையளையும் பிரித்துப்போட்டினமே.

**பண்டிதர்:** தந்தை செல்வநாயகம் வளர்த்த தமிழரசுக் கட்சி இப்ப எப்படியெல்லாம் ஏமாற்றி அரசியல் பிழைப்பு நடத்துது பார்த்தியளோ.

**வாத்தியார்:** சரி, சரி,



அதிகாலை இரண்டு மணியில் இருந்து வரிசையில் நிற்கும் பரிதாபம் காண்மினே!

அரசியலுக்குள்ள ஆழமா இறங்காதீங்க.

(இப்படி வாத்தியார் கூற ஆலடி மாநாட்டில இருந்த சாத்திரியார் சதாசிவநாதர் ஏதோ யோசனையில இருந்தார். அவரின் யோசனையைக் கலைக்க பண்டிதர் குரல் கொடுத்தார்)

**பண்டிதர்:** என்ன சாத்திரியார் யோசிக்கிறியள்.

**சாத்திரியார்:** என்ன யோசனை... மூன்று நாலு தரப்பு வீட்டவந்து வேட்பாளராக நிற்கச் சொல் லிக் கேட்டவியள்.

**விதானையார்:** அட! சங்கதி அதுதானோ. ஏன்? சாத்திரியார் அந்த நேரத்தில கிராம சபைத் தேர்தலில நின்று உறுப்பினராக வென்றனீங்கள்தானே!

**சாத்திரியார்:** அந்த நேரம் வேற இந்த நேரம் வேற.

**விதானையார்:** இப்ப சுடுகிறதுக்கு ஒருத்தரும் இல்லை. நீங்கள் தேர்தலில துணிந்து போட்டியிடலாம் சாத்திரியார்.

**சாத்திரியார்:** டிசெம்பர் 20 ஆம் திகதி சனி மாற்றம் நடக்குது. எனக்கு இந்தச் சனி மாற்றத்தோட மூன்றாவது சனி ஆரம்பிக்குது.

**மூப்பர்:** அதென்ன சாத்திரியார் மூன்றாவது சனி.

**சாத்திரியார்:** மூப்பர் ஒரு மனிதன்ர வாழ்க்கையில பொங்கு சனி, மங்கு சனி, மரணச்சனி எண்டு மூண்டு சனி வரும். இதில மூன்றாவது சனிதான் இது.

**மூப்பர்:** என்ர பரமபிதாவே! ஆலடி மாநாட்டில உறுப்பினர் ஒருவர் குறையப் போகுதோ!

(இப்படி மூப்பர் கூற ஆலடியில் சிரிப்பு எழுந்தது)

**விதானையார்:** சாத்திரியார் சனி மாற்றத் தைப் பார்க்காமல் வேட்பாளராக நில்லுங்க.

**சாத்திரியார்:** எனக்கு மனதுக்குள்ள ஒரு விருப்பம் இருக்குத்தான். ஆனால் வீட்டில ஒருத்தருக்கும் விருப்பமில்லை. இந்தக் குப்பை அரசியலுக்குள்ள போய் எங்கட நிம்மதியையும் கெடுக்கவேண்டாம் எண்டு என்ர பிள்ளையள் சொல்லுகினம். அதையும் மீறி வேட்பாளராகப் போனால் திரும்பவும் கனடாவுக்கு அனுப்பிப் போடுவினமாம். கனடாவில போய் இருக்க எனக்கு விருப்பமில்லை. என்ன செய்யிறது எண்டு தெரியாமல் இருக்குது.

**பண்டிதர்:** என்னட்டையும் அரசியல் கட்சிகள் வந்து பண்டிதர் ஐயா இந்த முறை யாழ்ப்பாண மாநகர சபையில வேட்பாளராக நில்லுங்க எண்டு கேட்டவியள். நான் தொடுகிலும் வேண்டாம் எண்டு சொல்லிப் போட்டன்.

**கங்காணி:** அப்ப அந்தக் காலத்தில தேர்த் திருப்பணிச்சபைக்கு ஊர் ஊராகச் சென்று காசு சேர்த்த மாதிரி இப்ப உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்கு வேட்பாளர்களைச் சேர்க்கினம் போல...

(இப்படி கங்காணியார் சொல்லிக்கொண்டிருக்க விதானையார் விசுவலிங்கம் தன் முழங்காலைப் பிடித்துத் தேய்த்துக் கொண்டிருந்தார்)

**பண்டிதர்:** என்ன விதானையார் முழங்கால் உளையுதோ.

**விதானையார்:** அதை யேன் கேட்கிறியள். என்ர பேரப்பிள்ளை மோட்டார் சைக்கிளுக்கு லைசன்ஸ் எடுப்பதற்கு மெடிக்கல் செய்ய வேணுமல்லோ. யாழ்ப்பாணம் கச்சேரிக்கு முன்பாக உள்ள சாரத்திய மருத்துவப் பரிசோதனை நிலையத்திற்கு முன்பாக வரிசையில காத்திருந்ததில முழங்கால் நோப்பட்டுப் போய்ச்சுது.

**பண்டிதர்:** யாழ்ப்பாணத்தில இப்பவும் கியூ வரிசைப் பண்பாடு இருக்குதோ.

**விதானையார்:** என்ன சாத்திரியார் இப்படிக் கேட்டிட்டியள். அதிகாலை மூன்று மணிக்குப் போய் வரிசையில நிண்டனான். நூறு பேருக்குத்தான் நம்பர் துண்டு கொடுப்பினம். நான் நூறாவது ஆள் எண்டால் முன்னுக்கு நிண்ட 99 பேரும் எத்தனை மணிக்கு வந்திருப்பினம் எண்டு பாருங்களன்.

**கங்காணி:** நூறு பேருக்குத் துண்டு கொடுத்தால் வரிசையில நிண்ட மிச்சப்பேர்...

**விதானையார்:** அவ்வளவு பேரும் திரும்பிச் செல்லவேண்டியதுதான்.

**சாத்திரியார்:** அப்ப அவ்வளவு பேரும் எப்ப நம்பர்த்துண்டு எடுக்கிறது.

**விதானையார்:** அடுத்த நாள் அதிகாலை 2 மணிக்கு வந்து வரிசையில நிண்டால் எடுக்கலாம். நம்பர் துண்டும் காலை 8.30 மணிக்குப் பிறகுதான் கொடுப்பினம். அதுவரை கால்கடுக்க நிண்டுதான் ஆக வேணும்.

**வாத்தியார்:** இதென்ன அநியாயம். பக்கத்தில கச்சேரி, அருகில யாழ்ப்பாண அரசாங்க அதிபரின்ர குவாட்டஸ். ஆனால் இஞ்ச சனங்கள் அதிகாலை 2 மணியில இருந்து காலை 9 மணிவரை ஏழு மணித்தியாலங்கள் நிற்கினம் எண்டால் எங்கட அரச நிர்வாகத்தை என்னெண்டு சொல்லுறது.

**விதானையார்:** வாத்தியார் அதுமட்டுமல்ல மருத்துவப் பரிசோதனை செய்யிற இடத்திலும் ஒரு பத்துக் கதிரைதான் கிடக்குது. பத்துப்பேர் இருக்க மிச்சம் 90 பேரும் கால்கடுக்க நிக்கிறது எண்டால் பாருங்களன்.


**பண்டிதர்:** நல்லூர் முருகா! இப்படியொரு கர்மா ஒருத்தருக்கும் தெரியாமல் நடக்குது. வாத்தியார் ஒரு தீர்மானம் உடன நிறைவேற்றுவம். சாரதிய அனுமதிப்பத்திரத்திற்கான மருத்துவப் பரிசோதனையின் போது மக்களுக்கு அசௌகரியம் ஏற்படாமல் பொருத்தமான நடைமுறைகளைப் பின்பற்ற வேணும். யாழ்ப்பாண அரச அதிபர் நேரடியாகச் சென்று இந்த நிலைமையைப் பார்வையிட்டு பொருத்தமான நடவடிக்கையை எடுக்கவேணும் எண்டு பண்டிதர் கொண்டு வந்த தீர்மானத்தை அனைவரும் ஏகமனதாக நிறைவேற்ற அதற்கு ஆதரவு தெரிவிப்பது போல ஆலடிப் பிள்ளையார் கோயில் மணியும் ஒலிக்க ஆலடியில் இருந்தவர்கள் எழுந்து கோயிலுக்குச் சென்றனர்.

ஆதித்தன்




ஹாய் குட்டீஸ்!
எமது சிறுவர் அரங்கம் பகுதியில் உங்கள் ஆக்கங்கள் இடம்பெற வேண்டும் என்றால் உங்கள் சுய ஆக்கங்களை அனுப்பி வையுங்கள்.

## பட்டுச் சட்டை போட்ட பூச்சி!



"அட... அங்கே அடுப்படியில் எடுபிடி வேலை செய்யிறதுக்கு எதுக்கு புது டிரெஸ்? அப்படி திருவிழாவுக்கு வருவான்னு சொன்னேன்" என்று கிளிக்குஞ்சு சொன்னதும் எல்லாம் சிரிச்சாங்க... புழுவுக்குக் கோபமும் அழுகையுமா இருந்துச்சு. மெதுவா கிளையில் ஏறி. ஒரு ஓரமா படுத்துக்கிச்சு. அழுது அழுது புழுவைச் சுத்தி கண்ணீர்க் குளமே உருவாகிடிச்சு. அடிச்ச காற்றுல தூசிகளும் பறந்து வந்து கண்ணீரில் விழுந்து மிதந்துச்சு. இரவு நெருங்க நெருங்க வீசின குளிர் காற்றில அந்தக் கண்ணீர் எல்லாம் கெட்டியாகி, புழுவின் மேல ஒட்டிக்கிச்சு. கண்ணீர் கூட்டுக்குள் அடைபட்ட புழு காணாமல் போயிடுச்சு.

திருவிழாவுக்கு நாள் நெருங்க நெருங்க காட்டில் பரபரப்பு அதிகமாச்சு. தூக்கணாங்குருவி ராத்திரி பகலா உழைச்சு உழைச்சு துணிகளைத் தைச்சு தைச்சு கொடுத்துட்டே இருந்துச்சு.

புதுத் துணியை வாங்கின விலங்குகள் எல்லாம் அதை ஒருமுறை போட்டுப் பார்த்து ரிகர்சலும் நடத்தினாங்க... இந்த கலாட்டாவில், அந்தப் புழு என்ன ஆச்சு, எங்கே போச்சுன்னு யாருமே தேடலை.

திருவிழா நாளும் வந்துச்சு. எல்லா விலங்குகளும் புது டிரெஸ், மேக்கப் போட்டு ஜோரா தயாராகிக் கிளம்பினாங்க. சிங்கராஜாவின் குட்டிகளுக்கு அழகழகான டிரெஸ்களைப் போட்டு மேடையில் உட்கார வெச்சிருந்தாங்க.

அப்போ, பட்டு டிரெஸ் போட்டுட்டு ஜோரா பறந்து வந்து, அழகான ரோஜாப் பூ மேலே உட்கார்ந்தது ஒன்னு. சிங்கராஜா உட்பட எல்லோரின் பார்வையும் அந்தப் பக்கம் திரும்புச்சு. எல்லோரும் வாயைப் பிளந்து பார்த்தாங்க பின்னே... நீலநிறப் பட்டாடையில், தங்க நிற ஜிகினாக் கோடுகளோடு, வைரத்தை ஒட்டி வைச்ச மாதிரி ஆங்காங்கே புள்ளிகளோடு தகதகன்னு மின்னினா.

(தொடரும்...)


## பொன் மொழிகள்

- ஒருவர் உன்னைத் உயர்த்திப் பேசும் போது விழிப்போடு இரு. ஒருவர் உன்னைத் தாழ்த்திப் பேசும் போது ஊமையாய் இரு. புகழ்ந்து பேசும் போது செவிடனாய் இரு. எளிதில் வெற்றி பெறலாம்.
- விட்டுக் கொடுங்கள் விருப்பங்கள் நிறைவேறும். தட்டிக் கொடுங்கள் தவறுகள் குறையும். மனம் விட்டுப் பேசுங்கள் அன்பு பெருகும்.
- நண்பரின் சட்டைப்பையில் துவாரம் இருக்கும் போது அதில் நாணயங்களைப் போடுவதன் மூலம் அவருக்கு உதவி செய்ய முடியாது.
- வாழ்க்கையில் மாறாதது மாற்றம் மட்டுமே.
- வெற்றி என்பது நிரந்தரமுமல்ல, தோல்வி என்பது முடிவுமல்ல!
- நல்ல சொற்கள் நம்மைச் சிந்திக்க வைக்கின்றன. நல்ல செயல்கள் நம்மை மௌனமாக்குகின்றன. அவசரம் ஆளை மட்டுமல்ல, அலுவலையும் கெடுக்கிறது.

நூறு வார்த்தைகள் வலியை ஏற்படுத்தாது. ஆனால், ஒரு நல்ல நண்பனின் மௌனம் இதயத்தில் அதிக கண்ணீரை ஏற்படுத்தும். அன்புள்ள இடத்தில்தான் ஆண்டவன் இருக்கிறான்- காந்தியடிகள்

க. சைந்தவி
கோண்டாவில்.

## நலன்... நீலன்



பகவான் ஸ்ரீராமசந்திர மூர்த்தி இலங்கை செல்ல சுக்ரீவன் தலைமையில், வானர படைகளின் உதவியோடு கடலில் பாலம் அமைக்கிறார்.

வானர படைகள் கல், பாறை, மரம், மலை என்று பெயர்த்து கடலில் போடுகின்றனர். ஆனால் எத்தனை போட்டாலும், கடலின் ஆழத்தால் அது அத்தனையும் மூழ்கி விடுகிறது.

துவண்டு போன சுக்ரீவன் பகவானிடம் வந்து, கடலின் ஆழம் மிகவும் அதிகமாக உள்ளது. பாலம் கட்டி முடிக்க எங்கள் சக்தியால் முடியாது போலிருக்கிறது..... என்ன செய்வது என்று வணங்கி கேட்டார்.

அதற்கு ஸ்ரீராமச்சந்திர மூர்த்தி... அங்கு விளையாடிக் கொண்டிருந்த நலன் நீலன் என்ற இரண்டு குட்டி குரங்குகளை காட்டி, கடலில் போடும் ஒவ்வொன்றையும் அவர்களை தொட்டு செய்து போடுங்கள் என்று கூற, அப்படியே சுக்ரீவன் செய்தான்.

(தொடரும்)



## மனித உடல் பற்றிய தகவல்கள்

1. மனிதனின் சராசரி நாடித்துடிப்பு - நிமிடத்திற்கு 72 தடவைகள்.
2. மிக நீண்ட எலும்பு/பெரிய எலும்பு- தொடை எலும்பு
3. மிகச்சிறிய எலும்பு- காதிலுள்ள எலும்பு
4. எலும்புகள் அதிகமுள்ள பகுதி- கைகள்
5. எலும்புகளின் மொத்த எண்ணிக்கை - 206
6. விலா என்புகளின் எண்ணிக்கை - 24
7. மிகப்பெரிய சுரப்பி - கல்லீரல்
8. உயிரற்ற கலங்களால் ஆக்கப்பட்ட பகுதி - மயிர்
9. முதலில் இறக்கும் பகுதி - மூளையின் கலன்கள்
10. மிக வன்மையான பகுதி - பல் மிளரி

அ. அன்பரசன்
தரம் -09
யா/வரணி மத்திய கல்லூரி.

## பொது அறிவு

1)வேலைக்கார தேனீக்களின் தோலில் காணப்படும் சுரப்பி- மெழுகு சுரப்பி
2)இரத்த சோகைக்குக் காரணமான விற்றமின்- விற்றமின் பி 12
3)வறண்ட நிலத்தாவரம்-சப்பாத்திக்கள்ளி
4)இலைகள் முட்களாக மாறியுள்ள தாவரத்திற்கு எடுத்துக்காட்டு-சப்பாத்திக்கள்ளி
5)தூண் வேர்கள் கொண்ட தாவரம்- ஆலமரம்
6)சவுக்கில் இலைகள் எவ்வகை மாற்றமடைந்துள்ளன- செதில் இலைகளாக
7) மறுசுழற்சி செய்யும் விலங்கினம்- மண்புழு
8)இறப்பர் மரத்தின் தாவரவியல் பெயர்- ஹீவியா பிரேசிலியன்சிஸ்
9)DDT என்பது ஒரு பூச்சிக்கொல்லிக்கு ஓர் உதாரணமாகும்.
10) உமிழ்நீரில் காணப்படும் நொதி - டயலின்

குழந்தைகளே! மறைந்து இருக்கும் உருவத்தை கண்டுபிடியுங்கள் பார்க்கலாம்.










காணாமல் போனவர்கள் நிலை?

சமூகத் துரோகிகளை எதிர்த்துப் போராடப் போகிறேன்?

விடுதலைப்புலிகள் இருந்திருந்தால் கூட்டமைப்பின் நிலை?

**பரமேஸ் — வதிரி**

**விடுதலைப்புலிகள் இருந்திருந்தால் கூட்டமைப்பின் நிலை?**

கூட்டமைப்பின் நிலை மாறிவிட்டது. விடுதலைப்புலிகள் அமைத்த கட்டமைப்பிலா கூட்டமைப்பு இப்போது செயற்படுகிறது என்கிற கேள்வி தமிழ் மக்கள் மனங்களில் எழ ஆரம்பித்து விட்டது.

புதிய அணி ஒன்று உருவாக வேண்டிய தேவை இருக்கிறது. ஆனால் விடுதலைப்புலிகள் இருந்திருந்தால் புதிய அணி உருவாகி இருக்குமா? என்ற கேள்வியை சிலர் கேட்கிறார்கள்.

அது உண்மைதான். விடுதலைப்புலிகள் இருந்திருந்தால் கூட்டமைப்பின் பாதை மாறியிருக்காது. அப்படி மாறியிருந்தால் அங்கு இருப்பவர்களின் நிலை என்ன என்று அவர்களுக்கே தெரியும். புலிகள் இருந்திருந்தால் ஆட்டம் போடுபவர்கள் அடங்கி இருந்திருப்பர். புதிய அணிக்கு அவசியமிருக்காது.

**சுதன் — குப்பிளான்**

**அரசியல் அமைப்பு சீர்திருத்தம் கூட்டமைப்பிற்கு வெற்றியா? தோல்வியா?**

தமிழர்கள் எப்படி நாசமறுந்தாலும் பரவாயில்லை. அரசுக்குக்கொடுத்த வாக்குறுதிப்படி நடந்து கொள்கிறது கூட்டமைப்பு. எதுவுமே இல்லாத ஒன்றை எமக்கு பெற்றுத்தர எம் தலைமையே அடம்பிடிக்கிறது என்றால் எம் தலைமையின் உள்ளார்ந்த சிந்தனை என்ன என்பதை அன்பார்ந்த தமிழ் சமூகம் சிந்திக்க வேண்டும். இப்போது சிந்திக்காமல் எல்லாம் கிடைத்த பின்பு இதில் ஒன்றும் இல்லையே என்று நெஞ்சில் அடிப்பதை விட இப்போதே இவர்களின் நெத்தியில் அடிப்பது மேல்.

**சயன் — யாழ்ப்பாணம்**

**தமிழரசுக் கட்சி அடி புடி பற்றி?**

பங்காளிக் கட்சிகளை ஓரங்கட்டி தங்களை நிலை நிறுத்திய தமிழரசுக்கட்சி இப்போது பாம்பு பாம்பைத் தின்னும் கதையாக தமிழரசுக் கட்சி உறுப்பினர்களையே ஒதுக்க ஆரம்பித்து விட்டது.

அதற்கு உதாரணம் சாவகச்சேரி வேட்பு மனு. அவர்கள் இன்னொரு புதிய அணியை (சுயேட்சை) நிறுத்தக்கூடாது என்ற காரணத்திற்காக கடத்திக் கடத்தி கடைசி நிமிடத்தில் வெட்டி விட்டார்களே இதுதான் தமிழரசுக் கட்சியின் பக்கா இராஜதந்திரம்.

**நண்பன் — யாழ்ப்பாணம்**

**அறுபது வயதில் காதலிப்பது தவறா?**

ஒரு தவறும் இல்லை. ஆனால் காதலிப்பது உங்களின் மனைவியாக இருக்கும் வரை.

**எஸ் - கஜன்**

**காதலுக்கும் நட்புக்கும் இடையில் என்ன வித்தியாசம்?**

உங்கள் கேள்வியின் மூன்றாவது அடிக்கு கை போனால் காதல். போகவில்லை என்றால் நட்பு. பதில் புரியவில்லையென்றால் கேள்வியை அழுத்தி வாசிக்கவும்.

**சுதர்மன் — வல்வெட்டித்துறை**

**காணாமல் போனவர்கள் நிலை?**

வருவார்கள் என்ற நினைப்பு- நம்பிக்கை இன்றுவரை காணாமல் போனவர்களின் உறவுகளை உயிருடன் வாழவைத்துக் கொண்டிருக்கிறது.

**விஜய் — உடுப்பிட்டி**

**சுனாமி என்றால் என்ன?**

ஆழ்கடலில் ஏற்படும் நில அதிர்வால் ஏற்படும் பாரிய அலை. ஆழம் கூடிய நடுக்கடலில் இருந்து ஆழம் குறைந்த தரையை நோக்கி பயணிக்கும் பொழுது அதன் வேகமும் உயரமும் அதிகரிக்கின்றது. இவை கரையை அடையும் பொழுது இராட்சத அலைகளாக மாற்றம் பெறுகின்றன. நீர் நிறைத்த பாத்திரத்தின் நடுவே சிறு கல்லை போடும் பொழுது ஏற்படும் மாற்றம் போன்றதே.




**கோபு — திடலூர்**

**சமூகத் துரோகிகளை எதிர்த்துப் போராடப் போகிறேன்?**

போராடலாம். தேசத்துரோகி என்ற பட்டம் உங்களுக்குத்தான் கிடைக்கும். குண்டு வைத்தார்கள், குழிபறித்தார்கள் என்று எம்மவர்களே போட்டுக் கொடுத்து உள்ளே வைத்து போடவும் கொடுப்பார்கள். என்ன நான் சொல்வது புரியவில்லை போல. சி.சி. அவர்களைவர்கள் போட்டுக் கொள்ளட்டுமே.

**தரன் — மாதகல்**

**தமிழரசுக் கட்சி உண்மையிலேயே பங்காளிக் கட்சிகளை ஓரங்கட்டுகிறதா?**

அது அப்பட்டமாகத் தெரிகிறது. கொள்கையால் பிரிவோமே அன்றி பதவிக்காய் பிரியமாட்டோம் என அறிக்கை விட்டு அடுத்த மூன்று நாட்களில் தமிழரசுக் கட்சி நம்ப வைத்து ஏமாற்றி விட்டது என அறிக்கை விட்டார் புளோட் தலைவர் சித்தார்த்தன்.

கூட்டமைப்பு என்ற போர்வையைப் போர்த்திக் கொண்டு தமிழரசுக் கட்சி தமிழருக்குச் செய்யும் துரோகங்களில் இதுவும் ஒன்று.

**யுபா — கரவெட்டி**

**உங்கள் அபிப்பிராயப்படி யார் வெல்லுவார்?**

யார் வெல்லக் கூடாது என்பதைக் கேளுங்கள் சொல்கிறேன். யார் வெல்வார்கள் என்பதை மட்டும் கேட்காதீர்கள்.

**தேனு — முல்லை**

**காதலுக்கு பெற்றோர் எதிரியாய் இருப்பது சரியா?**

காதலுக்கு கண் இல்லை என்கிறார்கள் காதலர்கள். கண் இல்லாத ஒன்றை பெற்றோர்களால் எப்படி ஏற்க முடியும்.

**தனுஷ் — குப்பிளான்**

**புருஸ்லி மரணம் பற்றி?**

மனைவியின் துரோகத்தின் உச்சம்.

**மதி — வதிரி**

**எடுத்ததற்கெல்லாம் கை ஓங்கினால் என்ன ஆகும்?**

எடுத்ததற்கெல்லாம் கையோங்கும் இன்னொருவரிடம் ஓங்கினால் அவரின் கை ஓங்கும். அதன் பின் யாரிடமும் கை ஓங்காது.

**சுபன் — கொக்குவில்**

**இலங்கையில் நல்ல ஆட்சி நடக்குமா?**

ஏட்டுச் சுரைக்காய் கறிக்கு உதவாது என்பதை நீர் படிக்கவில்லை போலும்.


**கவி — மிருசுவில்**

**பெண் அடிமை என்பது?**

அன்று படிக்காத பெண்கள் கருத்துச் சொல்லும் போது படிக்காத கழுதை கருத்துச் சொல்கிறது என்ற அதே சமூகம் இன்று படித்த பெண் கருத்துச் சொல்லும் போது படித்து விட்டோம் என்ற திமிரில் பேசுகிறாள் என்று கூறும் கேடுகெட்ட உலகத்தில்தான் நாம் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம்.



# கவிதைக் கலசம்



## எம்மவருக்காக

காலங்கள் கடந்தாலும்
நினைவுகள் நீங்கவில்லை...
உயிரோடு கலந்து
உணர்வோடு ஒன்றியவை அவை...
குருதி பல குடித்து
பசியாறிய தேசம் இது
மண்ணோடு குருதியும்
மணந்து கொண்டிருக்கிறது
பிணம் தின்னி கழுகுகள்
வட்டமிட்டு திரிந்த வானம் இது
கார்த்திகை மாதங்களில்
கறுத்து கண்ணீர் வடிக்கின்றது
கல்லறைகளும் கடவுளாகின்றன
ஒரு இனத்தின் கனவுகள்
காக்கப்பட்டு கொண்டிருப்பதால்

த.மோகனரூபன்
சுழிபுரம் கிழக்கு

## "போவது சுடுகாடு!"

நல்லவற்றை எப்போதும் "நாடு"
தீயவற்றை எந்நாளும் "சாடு"
தாண்டாதே நீதி எனும் "கோடு"
தாண்டினால் உனக்கே வரும் "கேடு"
புல்லைத்தின்னும் பாலைத்தரும் "மாடு"
புதிது புதிதாய்க் கவிதை "பாடு"
காதில் பெண்கள் அணிவது "தோடு"
கையில் உள்ளதைக் கீழே "போடு"
இலங்கை அழகியதோர் "நாடு"
இப்போது தமிழர்க்கது "கேடு"
நோய் தீர்க்கும் உள்ளிப் "பூடு"
நுண்ணறிவில்லாதவன் "மோடு"
வங்கியில் அடகுவைத்தால் "ஈடு"
வயலில் வைப்போம் நெல்லுச் "சூடு"
பெட்டைக்கோழி என்றால் "பேடு"
போட்டியில் வெல்லவேண்டின் "ஓடு"
பள்ளத்துக்கு அடுத்து வரும் "மேடு"
பறவை கட்டி வாழும் "கூடு"
கட்டிவாழ்வோம் அழகிய "வீடு"
கடைசியில் போவது சுடு "காடு"

கந்தபேரின்பம்
தீவான்

## மழையோடு காதல்

சருகுகள் உதிர்க்கும்
ஒரு கோடையில் கார்கூந்தல் விரித்து
அவனை ஸ்பரிசம் செய்து போனாள்
அவள் காதல் மழையில்
நனைவதற்காய்
"வழிமேல் விழி"வைத்து காத்திருந்தான்
நீண்டநாள்
அவன் பக்கம் வரமறுத்துப் போனாள்
ஒருநாள்
யாரும் அறியாமல்
திருடியைப் போல் வந்தாள்
வாடும் பயிருக்கு வான் மழையாய்
அவன் கண்களில் ஆனந்தம்
அவன் இதயத்தில் பேரின்பம்
இரவெல்லாம் அவனை
இன்பக் கடலினில்
எல்லைவரை இழுத்துச் சென்றாள்
காதலின் சுவையில்
களவி மயக்கத்தில்
இரவெல்லாம் பாடி நின்றான்
இரவின் நிசப்தத்தை கிழித்தபடி
அவன் முனகல்
விட்டுவிட்டு
அவனை தொட்டணைத்து
சுகம் சேர்த்தாள்
விடியலில்
அவள் விலகிப் போனாள்
பிரிவைத் தாங்காமல்
மூச்சடங்கிக் கிடந்தான்
நீர்க்கரையில்

மா.சிவா
கரவெட்டி மேற்கு

## வேடம் கலைந்தது

அது அவர்களால் நெய்யப்பட்ட
அழகிய வீடு
இப்போது அதற்கு
வீடு என்ற பெயர் மட்டும்தான்
வேறொன்றுமில்லை அங்கு

அலைகளாய் அள்ளித் தெளித்த அன்பு
இராட்சத அலையாய் மாறியதை
எண்ணி எண்ணி–அவன்
புலம்பிக் கொண்டிருக்கிறான்

முன் அறை உனக்கு
பின் அறை எனக்கு
தாய் அறை அவனுக்கு
இப்படிப் பிரிக்கப்பட்டிருந்தது
ஆனால் பிரிபடவில்லை

முறையற்ற வரவுகள்
முழுவதும் முழுமைபெற
தந்தை கைப்பொம்மையானான்
தாய்! இல்லாவீடு
தாண்டவமாடியது

முன் அறை உனக்கு
பின் அறை எனக்கு
தாய் அறை அவனுக்கு
வாக்குறுதிகள் இறுதி நிமிடத்தில்
தவிடு பொடியாகிட
வீடு மொத்தமும் எமக்கு மட்டுமே
அரசாட்சி செய்ய தொடங்கியது அணி

உள்ளத்தால் வேறுபட்டாலும்
வேடத்தால் ஒன்றுபட்டவர்
வேடம் கலைந்திட
தமிழரை நாதியற்றவராக்கிவிட்டார்
நாடு தகுமோ?

மாவை. நா.கஜேந்திரன்

# மௌனத்தின் தேடல்– 381



## அமைதியின் ஆர்ப்பாட்டம்

இளமையைத் தொலைத்து
இருந்த உறவுகளையும் இழந்து
கோசங்கள் கோர்த்து
விடியலை வீதியில்
வரைபடமாக்கி வீணாக்கியது போதும்
எம் தேசத்தின் எதிர்கால
எதிர்பார்ப்புக்களான
உம் மாற்றத்தில் மன்றம்
மௌனிப்பது ஏனோ?
போகங்களை கண்ணீராக
மட்டும் வெளிக்காட்டத் தெரிந்த
எம்மவர்களுக்கு இனி
எத்தலைமைகள்
தோள்கொடுக்குமோ?
இவ் அமைதியின் ஆர்ப்பாட்டத்தில்

கிண்ணியா
நாபீர்

## போராட்டம்

தள்ளாத வயதிலும்
தனியே வீதியில்
இறங்கிப் போராட்டம்
இந்தப் பெரியவரின்
கோரிக்கையை
நிறைவேற்றுமா
நல்லாட்சி அரசாங்கம்

சு.ஜெயரூபன்
பருத்தித்துறை

## வஞ்சம்

தரம் கெட்ட
ஒரு தலைமையின்
தலைகீழ்
ஆட்டமும்
தொடரும்
துரோகமும்
தமிழ் இனத்தின்
வலி நிறைந்த
போராட்டங்களை
வழியெங்கும்
வாழவைத்து
வேடிக்கை பார்க்கிறது

நல்லூர்
தேன்நிலா

## எம்மவர் வேண்டுவதிதுவே

சிறந்த தலைமைத்துவம்
நிறைந்த கிணறு நீர்
அள்ள அள்ளக் குறையாது
யாரும் தலையிட முடியாது
குரோதங்கள் விரோதங்கள்
குறைந்திடும்
ஆளுமை சிறந்து விளங்கிடும்
அனைத்தும் சுமுக நிலை
அடைந்திடும்
எம்மவர் வேண்டிடும்
நிலையிதுவே

ம.தவமணி
திருநெல்வேலி

## ஏந்திடுமா?

புல் பூத்த பனிமலரே
பனியிடை ஒளிந்துகளே
ஒளியீர்த்த பனித்துளியே
உன் துளியில் என்னவள்
பூ முகமே
பூத்துச் சிரிக்கிறாள் எனைப்பார்த்து
புலம்பி தவிக்கிறேன் அவள் நினைவில்
நினைவினில் நிழலாடும் அவள்
நிஜத்தினின் என்னெதிரினில்
கண்ட கண்களில் கண்ணீர்த்துளிகள்
ஏந்திடுமா அவள் கரங்கள்

ரி.விஜிதா
மயிலிட்டி

## காத்திருக்கிறேன்

தமிழுக்காய் துணிந்த– என்
தலைமகனைக் காணவில்லை
காலங்கள் உருண்டோடியும்
காத்திருக்கிறேன்
நான் சுமந்த மகன்
எனைச் சுமக்க வருவானென...

கு.அமுதீசன்

## ஆசனம் மீதே பார்வை

மீட்சியே இன்றிப் பிள்ளை
மீண்டுமே வருவா னென்று
சாட்சியாய் இருக்கும் தந்தை
சாலையில் போர் தொடுக்கும்
காட்சியைக் காணும்வேளை
கண்களே குளமாய் ஆக
ஆட்சியில் இருப்போர் எல்லாம்
ஆசனம் மீதே பார்வை

நயினை இராகுலன்

## என்று தணியும் ஏக்கம்

மூத்த பிள்ளை
துயிலுமில்லத்திலே...!
அடுத்தவனைக் காணவில்லை
அகிலத்திலே...!
இருந்த ஒற்றைப் பிள்ளையும்
சிறையிலே!
ஊன்றுகோல்
உதவியிலே!
வாழும் தந்தையிவன்
உணவொறுப்பிலே!
ஆனால்
அரசியல்வாதிகளோ!
தேர்தல் நினைப்பிலே...!
தெருச்சண்டையிலே...!

சு.பா.சுபன்
சுழிபுரம் மேற்கு

# மௌனத்தின் தேடல் –382



**அன்பு வாசகர்களே !**

உங்கள் எண்ணத்தில் தோன்றும்
கவிதைகள் மற்றும் வியாசர்
பதிலுக்கான கேள்விகளை
ஆசிரியர்
'மௌனத்தின் தேடல்'
சங்குநாதம்
இல3,2ம் ஒழுங்கை,
பிறவுண்வீதி,
யாழ்ப்பாணம்.

எனும் முகவரிக்கு 20.12.2017ஆம் திகதிக்கு முன் அனுப்பிவைக்கவும்.

குறிப்பு :- குறைந்த வரிகளில் அமையும் கவிதைகளுக்கே முன்னுரிமை வழங்கப்படும்.

-ஆசிரியர் -

## சிறுகதை

# மாப்பிள்ளை (ழை)

அடைமழையிலும் புறோக்கர் சண்முகம் கடமையே கண்ணாக ஒரு கட்டு சாதகங்களுடன் சாரதாவின் வீட்டு வாசலில் நின்று அவலக்குரல் எழுப்பினார். மழை இரைச்சலில் வீட்டுக்குள் இருந்தவர்களுக்கு சண்முகத்தாரின் அவலக்குரல் கேட்காதுபோகவே கத வைத் திறந்து கொண்டு வந்தவரைக் கண்ட நாய் மழையில் நனையாமல் வீட்டு தாழ்வாரத்தின் ஓரமாக நின்று குரைத்தது. நாயின் சத்தத்தைக் கேட்ட நம்ம கதையின் நாயகி அகிலா, தரையை மட்டும் சற்று வெளியில் நீட்டி கேற்றடியை ஆராய்ந்தவளின் முகம் பிரகாசமாகி மழையிருட்டையும் விரட்டியடிக்குமளவுக்கு ஒளிர்ந்தது.

அம்மா சண்முகம் அங்கிள் வந்திருக்கிறார் என்றாள் சந்தோசமாக. வெளி விறாந்தைக்கு வந்த அகிலாவின் அம்மா சாரதா சண்முகத்தாரை வரவேற்றபடியே பிளாஸ்டிக் கதிரையை கதைப்பதற்கு இலகுவாக போட்ட படி பிள்ளை மனிசன் மழையில் நனைந்து வருகுது... ரீயைப்போட்டுக் கொண்டு வா என்றாள்.

என்ன மழை சனியன் பிடித்தது விட்டுத் தொலையிதில்லை என்று புறுபுறுத்தவாறே குடையைச் சுருக்கி ஓரமாக வைத்தார் சண்முகத்தார். என்ன அண்ணை போனமுறை வரும்பொழுது சனியன் பிடித்த மழை ஒருக்கா பெய்யிதில்லை என்று சொன்ன நீங்கள் இப்ப இப்படிக் கதைக்கிறீங்கள் என்றாள் சாரதா.

எடி பிள்ளை தேர்தல் வரும்போது வீட்டுக்காரர் எங்கட தலைவர் என்று சொல்ல நல்லது என்று வோட்டுப் போட்டுவிட்டு பிறகு எங்கட கூட்டமைப்புக்கும் விடுதலைப்புலிகளுக்கும் நான் அறிய ஒரு தொடர்புமில்லை என்று சொல்லும்போது ஏன்டா போட்டுத் தொலைச்சம் என்று அலுத்துக்கொள்ளுகிறதும் திரும்ப தேர்தல் வரும்பொழுது இவற்றையெல்லாம் மறந்து அவர்கள் வாயில் புலிகளின் தலைவர் எங்கட தலைவர் ஆகிறதும் அவர் வழியில் செல்கின்றோம் என்று சொல்ல திரும்ப அவங்களுக்கே வோட்டுப் போடுறதும்...

தான் என்ன சொல்ல இந்த மனுசன் என்ன சொல்ல வருகிறது என்று தெரியாமல் சாரதா பேந்த பேந்த முழிப்பதைப் பார்த்த சண்முகத்தார் பயப்படாத உன்னை ஒன்றும் தனியாக சனியன் பிடிக்காது. ஏனென்றால் ஒட்டுமொத்த தமிழ்ச்சனத்தையும் வீட்டின் பெயரில் சனியன் பிடித்து ஆட்டிக்கொண்டிருக்கிறான். நான் வந்த விசயத்துக்கு வாறன் என்று தனது தொழிலை ஆரம்பித்தார்.

சண்முகத்தார் காட்டிய சாதகங்கள் ஒன்றும் சாரதாவுக்கு திருப்தியைத் தரவில்லை. எப்படித் திருப்தியைத் தரும்? தன்னுடன் படித்தவளெல்லாம் மகள்மாரின் பிள்ளைப்பெத்து பார்க்க என்று லைன்டன், பிரான்சு என்றெல்லாம் போயிட்டுவர தான் மட்டும் உள்ளூர் மாப்பிள்ளைக்கு கட்டிக்கொடுத்துவிட்டு வெறும் ஆயா வேலை பார்த்துக்கொண்டிருக்க முடியுமே என்று சிந்திக்கும் சாரதாவுக்கு சண்முகத்தார் காட்டிய உள்ளூர் மாப்பிள்ளைமாரின் சாதகங்களைப் பார்த்தால் எப்படித் திருப்தி வரும். ஏதோ கடவுள் புண்ணியத்தில் பெட்டையும் படிப்பைக் குழப்பியதால் இருபத்தியிரண்டு வயதிலேயே கலியாணத்தைப் பேச முடிந்தது. இல்லாவிடில் படித்து முடிய பேசுவதென்றால் வெளிநாட்டு மாப்பிள்ளைகளுக்குப் பேசமுடியுமோ? இருந்தும் என்ன பயன் அவங்கள் முருங்கக்காய்மாதிரி மெல்லிய பொம்பிளையல்லோ கேட்கிறாங்கள்.

இந்த ஒரு விசயத்திலதான் சாரதா கொஞ்சம் பிழை விட்டுட்டா. மகள் வீட்டில் இருந்து சாப்பிட்டுச் சாப்பிட்டு மாரித்தவக்களை மாதிரி கொஞ்சம் உப்பித்தான் போனாள். பிறகு அங்கமாறி இங்கமாறி ஒரு மாதிரி முருங்கக்காய் மாதிரி இல்லாவிட்டாலும் புடலங்காய் அளவுக்கு வருவதற்கு இடையில் வயது இருபத் தெட்டாயிடுத்து.

மகளும் தாயும் எப்பாடு பட்டாவது வெளிநாட்டு மாப்பிள்ளைதான் என்பதில் குறியாக இருந்தார்கள். நல்லூர்த் திருவிழாக்காலங்களில் வெளிநாட்டில் இருந்துவரும் புலம்பெயர்ந்தவர்களைப் பார்த்து கற்பனையில் மிதப்பாள் சாரதா. அகிலாவோ அதைவிடக் கொஞ்சம் உயரமாகக் கற்பனையில் பறப்பாள்.

புறோக்கர் சண்முகத்துக்கோ அலுத்துப்போய் விட்டது. இருந்தாலும் தனது தொழிலுக்கே சவாலாக எடுத்துக் கொண்டு அவரும் விடாக்கண்டன் கொடாக்கண்டனாக பலவருடங்களாக அலைந்து கொண்டிருக்கின்றார்.



அடுத்த தீபாவளிக்கிடையில்! வருசப்பிறப்புக்கு முதலில்! தீர்வு வரும் என்று அரசியல்வாதிகள் போல் அறிக்கையும் விட்டுக்கொள்வார். இருந்தும் சாதகங்கள் வரும். ஆனால் சரி வராது. இடையிடையில் எத்தனையோ உள்ளூர் மாப்பிள்ளைகள், அரசாங்க உத்தியோகங்கள் வந்தும் சாரதாவும் அகிலாவும் மசியவில்லை.

குடும்பத்தில் ஆம்பிளைப்பிள்ளை வெளிநாட்டுக்குப் போகிறதைவிட பெண்போனால்தான் குடும்பம் தழைக்கும் என்று யாழ்ப்பாணத்தில் ஒரு ஐதீகம். இதில் ஐதீகம் என்றால்? இருபது இருபத்தைந்து வருட தமிழரின் பாரம்பரிய சிந்தனை. அப்ப ஐதீகம்தான் என்று சொல்கிறதுதானே சரி. இருநூறு முந்நூறு வருடமாக கோயிலில் கிடாய் வெட்டுகிறது போல.

தேநீர் ஊற்றிக்கொண்டிருந்த அகிலாவுக்கு இம்முறையும் வெளிநாட்டுச் சாதகம் வரவில்லை என்பது அம்மாவினதும் சண்முகத்தாரினதும் கதைகளிலிருந்து விளங்கிக்கொள்ள தேநீருக்குப் போட எடுத்த அங்கர் மாவை வைத்துவிட்டு வெறும் தேநீரே போட்டுக் கொண்டாள். சண்முகத்தாருக்கு கறுப்பு தேநீரைக் கண்டதுமே தானும் சாரதாவும் கதைத்துக்கொண்டவை அகிலாவுக்கும் கேட்டுவிட்டது என்று புரிந்தது. அவர் இப்படி எத்தனை கறுப்பு வெள்ளைத் தேநீரைக் கண்டுவிட்டார். தான் வரும்போது அங்கிளாக வந்ததும் இனி போகும் போது செவிட்டுப் புறோக்கராக போகப் போவதும் அவருக்குத் தெரியும்.

சண்முகத்தார் நினைத்தது போலவே அவர் கேற்றைத் தாண்டும்போது அகிலா சொல்வது அவர் காதில் விழுந்தது. இந்தச் செவிட்டுப் புறோக்கருக்கு எத்தனை தடவை சொன்னாலும் விளங்காது. திரும்ப திரும்ப உள்ளூர் மாப்பிள்ளைகளையே கொண்டு வாறது. இனிச் சொல்லுங்கோ இரண்டாம் தாரம் என்றாலும் வெளிநாட்டு மாப்பிள்ளையைத்தான் கட்டுவன் என்று. அகிலாவின் முடிவு சண்முகத்தாருக்கு நம்பிக்கையை கொடுக்க சாரதா அதிர்ச்சியடைந்தாலும் மனம் ஏனோ உள்ளுக்குள் சந்தோசப்பட்டுக்கொண்டது.

தொடர்மழையால் வீட்டிலேயே முடங்கியிருந்து. அகிலாவின் முகப்புத்தகத்தில் சிவாவின் அறிமுகம் கிடைத்தது. அகிலா முதல் வேலையாக சிவாவின் வாழ்விடத்தைப் பார்த்துக்கொண்ட போது இன்ப அதிர்ச்சி அடைந்தாள். சிவாவின் வாழ்விடம் அவுஸ்திரேலியா. அப்புறம் உங்களுக்கு தெரியும்தானே நாட்டு நடப்பு. நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக நட்பு வளர்ந்து... காதல் வளர்ந்து மதிலுக்கு மேலால் தெரிய சாரதாவும் மாப்பிள்ளை கொஞ்சம் வயசாக தெரிந்தாலும் அவுஸ்திரேலியாவை நம்பி பச்சைக்கொடியைக் காட்டிவிட புறோக்கரின் அடிமடியில் கைவைக்கப்பட்டது. புறோக்கரும் மார்க்கை (முகப்புத்தகத்தை உருவாக்கியவர்) வைய.... அவுஸ்திரேலியாவில் இருந்து வந்த மாப்பிள்ளை சிவராசா நேரே அகிலாவின் வீட்டுக்கே சென்று தங்கிக்கொண்டார்.

மாப்பிள்ளை வந்த களை நீங்கி சம்பிரதாயப பேச்சுக்கள் தொடங்கியது. பேச்சுக்கள் முடிய இரவு பத்துமணி தாண்டியவேளையில் இருந்த ஒரு அறையையும் மாப்பிள்ளைக்கு கொடுத்துவிட்டு தாயுடன் படுத்திருந்த அகிலா சின்னதா ஒரு பெரிய குண்டைத் தாயின் தலையில் போட்டாள்.

அவருக்கு ஏற்கனவே திருமணமாகி விவாகரத்து பெற்றிருக்கிறார். மனைவி பிள்ளைகள் இருக்கினம். பிள்ளைகள் இவருடன் கதைக்கிறவையாம். ஆனால் அவர்கள் வேறாகத்தான் இருக்கினமாம்.

சாரதாவின் தலையில் ஆட்லறி செல்லொன்று வெடித்தது போலிருந்தது. என்னடி பிள்ளை சொல்லுகின்றாய். அதிர்ச்சி மாறாமல் கேட்டாள் தாய். மகளோ அது ஒன்றும் பிரச்சினை இல்லை எனக்கு முதலிலேயே தெரியும். விவாகரத்து எடுத்தாச்சுத்தானே. அங்கே இதெல்லாம் சாதாரணம். ஏன் இங்கேயும் இப்ப இதெல்லாம் சாதாரணம்தானே. நீ கத்திக்குழறி ஒன்றையும் குழப்பிப் போடாதே என்றாள். சாதாரணமாக அவ்வளவு மயக்கம் மாப்பிள்ளையில்... இல்லை... இல்லை அவுஸ்திரேலியாவில்.

சாரதாவோ தமக்குத் தெரிந்தவர்களில் யார் யார் இரண்டாம் தாரமாக கலியாணம் செய்திருக்கிறார்கள் என்று எண்ணிப் பார்க்கத் தொடங்கியிருந்தவள். ஓமடி உன்ர கொப்பரும் இரண்டாந்தாரத்துப் பிள்ளைதானே என்றாள் பெருமூச்சுடன்.

அவுஸ்திரேலியா மாப்பிள்ளை என்பது மட்டுமே வெளியில் தெரிய ஏனையவை மூடி மறைக்கப்பட்டு கலியாணம் மாப்பிள்ளையின் செலவில் பெரியதொரு கலியாண மண்டபத்தில் அகிலாவைப் பல்லக்கில் தூக்கிவர முன்னே இளம் பெண்கள் ஆடிவர ஓம குண்டத்தில் ஓமம் வளர்ப்பதற்கு பதிலாக வீடியோ எடுக்க ஏதுவாக ஊதுபத்திகளைக் கொளுத்தி ஓமப்புகையை நாகரிகமாக ஐயர் மெலிதாக எழுப்ப முகூர்த்த நேரத்தில் ஐயர் தாலியைத் தூக்கிவைத்துக் கொண்டு வீடியோக்காரனைப் பார்க்க அவர் அக்சன் என்பது போல் கையசைக்க மாப்பிள்ளை இரண்டாந்தாரமாக ம்ம்ம் இரண்டாந்தாரமாக எதுவாகவோ? கமரா பறந்து பறந்து வீடியோ எடுக்க வீடியோக்காரனின் வழிகாட்டலில் தாலி அகிலாவின் கழுத்தில் ஏறியது.

இவை பற்றி எதுவுமே கவலைப்படாமல் தற்போதைய யாழ்ப்பாண கலாசாரத்தின்படி மணமக்களை வாழ்த்திவிட்டு சாப்பிடவும் சாப்பிட்டுவிட்டு மணமக்களை வாழ்த்தவும் உற்றார், உறவினர்கள், நண்பர்கள் முண்டியடித்துக் கொண்டு இரண்டு நிரைகளாக நின்று கொண்டனர்.

ஆசை, முகப்புத்தகக் காலத்தில் முடிய மோகம், முப்பது நாளில் முடிய மாப்பிள்ளை அவுஸ்திரேலியா பயணப்பட ஆயத்தமானார். அகிலா அழுதுவீங்கிய முகத்துடன் அழுது கொண்டிருக்க ஏண்டி அழுது ஆர்ப்பாட்டம் பண்ணுகிறாய், போய் ஆயத்தங்களை செய்து கூப்பிடப் போகிறார் என்ற தாயைக் கட்டிப்பிடித்து ஓவென்று அழுதாள் அகிலா.

அழுது விம்மியபடியே அவர் என்னை அவுஸ்திரேலியா கூட்டிக்கொண்டு போகமாட்டாராம். அங்கே தன்னுடைய பிள்ளைகள் வந்து போவினமாம். அவர்களுக்கு முன்னால் என்னைக் கூட்டிக்கொண்டு போனால் அவர்கள் பிறகு தன்னிடம் வரமாட்டார்களாம். அதனால் ஆறு மாதத்திற்கு இங்கே வந்து நிற்பாராம். அங்கு ஆறுமாதம் நிற்பாராம் என்று அழுதவளை பிரமை பிடித்தபடி பார்த்துக்கொண்டிருந்தாள் தாய்.

**மானிப்பாய் சுதன்**

## விகடன்

# நல்லவன் வாழ்வான்

அன்பை வெளிப்படுத்தும் ஒரே உலக மொழி, மலர்ந்த புன்னகை மட்டுமே!' என்கிறார் அமெரிக்க எழுத்தாளர் வில்லியம் ஆர்தர் வார்டு (William Arthur Ward). வாழ்க்கையில் எத்தனையோ அனுபவங்களை மனிதர்கள் பெற்றிருந்தாலுமேகூட பல நேரங்களில் உண்மையான அன்பை கவனிக்கத் தவறிவிடுகிறார்கள். உள்ளன்போடு உதவ வருபவர்களைத் தவறாக எடைபோடுகிறார்கள் மென்மையான சிரிப்பை உதிர்க்கிறவர்களைக்கூட அச்சத்தோடு பார்க்கிறார்கள். ஆனாலும் நல்ல மனம் கொண்டவர்கள் இவற்றையெல்லாம் பொருட்படுத்துவதில்லை. தங்களால் இயன்ற உதவியைப் பிறருக்குச் செய்ய அவர்கள் ஒருபோதும் தவறுவதேயில்லை. சக மனிதர்களின்பால் அக்கறையும் அன்பும் கொண்ட ஓர் இளைஞனின் கதை இது. அது மட்டுமல்ல... உலகம் ஒரு சிறிய வட்டம் என்பதை அழுத்தமாக உணர்த்தும் கதையும்கூட.

அமெரிக்கா... நகருக்கு வெளியேயிருக்கும் ஒரு வீதி. காலை 11 மணிக்கு மேல் ஆகியிருந்தாலும்கூட, பனிப்பொழிவு அதிகமாக இருந்ததால், வீதியில் வாகனங்களோ, உருவங்களோ தெளிவாகத் தெரியவில்லை. அந்த இளைஞன் தன் ஓட்டைக் காரில் போய்க்கொண்டிருந்தான். ஏதோ ஒரு பொப்பாடலை விசிலடித்துக்கொண்டிருந்தான். உடலை மெள்ள ஊடுருவும் குளிர், ஜில்லென்று அடிக்கும் காற்றின் இதம்... அவனுக்கு மிக உற்சாகமாக இருந்தது. அப்போதுதான் வீதியோரத்தில் ஒரு கார் நிற்பதையும் அதனருகே ஒரு பெண்மணி குளிரில் லேசாக நடுங்கியபடி நிற்பதையும் பார்த்தான். தன் காரை ஓரம் கட்டினான்.

அவர் ஒரு மூதாட்டி. காரில் இருந்து அந்த இளைஞன் இறங்குவதைப் பார்த்தாள். அவன் காரை நிறுத்தாமல் இறங்கியிருந்தான். அந்தப் பழைய மொடல் கார் இரைச்சலிட்டபடி, இலேசாகக் குலுங்கிக்கொண்டிருந்தது. கடந்த ஒரு மணி நேரமாக மூதாட்டி அங்கே நின்றுகொண்டிருந்தாள். ஒரு 'வாகனம்கூட நிற்கவில்லை. அவள் ஏன் இங்கு தனியாக நிற்கிறாள் என்று கேட்கக்கூட யாரும் வரவில்லை. மூதாட்டிக்கு இளைஞனைப் பார்க்க அச்சமாக இருந்தது. அவனுடைய நைந்துபோன பழைய ஆடைகள், தேய்ந்துபோன ஷூ, கிழிசல் விட்டிருந்த மேல் கோட்... பார்த்தாலே ஏழை என்பது தெரிந்தது. இவையெல்லாம் அவளின் பயத்தை அதிகப்படுத்தின. இத்தனைக்கும் அந்த இளைஞன் ஒரு மலர்ந்த புன்னகையோடுதான் அவளை நெருங்கிக்கொண்டிருந்தான். மூதாட்டியோ, அவன் தன்னை எதுவும் செய்துவிடுவானோ, பணம் பறிக்க வருகிறானோ என்றெல்லாம் பயந்துகொண்டிருந்தாள்.

முகத்தைப் பார்த்தே அந்த மூதாட்டி என்ன நினைக்கிறார் என்பதை அந்த இளைஞன் புரிந்துகொண்டான். ஆனாலும், அதே புன்னகையோடு அவளருகே வந்தான். வணக்கம் சொன்னான். அது, விலை உயர்ந்த மெர்சிடிஸ் பென்ஸ் கார். "மேடம் ஏன் இப்படி தனியா நிக்கிறீங்க? இவ்வளவு குளிர் அடிக்குதே... கார்ல போய் உட்கார்ந்திருக்கலாம்ல?" என்று கேட்டான். மூதாட்டி பதில் எதுவும் சொல்லவில்லை.

"என் பெயர் ஆண்டர்சன்..." என்று அறிமுகப்படுத்திக்கொண்டான் இளைஞன். அதற்கும் அவள் பதில் எதுவும் சொல்லவில்லை. இளைஞன் காரைச் சுற்றி வந்தான். காரின் பின் சக்கரம் காற்றுப் போயிருப்பது தெரிந்தது. "ஓ... இதுதான் பிரச்சினையா?" என்றவன், மேற்கொண்டு தாமதிக்கவில்லை. அவனாகவே அந்த காரின் டிக்கியைத் திறந்தான். ஸ்டெப்னி, ஜாக்கி ஒரு டயரை மாற்றத் தேவையான இதர உபகரணங்கள் எல்லாம் இருந்தன. அவற்றை எடுத்துக்கொண்டு இளைஞன், காருக்கடியில் தவழ்ந்து போனான். கால் மணி நேரத்தில் காற்றுப் போன டயரைக் கழற்றிவிட்டு, இன்னொன்றை மாற்றிவிட்டான். அவன் காருக்கடியிலிருந்து வெளியே வந்தபோது அவன் உடைகளில் அழுக்கும் சேறும் படிந்திருந்தன. ஒரு விரலில் கீறல் விழுந்து இலேசாகக் காயம்பட்டிருந்தது.


இளைஞன் காற்றுப்போன டயர், இதர பொருள்களையெல்லாம் அந்த மூதாட்டியின் கார் டிக்கியில் வைத்து மூடினான். "எங்கேயிருந்து வர்றீங்க?" என்று கேட்டான்.

"செயின்ட் லூயிஸ்லருந்து..."

"ஓ..."

அப்போதும்கூட அவள் அவனுக்கு ஒரு நன்றிகூடச் சொல்லவில்லை. தன் ஹேண்ட் பேக்கைத் திறந்தாள். அவன் முகத்தை நேருக்கு நேராகப் பார்க்காமலேயே "இந்த வேலைக்கு நான் எவ்வளவு தரணும்?" என்று கேட்டாள்.

இளைஞனின் முகம் சுருங்கிப்போனது. இதை அவன் எதிர்பார்க்கவில்லை. அவன் உதவி செய்யத்தான் வந்திருந்தானே தவிர, டயரை மாற்றும் வேலைக்கு அல்ல. அது அவன் வேலையும் அல்ல. அவன் நினைத்திருந்தால், அந்த மூதாட்டியிடம் எவ்வளவு வேண்டுமானாலும் கேட்டிருக்கலாம்.



"மேடம்... பணத்துக்காக நான் உங்களுக்கு உதவி செய்யவில்லை. எனக்கு எதுவும் வேணாம். இந்த வேலைக்குப் பணம் கொடுக்கணும்னு விரும்பினீங்கன்னா, கஷ்டப்படுறவங்க யாரையாவது பார்ப்பீங்கல்ல... அவங்களுக்கு உதவி பண்ணுங்க. அப்போ... என்னையும் நினைச்சுக்கங்க..." என்று சொல்லிவிட்டு இளைஞன் தன் காரில் ஏறிச் சென்றுவிட்டான்.

அந்த மூதாட்டி வழியில் ஒரு ரெஸ்ட்டோரன்ட்டில் தன் காரை நிறுத்தினாள். சாப்பிடுவதற்காக உள்ளே நுழைந்தாள். அது ஒரு பழையகாலக் கட்டடம். உள்ளே ஆட்களும் அதிகமில்லை. ஒரு மேஜையில் இரண்டே இரண்டு பேர் அமர்ந்து சாப்பிட்டுக் கொண்டிருந்தார்கள். மூதாட்டி தயக்கத்தோடு ஒரு மேஜையில் அமர்ந்தாள். வந்தனம் சொன்னபடி ஒரு பணிப்பெண் வந்தாள். அவள் முகத்தில் மலர்ந்த சிரிப்பு. மூதாட்டியின் ஈரத் தலையைத் துவட்டிக்கொள்ள சுத்தமான ஒரு டவலை நீட்டினாள். துவட்டி முடித்ததும் ஆர்டர் எடுத்துக்கொண்டு, விரைவாக உணவைக் கொண்டு வந்து வைத்து அழகாகப் பரிமாறினாள். மூதாட்டி ஒன்றைக் கவனித்திருந்தாள். அந்த பணிப்பெண் நிறைமாத கர்ப்பிணி. ஆனால், தன் வலியையோ, தான் கர்ப்பமாக இருக்கிறோம் என்பதையோக் கொஞ்சம்கூட வெளிக்காட்டாமல் சிரித்த முகத்தோடு மூதாட்டிக்கு வேண்டியவற்றைப் பரிமாறினாள். மூதாட்டிக்கு தனக்கு உதவிய இளைஞனின் நினைவு வந்தது.

பில் வந்தது. மிக மிகக் குறைந்த தொகை. மூதாட்டி ஒரு நூறு டொலரை எடுத்து பில்லோடு வைத்தாள். பணிப்பெண் பில்லுக்கான பணத்தைச் செலுத்திவிட்டு வந்து பார்த்தபோது மூதாட்டி அங்கே இல்லை. சாப்பாட்டு மேஜையில் மூதாட்டி எழுதிவைத்திருந்த ஒரு குறிப்பு இருந்தது. அதில், ஹஇது உன் வேலைக்காக அல்ல... உன் சேவைக்காக. இந்தப் பணம் வேண்டாம் என்று நினைத்தால், கஷ்டப்படும் வேறு யாருக்காவது உதவி செய்' என்று எழுதியிருந்தது. அந்தக் குறிப்புச் சீட்டுக்குக் கீழே மேலும் நான்கு 100 டொலர்கள் இருந்தன.

பணிப்பெண் இரவு வீடு திரும்பினாள். அன்றைக்கு நடந்தது அவளுக்கு ஆச்சரியமாக இருந்தது. "அந்த அம்மாவுக்கு நான் கஷ்டப்படுறேன்னு எப்படித் தெரியும்? பிரசவத்துக்கு நாள் நெருங்கிக் கிட்டிருக்கு. பிரசவ செலவுக்கு என்ன பண்றதுனு தெரியாம நானும் அவரும் முழிச்சிக்கிட்டு இருந்தோம். கடவுள் மாதிரி இந்தம்மா உதவி செஞ்சுட்டுப் போறாங்களே...' என்று திரும்பத் திரும்ப அன்று நடந்ததையே நினைத்து வியந்து கொண்டிருந்தாள். அவள் கணவனும் வீடு திரும்பினான். அவன் சாப்பிட்டு முடித்து படுக்கைக்கு வந்ததும் அன்று நடந்ததையெல்லாம் அந்தப் பணிப்பெண் சொன்னாள். அவன் கேட்டுக்கொண்டிருந்தான். "அந்தக் கடவுளுக்குத்தான் நாம நன்றி சொல்லனும்... இல்லையா ஆண்டர்சன்?"

அவன் மௌனமாகத்தலையசைத்தான்.












■ ஜூனியர் விகடன்

# ஜெருசலேம் மரணத்தை முத்தமிடுகிறது அமெரிக்கா

"இது, ஓர் உண்மையை அங்கீகரிப்பதைத் தவிர வேறொன்றுமில்லை. இதைச் செய்தே ஆக வேண்டும்'' என்று சொல்லிவிட்டு அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் வெளியிட்டுள்ள ஓர் அறிவிப்பு, உலக வரைபடத்தில் சில தேசங்களின் எல்லைகளையே மாற்றிவிடும் வல்லமை படைத்தது. 'ஜெருசலேம் நகரை, இஸ்ரேல் நாட்டின் தலைநகராக அமெரிக்கா ஏற்றுக்கொண்டது' என்பது தான் அந்த அறிவிப்பு.

"உலகெங்கும் இருக்கும் கிறிஸ்தவர்கள் கொந்தளிப்பார்கள்'' என்கின்றன சில திருச்சபைகள். "இந்த அறிவிப்பு, நரகத்தின் வாயிலை அமெரிக்காவுக்குத் திறந்துவிட்டிருக்கிறது'' என்கிறது ஹமாஸ் அமைப்பு. "மரணத்தை முத்தமிடுகிறது அமெரிக்கா. 150 கோடி முஸ்லிம்களுக்கு எதிராகப் போர் அறிவிப்பு செய்திருக்கிறார் ட்ரம்ப்'' என்கிறார்கள் பாலஸ்தீன மக்கள். தங்களுக்குள் அடித்துக்கொண்டு பிரிந்து கிடக்கும் இஸ்லாமிய தேசங்கள், இப்போது அமெரிக்காவுக்கு எதிராக ஒன்றுதிரண்டிருக்கின்றன.

இஸ்ரேல் மற்றும் பாலஸ்தீனப் பகுதியில் இருக்கும் மிகப்பெரிய நகரம், ஜெருசலேம். அது, இஸ்ரேலின் தலைநகராக உலகம் கருதும் டெல் அவிவ் நகரைவிடப் பெரியது. ஆனால், ஜெருசலேம் யாருக்குச் சொந்தம் என்ற சர்ச்சை அதைவிடப் பெரியது. 1947ஆம் ஆண்டு இஸ்ரேல், பாலஸ்தீனம் என இரண்டு நாடுகளை உருவாக்க ஐ.நா. தீர்மானித்த போது, 'ஜெருசலேம் மட்டும் தனி ஆட்சிப் பரப்பாக இருக்கட்டும்' என முடிவுசெய்தார்கள். காரணம், ஜெருசலேமின் புனிதம். உலகின் புனிதமான நகரம் என இதைச் சொல்லலாம். யூதர்கள், கிறிஸ்தவர்கள், இஸ்லாமியர்கள் என மூன்று மதத்தினருக்கும் இது புனிதத்தலம்.

"1947ஆம் ஆண்டு இஸ்ரேல், பாலஸ்தீனம் என இரண்டு நாடுகளை உருவாக்க ஐ.நா தீர்மானித்தபோது, 'ஜெருசலேம் மட்டும்' தனி ஆட்சிப்பரப்பாக இருக்கட்டும்' என முடிவுசெய்தார்கள். காரணம், ஜெருசலேமின் புனிதம். உலகின் புனிதமான நகரம் என இதைச் சொல்லலாம். யூதர்கள், கிறிஸ்தவர்கள், இஸ்லாமியர்கள் என மூன்று மதத்தினருக்கும் இது புனிதத்தலம்.

இப்படி வெறும் 0.9 சதுர கிலோமீற்றர் பரப்பளவு கொண்ட ஜெருசலேமின் பழைய நகரில் தொன்மமும் புனிதமும் நிறைந்திருக்கிறது. பல கோடி மக்களின் நம்பிக்கைகளை அந்த மண் சுமந்துகொண்டிருக்கிறது. யாரோ ஒருவரின் கட்டுப்பாட்டில் ஜெருசலேம் சென்றால், மற்றவர்களின் புனிதத்தலங்களுக்கு ஆபத்து வந்துவிடும் என்ற பயம் எல்லோருக்கும் இருக்கிறது."

யூதர்களின் பழைமையான தலைநகரம் இதுதான். மன்னர் தாவீதும், அவரின் மகன் சாலமனும் கட்டிய தேவாலயங்கள் இங்குதான் இருந்தன. தொடர் படையெடுப்புகளால் ஜெருசலேம் சிதைக்கப்பட்டது. யூதர்களின் கோயிலில் மிஞ்சியது ஒற்றைச்சுவர் மட்டுமே! 'மேற்குச்சுவர்' என அழைக்கப்படும் இதைத்தான் 'நான் உங்களுடன் இருக்கிறேன்' என்று காட்டுவதற்கு கடவுள் விட்டு வைத்திருக்கும் ஒற்றை அடையாளமாக யூதர்கள் நினைக்கிறார்கள். அவர்கள், வாழ்வில் ஒருமுறையேனும் இந்தச் சுவரைத் தரிசித்து, இதில் முட்டிக் கொண்டு அழுவதைப் பெரும் பாக்கியமாகக் கருதுகிறார்கள்.


புனிதமான மேற்குச் சுவரும் அல் அக்ஸா மசூதியும்

கிறிஸ்தவர்களுக்கும் ஜெருசலேம் மிக முக்கியமானது. இயேசு கிறிஸ்து நடமாடிய மண். சிலுவையில் அறையப்படுவதற்கு அவர் ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்டது இங்கிருந்துதான். அவர் கல்லறையிலிருந்து உயிர்த்தெழுந்தது இங்குதான். இங்கிருக்கும் திருக்கல்லறை தேவாலயம், இயேசு புதைக்கப்பட்ட இடத்தில் உருவானது எனக் கிறிஸ்தவர்கள் நம்புகிறார்கள். இதைத் தரிசிப்பதை வாழ்நாள் கனவாக வைத்திருக்கும் கிறிஸ்தவர்கள் கோடிக்கணக்கானவர்கள்.

முஸ்லிம்களுக்கு மக்கா, மதினா போலவே, ஜெருசலேம் நகரும் புனிதமானது. ஜெருசலேமில் தங்க மேற்கூரையோடு இருக்கும் அல் அக்ஸா மசூதி, மிகப் பழமையானது. நபிகள் நாயகம் இங்கிருந்தே விண்ணகப் பயணம் சென்று திரும்பியதாக நம்பிக்கை. 'புனிதமான சரணாலயம்' என இதை முஸ்லிம்கள் கருதுகிறார்கள்.

இப்படி வெறும் 0.9 சதுர கிலோ மீற் றர் பரப்பளவு கொண்ட ஜெருசலேமின் பழைய நகரில் தொன்மமும் புனிதமும் நிறைந்திருக்கிறது. பல கோடி மக்களின் நம்பிக்கைகளை அந்த மண் சுமந்து கொண்டிருக்கிறது.

யாரோ ஒருவரின் கட்டுப்பாட்டில் ஜெருசலேம் சென்றால், மற்றவர்களின் புனிதத்தலங்களுக்கு ஆபத்து வந்துவிடும் என்ற பயம் எல்லோருக் கும் இருக்கிறது.

ஆனாலும், இஸ்ரேல் தனது இராணுவ வல்லமையால், உலக நாடுகளின் எதிர்ப்புகளைத் தகர்த்தது. 1948 ஆம் ஆண்டு ஜெருசலேமுக்கான முதல் போர் நடந்தது. நகரின் மேற்குப் பகுதியை இஸ்ரேல் ஆக்கிரமிக்க, கிழக்குப் பகுதியை ஜோர்தானியர்களும் பாலஸ்தீனப் படையினரும் வசப்படுத்தினர். 67 ஆம் ஆண்டு போரில், கிழக்கு ஜெருசலேமை யும் இஸ்ரேல் தன் கட்டுப்பாட்டில் கொண்டுவந்தது. 80 ஆம் ஆண்டு, ஜெருசலேமைத் தலைநகராக அறிவித்துச் சட்டமும் கொண்டு வந்தது. ஆனால், ஐ.நா. பாதுகாப்பு கவுன்சில் ஒரு தீர்மானம் நிறைவேற்றி, இஸ்ரேலின் சட் டத்தை ரத்து செய்தது. ஆனாலும், இஸ்ரேலின் பெரும்பாலான அரசு தலைமை அலுவலகங்கள் ஜெருசலேமில்தான் உள்ளன.

ஆனால், மற்ற நாடுகள் அனைத்தும் டெல் அவிவ் நகரைத்தான் இஸ்ரேலின் தலைநகராகக் கருதி, அங்கு தூதரகங்களைத் திறந்துள்ளன.

இந்தச் சூழலில், ட்ரம்ப் வெளியிட்ட அறிவிப்புக்குப்பிறகு, தன் தூதரகத்தை ஜெருசலேம் நகருக்கு மாற்ற உள்ளது அமெரிக்கா. எதிர்காலத்தில் அமைய உள்ள பாலஸ்தீன சுயாட்சிப் பகுதிக்கு கிழக்கு ஜெருசலேமைத் தலைநகராக்கும் முயற்சியில் இருந்தனர் பாலஸ்தீன மக்கள். இதனால்தான், அவசரமாக.அமெரிக்கா இப்படி முடிவெடுத்ததாகச் சொல்லப்படுகிறது. அரபு உலகம் மட்டுமன்றி, ஐரோப்பிய நாடுகளும் இதை எதிர்க்கின்றன. ஐ.நா. சபையில் இந்த விவகாரம், அமெரிக்காவுக்கு எதிராக உலக நாடுகளை நிறுத்தக்கூடும்.

ஜெருசலேமை இஸ்ரேல் அல்லது பாலஸ்தீனுடைய தலைநகரமாக உலகநாடுகள் அங்கீகரித்தது கிடையாது. அதனால்தான் ட்ரம்பின் அறிவிப்பு உலக நாடுகளை ஸ்தம்பித்துப் போகச் செய்தது.

'இது ஒஸ்லோ உடன்படிக்கைக்கு எதிரானது. நிச்சயம் இஸ்ரேல் - பாலஸ்தீனிய மண்ணில் இனி அமைதி என்பதே இல்லாமல் போய்விடும்' என்ற பயக் குரல்கள் எழுகின்றன. செப்டெம்பர் 13, 1993 அன்று ஒஸ்லோ ஒப்பந்தம் (ஒஸ்லோ ஒப்பந்தம் என்பது பாலஸ்தீனுக்குத் தன்னாட்சி உரிமை அளிக்கும் ஒப்பந்தம்) பி.எல்.ஓவுக்கும் இஸ்ரேலுக்கும் இடையில் கையெழுத்தான போது, நிஜமாகவே அமைதி பிறந்துவிட்டது என்றே அனைவரும் நினைத்தனர்.

யாசர் அராபாத் இறந்த பின்பு அந்த நம்பிக்கை அழிந்து வந்த நிலையில், அமெரிக்கா இத்தகைய அறிவிப்பு ஒன்றை வெளியிட்டிருக்கிறது. மதம் அரசியலுடன் கலந்தால் ஏற்படும் விளைவுகளே மிக மோசமாக இருக்கும். இங்கு ஜெருசலேம் மண்ணில் மதம், உணர்வுகள், புனிதம், தெய்வீக நம்பிக்கைகள், உரிமைகள், அரசியல் என அனைத்தும் கலந்திருக்கின்றன. பாலஸ்தீனியர்களுக்கு அவர்களின் உரிமை கிடைக்குமா, அந்த மண்ணில் அமைதி என்ற ஒன்று ஏற்படுமா? என்பதற்குக் காலம்தான் பதில் சொல்ல வேண்டும்.

ட்ரம்ப்பின் மருமகன் ஜரட் குஷ்னர் ஒரு யூதர். இஸ்ரேல் - பாலஸ்தீன பிரச்சினையைத் தீர்த்து வைக்கும் தூதராக அவரைத்தான் நியமித்திருந்தார் ட்ரம்ப். மருமகன் பேசிக்கொண்டே இருக்கிறார். பிரச்சினை தீரவில்லை. இந்தச் சூழலில் இப்படி ஒரு முடிவெடுத்து, மேற்கு ஆசியாவை கொந்தளிப்பில் தள்ளியிருக்கிறார் ட்ரம்ப்.

# கட்டளை இட்டவர்களை கண்டுபிடிக்க வேண்டும்

ஊடகவியலாளர்களுக்கு எதிரான குற்றங்களுக்கு, தண்டனையில் இருந்து தப்பிப்பதை முடிவிற்குக் கொண்டு வரும் நோக்கில் யுனெஸ்கோ நிறுவனத்தால் கடந்த வாரம் ஒழுங்குபடுத்தப்பட்ட மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றிய பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, செய்தி சேகரிக்க வரும் ஊடகவியலாளர்களின் எண்ணிக்கை குறைவாக உள்ளதாகவும் முன்னைய ஆட்சியாளர்களுடன் சில ஊடக நிறுவனங்களும் மூத்த ஊடகவியலாளர்களும் இணைந்து இரகசிய சதியில் ஈடுபட்டுள்ளதாகவும் தெரிவித்திருந்தார்.

இவ்வாறான நிகழ்வுகள் பொதுவாகவே ஊடகங்கள் மீது அல்லது பொதுமக்கள் மீது உண்மையான தாக்கத்தை ஏற்படுத்தமாட்டாது என அரசியல்வாதிகள் நம்புவதாலேயே ஊடகங்கள் மீதான பாகுபாடு ஏற்படுகின்றது என்பது சிறந்த விளக்கமாக இருக்க முடியும்.

ஊடகங்கள் தமது ஊடக உரிமைகள் மீதும் தமக்கெதிரான தண்டனைகளை முடிவிற்குக் கொண்டு வருவது தொடர்பிலும் ஆர்வம் காட்டுகின்றனவா என விக்கிரமசிங்க கேள்வியெழுப்பியிருந்தார்.

நிச்சயமாக, ஊடகவியலாளர்கள் தமக்கெதிராக மேற்கொள்ளப்படும் சித்திரவதைகள்மற்றும்கொடுஞ்செயல்களைத் தாங்கக் கூடிய சக்தியைக் கொண்டவர்கள் அல்ல. அதாவது பிறரால் தாக்கப்படுதல், கடத்தப்படுதல், கால்கள் முறிக்கப்படுதல், காணாமலாக்கப்படுதல் போன்ற பல்வேறு கொடுஞ்செயல்களுக்குத் தாக்குப்பிடிக்கும் சக்தியை ஊடகவியலாளர்கள் கொண்டிருக்கவில்லை.

எனினும், ஊடகவியலாளர்களுக்கான அடிப்படை உடல்சார் பாதுகாப்பு மற்றும் தொழில் பாதுகாப்பை வழங்கவேண்டியது அரசாங்கத்தின் கடமையாகும்.

ஊடகங்கள் மீதான தாக்குதல்கள் தொடர்பான தற்போதைய விசாரணைகள் காலம் தாழ்த்தப்படுவதற்கு ஊடகவியலாளர்கள் பொறுப்பெடுக்கவோ அல்லது இது தொடர்பில் ஊடகவியலாளர்கள் மீது குற்றம் சுமத்தப்படவோ முடியாது. சில வழக்குகளின் போது முக்கிய சில தகவல்களைப் பெறுவதற்கு அடிக்கடி விசாரணை மேற்கொள்ளப்பட்ட பின்னர் இந்த வழக்குகள் இடைநிறுத்தப்படுகின்றன. இது புதிய செயற்பாடல்ல. மகிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக்காலத்தில் விசாரணைகள் இடம்பெறும் போது தொடர் கண்காணிப்புக்களும் இடம்பெற்றன.

ஊடகவியலாளரான கீத் நொயர் கடத்தப்பட்டமை மற்றும் ஊடகவியலாளரான லசந்த விக்கிரமதுங்க படுகொலை செய்யப்பட்டமை ஆகிய இரண்டு சம்பவங்கள் தொடர்பான விசாரணைகளில் மிக முக்கிய திருப்புமுனைகள் ஏற்பட்டன.

நொயரின் கடத்தல் சம்பவம் தொடர்பில் முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷவால் தேசிய புலனாய்வுப் பிரிவின் பொறுப்பதிகாரி மேஜர் ஜெனரல் கபில ஹெந்தவிதாரணவுக்கு தொலைபேசி அழைப்புக்கள் விடுக்கப்பட்டதாகவும், பின்னர் மேஜர் ஜெனரல் கபில ஹெந்தவிதாரண, இராணுவப் புலனாய்வுப் பிரிவின் பொறுப்பதிகாரி அமல் கருணசேகரவிற்கு தொலைபேசி அழைப்பை விடுத்ததுடன், இவர் மேஜர் பிரபாத் புலத்வத்தவுக்கு தொலைபேசி அழைப்பு விடுக்கப்பட்ட பின்னரே, நொயர் கடத்தப்பட்டு சித்திரவதைக்கு உட்படுத்தப்பட்டதாக விசாரணைகளின் போது தெரிய வந்தது.

இந்த விசாரணைகளைத் தொடர்ந்து மேஜர் புலத்வத்த மற்றும் நான்கு இராணுவ வீரர்களும் கைதுசெய்யப்பட்டு நீதிமன்றின் முன் நிறுத்தப்பட்டு பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டனர். இவர்களைக் கைது செய்து விசாரணை செய்தது போன்று ஊடகவியலாளர் நொயரைக் கடத்துவதற்கு கட்டளையிட்ட உயர் மட்ட அதிகாரிகளும் கைது செய்யப்பட்டிருக்க வேண்டும். ஆனால் இதற்குப் பதிலாக இந்த வழக்குத் தொடர்பான விசாரணை இடைநிறுத்தப்பட்டது.

இதேபோன்றே, குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் வேண்டுகோளின் அடிப்படையில் ஊடகவியலாளர் லசந்த விக்கிரமதுங்க படுகொலை தொடர்பான விசாரணையை மீளவும் ஆரம்பிப்பதென நீதிமன்றம் தீர்மானித்தது. இந்த விசாரணையின் அடிப்படையில் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தால் இராணுவப் புலனாய்வுடன் தொடர்புபட்டவரும் லசந்த விக்கிரமதுங்கவின் சாரதியாகப் பணியாற்றியவர் எனப் பின்னர் அடையாள அணிவகுப்பின் மூலம் அடையாளம் காணப்பட்டவருமான மலிந்த உடலகம கைதுசெய்யப்பட்டு நீதிமன்றில் நிறுத்தப்பட்டு பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டார்.

இவரைத் தொடர்ந்து லசந்தவின் படுகொலைக்கு தான் பொறுப்பெடுப்பதாகவும் உடலகமவை விடுவிக்குமாறும் கோரி முன்னாள் இராணுவப் புலனாய்வு அதிகாரி ஐ. ஜயமனே சரணடைந்தார்.

தனது அதிகாரத்திற்கு அப்பால் கோத்தபாய ராஜபக்ஷவின் கட்டுப்பாட்டின் கீழ் அப்போதைய தேசிய புலனாய்வுப் பிரிவின் பொறுப்பதிகாரியின் ஊடாக சிறப்பு இரகசியப் பிரிவொன்று செயற்பட்டதாகவும் இப்பிரிவானது இராணுவக் கட்டமைப்பிற்கு வெளியே செயற்படுத்தப்பட்டதுடன் இது ஊடகவியலாளர்கள் மற்றும் அரசாங்கத்திற்கு எதிரானவர்களையும் இலக்கு வைப்பதற்குப் பயன்படுத்தப்பட்டதாகவும் முன்னாள் இராணுவக் கட்டளைத் தளபதி பீல்ட் மார்சல் சரத் பொன்சேகா, குற்றப் புலனாய்வுத் திணைக்களத்திற்கு வழங்கிய வாக்குமூலத்தில் தெரிவிக்கப்பட்டது.

'இராணுவக் கட்டளைத் தளபதியின் அனுமதியில்லாது அவரது ஒப்புதலின்றி எந்தவொரு இராணுவப் பிரிவையும் செயற்படுத்தவோ அல்லது அதன் மூலம் நடவடிக்கைகளை மேற்கொள்வதோ சாத்தியமற்றதாகும்' என சரத் பொன்சேகா வழங்கிய வாக்குமூலத்திற்கு பதிலடியாக மகிந்த ராஜபக்ஷவால் கூறப்பட்டது.


இதன் பின்னர் வெளிநாட்டு செய்தியாளர் சங்கம் ஒன்றுடன் இடம்பெற்ற சந்திப்பின்போது, தனக்குத் தெரியாமல் பல்வேறு விடயங்கள் இடம்பெற்றுள்ளதாகவும் இதன் காரணமாகவே தந்திரோபாய மட்டத்தில் அல்லாமல் கொள்கை மற்றும் மூலோபாய மட்டத்தில் மேலும் பணியாற்றுவதாகவும் மகிந்த ராஜபக்ஷ அறிவித்திருந்தார்.

படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர் லசந்த விக்கிரமதுங்கவின் வழக்கு விசாரணைகள் அதிகாரி உடலகமவின் கைதின் பின்னர் தொடர்ந்தும் மேற்கொள்ளப்படவில்லை.

இதேபோன்று கேலிச்சித்திர வடிவமைப்பாளரான பிரகீத் எக்னெலிகொட கடத்தப்பட்ட சம்பவத்துடன் தொடர்புபட்ட கேணல் தர அதிகாரி உட்பட பத்து சந்தேக நபர்கள் பிணையில் விடுவிக்கப்பட்டனர். இதனைத் தொடர்ந்து தற்போது வரை இந்த வழக்கு விசாரணை மீண்டும் தொடரப்படவில்லை.

இந்த விசாரணைகள் இன்னமும் முற்றுப்பெறாதுள்ளமைக்கான காரணங்களை பிரதமர் ஆராய்ந்து கொள்ள முடியும். இராணுவப் புலனாய்வு வட்டாரங்கள் இந்த விசாரணைகளை முக்கியத்துவப்படுத்துகின்றன என்பதற்கான எவ்வித ஆதாரங்களும் காணப்படவில்லை.

ஊடகவியலாளர்கள் படுகொலை செய்யப்பட்டமை மற்றும் கடத்தப்பட்டமை மற்றும் ஊடகங்கள் மீதான தாக்குதல்கள் போன்றன பயங்கரவாத எதிர்ப்புத் தாக்குதல்கள் என எவரும் உரிமை கோர முடியாது. இவ்வாறான தாக்குதல்கள், உயர் மட்ட அரசியல் மற்றும் இராணுவ அதிகாரிகள் தமது ஆழ்மன எண்ணங்கள் களங்கமடைந்ததால் அதற்குப் பழிக்குப் பழி தீர்க்கும் முகமாக மேற்கொள்ளப்பட்டன. இத்தாக்குதல்களை மேற்கொள்வதற்காக இவர்கள் இராணுவப் படைகளைப் பயன்படுத்தியுள்ளனர்.




மரபு சார் இராணுவத்தினர், அதிகாரிகள் மற்றும் வீரர்கள் இவ்வாறான சட்ட ரீதியற்ற கட்டளைகளை நிறைவேற்ற முடியாது என மறுக்க முடியும். இதற்கு மாறாக இராணுவப் புலனாய்வுத் துறையினரால் தாக்குதல்கள் மேற்கொள்ளப்படுகின்றன. இவ்வாறான தாக்குதல்களில் நேரடியாக ஈடுபட்டவர்கள் குற்றங்களுக்குப் பொறுப்பேற்பதற்குப் பதிலாக இவர்களுக்குக் கட்டளை வழங்கியவர்கள் குற்றவாளிகளாக இனங்காணப்பட வேண்டும்.

இல்லாவிட்டால் உடத்தலவின்ன வழக்கு விசாரணைகள் போன்று இடை நிறுத்தப்படும் நிலை ஏற்படும். உடத்தலவின்ன வழக்கில் அனுருத்த ரத்வத்த மற்றும் அவருடைய இரண்டு மகன்கள் நிரபராதிகள் என அறிவிக்கப்பட்டதுடன் ஐந்து இராணுவக் கட்டளை நிலை அதிகாரிகளுக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது.

இவ்வாறான குற்றங்களில் ஈடுபட்ட கீழ்நிலை மற்றும் இடைநிலை இராணுவ வீரர்களுக்கு அளிக்கப்படும் தண்டனைகளை குறைப்பதுடன் இவர்களின் உதவியுடன் இவ்வாறான குற்றங்களுக்கு கட்டளை வழங்கியவர்களை இனங்கண்டு அவர்களுக்கு தண்டனை அளிக்க முடியும்.

எனினும், அரசியல் அழுத்தம் காரணமாக இவ்வாறான குற்றங்களுக்கு கட்டளை வழங்கியவர்களை இனங்காண்பதில் அக்கறை காண்பிக்கப்படுவதில்லை. இதற்கு அரசியல் உடன்படிக்கைகளோ அல்லது தீவிர தேசியவாதிகளின் அழுத்தமோ காரணமாக இருக்கலாம்.

இவ்வாறான குற்றங்கள் தொடர்பில் உண்மையையும் நீதியையும் கண்டறிவதில் அரசாங்கம் தயக்கம் காண்பிப்பதற்கு ஊடகவியலாளர்களைப் பழிசுமத்துவது எவ்விதத்திலும் நியாயமில்லை.

வழிமூலம் : Daily mirror
ஆங்கிலத்தில் : ரங்க ஜெயசூரிய
மொழியாக்கம்: நித்தியபாரதி



# அசர வைத்த விராட் திருமணம்

இந்தியாவையே திரும்பிப் பார்க்க வைத்த வெகு சிலருடைய திருமணங்களில் ஒன்றாகிப் போயிருக்கிறது விராட் - அனுஷ்கா திருமணம்.

இருவரும் ஒரே நேரத்தில் விடுமுறை எடுத்தபோது லேசாக சந்தேகித்த மக்கள்... ஒரே நாட்டுக்கு இருவரும் சென்றபோது "அவங்க கல்யாணம் கன்ஃபார்ம்" என்றார்கள்.

எதற்கும் அசைந்துகொடுக்கவில்லை விராட் - அனுஷ்கா ஜோடி. மீடியாவிடம் பேசாமல் பிளைட் ஏறிப்போனார் அனுஷ்கா. தொடர் வேலை... ஓய்வு தேவை என்று விடுமுறை வாங்கிக கொண்டார் விராட்.

இத்தாலி நாட்டின் மிலன் நகரில் உள்ள தனியார் ரிசார்ட்டில் இந்திய முறைப்படி விராட் - அனுஷ்கா ஜோடியின் திருமணம் அட்டகாசமாக நடைபெற்றது. அவர்களுடைய திருமணம் பற்றிய நிகழ்வுகளுக்குப் போகும் முன்... காதல் பிளாஷ் பேக் இதோ...

விராட் கோலியும், அனுஷ்கா சர்மாவும் கடந்த 2013-ம் ஆண்டு ஒரு விளம்பரத்தில் ஒன்றாகச் சேர்ந்து நடிக்கும் வாய்ப்பு ஏற்பட்டது. அங்கு இருவருக்கும் பற்றிக்கொண்டது காதல்.

அன்றிலிருந்து விராட் விளையாடும்போது காதலி அனுஷ்காவையும் அழைத்துச் செல்வதை வழக்கமாகக் கொண்டிருந்தார்.

அதேபோன்று, அனுஷ்காவும் எந்த நிகழ்ச்சிக்குச் சென்றாலும் விராட்டை உடன் அழைத்துச் செல்லத் தொடங்கினார்.

மீடியா பிளாஷ் மழையில் இருவரும் அடிக்கடி நனைய ஆரம்பித்தார்கள். 2015 உலகக் கோப்பை அரையிறுதியில் 300 ஓட்டங்களுக்கு மேலான இலக்கை இந்தியா சேஸிங் செய்யும்போது, விராட் கோலி ஒற்றை இலக்க ஓட்டத்தில் ஆட்டமிழந்தார்.

அப்போது அனுஷ்கா ஷர்மா கலரியில் அமர்ந்திருந்தார். அனுஷ்கா ஷர்மாவுடன் விராட் சுற்றுவதால்தான் விளையாட்டில் கோட்டை விடுகிறார் என்கிற ரசிகர்களின் எரிச்சலுக்கு ஆளானார்கள் விராட்டும் அனுஷ்காவும்.

நன்றாக ஆடியபோது கலரியில் அமர்ந்திருந்த அனுஷ்காவுக்கு பிளையிங் கிஸ் கொடுத்தார் விராட். அவர் ஆட்டம் சரியாக இல்லாததுக்கு அனுஷ்காதான் காரணம் என்று சமூக வலைத்தளங்களில் அனுஷ்கா ட்ரோல் செய்யப்பட கொதித்தெழுந்த விராட்... "அனுஷ்கா ஷர்மாவை ட்ரோல் செய்பவர்களை நினைத்து வெட்கப்படுகிறேன். அனுஷ்கா எனது பொசிட்டிவிட்டி" என்று டுவிட் செய்து, தன் காதலியை விட்டுக் கொடுக்காமல் பதில் அளித்தார் விராட். அந்த டுவீட்டுடன், விராட் கோலி டுவீட் செய்த 'shame' என்கிற புகைப்படம் ஒன்றும் வைரலானது. அதன் பிறகு இருவரும் பொது நிகழ்ச்சிகளில் தலைகாட்டவில்லை. இருவரும் பிரிந்துவிட்டார்கள் என்கிற வதந்திக்கு றெக்கை முளைக்க ஆரம்பித்த தருணம் அது.

அதையெல்லாம் கண்டுகொள்ளாமல் தங்கள் காதலில் இருவரும் தீவிரமாக இருந்தார்கள்.

இந்நிலையில், இவர்களின் திருமண ஏற்பாடு நண்பர்கள் மற்றும் மிக நெருங்கிய உறவினர்கள் முன்னிலையில் நேற்று நடைபெற்றுள்ளது.

### திருமண மற்றும் நிச்சயதார்த்த உடை

திருமண உடையில் விராட் கோலியும், அனுஷ்கா சர்மாவும் அழகாக இருந்தார்கள். அனுஷ்காவின் ஃபேவரைட் கலரான பிங்க் நிறத்தில் அவருக்கு ஆடை வடிவமைக்கப்பட்டது. கொல்கத்தா பிளாக் பிரின்டர்களால் உருவாக்கப்பட்ட முத்துக்கள் பதித்த லெஹங்காவை அனுஷ்கா அணிந்திருந்தார்.

விராட், கைகளால் வடிவமைக்கப்பட்ட பிங்க் நிற குர்தாவை அணிந்திருந்தார். இருவரின் ஆடை மற்றும் அலங்காரப் பொருட்களை வடிவமைத்தது பிரபல ஆடை வடிவமைப்பாளர் சபயாஷாச்சி முகர்ஜி நிச்சயதார்த்தத்தின்போது அனுஷ்கா மெரூன் கலரில் ஸ்டோன்கள் பதித்த வெல்வட் சேலையை அணிந்திருந்தார். விராட் வெள்ளை நிற ஆடையும், நீல நிற கோர்ட்டும் அணிந்திருந்தார்.

### அணிகலன்கள்

ஈரானிய டர்க்கைகஸ், புஷ்பராக கல்வகை, அன்கட் டைமண்டு மற்றும் ஜப்பானிய வளமான முத்து ஆகியவற்றைக் கொண்ட 22 கரட் தங்கத்தினால் வடிவமைக்கப்பட்ட ஜிமிக்கியை அனுஷ்கா சர்மா அணிந்திருந்தார். இயற்கையான ரோஜாப் பூக்களைத் தொகுத்து ஆடைக்கு மேட்சாக தலையில் சூடியிருந்தார்.

விராட் - அனுஷ்கா தம்பதியின் திருமண உடை மற்றும் அலங்காரப்பொறுப்புமுழுவதையும்சபயாஷாச்சி முகர்ஜி 67 டிசைனர் குழுக்களோடு இணைந்து 32 நாள்களுக்கும் மேலாக டிசைன் செய்த உடையில் இருவரும் ஜொலித்தனர்.

சமீபத்தில், டிசெம்பர் 15ஆம் திகதி இருவரும் திருமணம் செய்து கொள்ளவிருப்பதாகப் பல்வேறு புரளிகள் வந்த வண்ணம் இருந்தன. இருவரும் அதை மறுத்து வந்த நிலையில், தன் காதலி அனுஷ்காவை கரம்பற்றி



SABYASACHI

ரசிகர்களுக்கு சர்ப்ரைஸ் தந்தார் விராட்.

இவர்களுடைய திருமண வரவேற்பு கிரிக்கெட் வீரர்கள் மற்றும் சினிமாத்துறை நண்பர்களுக்காக, டில்லியில் வருகிற 21 திகதியும், மும்பையில் வரும் 26ஆம் திகதியும் நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. (க)



# காலத்தால் அழியாத கானங்கள்

படம் : காத்திருந்த கண்கள்
இசை: விஷ்வநாதன் ராமமூர்த்தி
பாடியவர் : பி.வி.ஸ்ரீநிவாஸ் ,பி.சுசீலா
பாடல் வரிகள்: கண்ணதாசன்



வளர்ந்த கலை மறந்து விட்டாள் கேளடா கண்ணா - அவள்
வடித்து வைத்த ஓவியத்தைப் பாரடா கண்ணா (வளர்ந்த...)

குடும்பக் கலை போதும் என்று கூறடா கண்ணா - அதில்
கூட இந்தக் கலைகள் வேறு ஏனடா கண்ணா ? (குடும்பக் ...)

காதல் சொன்ன பெண்ணை இன்று காணமே கண்ணா
காதல் சொன்ன பெண்ணை இன்று காணமே கண்ணா
கட்டியவள் மாறி விட்டாள் ஏனடா கண்ணா - தாலி
கட்டியவள் மாறி விட்டாள் ஏனடா கண்ணா
காதலிதான் மனைவி என்று கூறடா கண்ணா - அந்தக்
காதலிதான் மனைவி என்று கூறடா கண்ணா - அன்று
கண்ணை மூடிக் கொண்டிருந்தார் ஏனடா கண்ணா

மனதில் அன்றே எழுதி வைத்தேன் தெரியுமா கண்ணா
அதை மறுபடியும் எழுதச் சொன்னால் முடியுமா கண்ணா

தினம் தினம் ஏன் கோபம் கொண்டாள் கூறடா கண்ணா - அவள்
தேவை என்ன ஆசை என்ன கேளடா கண்ணா
நினைப்பதெல்லாம் வெளியில் சொல்ல முடியுமா கண்ணா - அதை
நீ பிறந்த பின்பு கூற இயலுமா கண்ணா
(வளர்ந்த...)

இன்று வரை நடந்ததெல்லாம் போகட்டும் கண்ணா
இன்று வரை நடந்ததெல்லாம் போகட்டும் கண்ணா - இனி
என்னிடத்தில் கோபமின்றி வாழச் சொல் கண்ணா
அவரில்லாமல் எனக்கு வேறு யாரடா கண்ணா
அவரில்லாமல் எனக்கு வேறு யாரடா கண்ணா - நான்
அடைக்கலமாய் வந்தவள்தான் கூறடா கண்ணா

# உங்கள் மாதப்பலன் எப்படி?

(கடந்த வாரத் தொடர்ச்சி)

இவர்கள் எந்த நாட்டில் வாழ்ந்தாலும் நல்ல பதவியில், வேலையில் சேர்ந்து விட வாய்ப்பு உண்டு. பதவிகளுக்கும் பட்டங்களுக்கும் இவர்கள் ஆசைப்படுவார்கள். மதங்களில் மிகுந்த பற்றுதல் உண்டு.

இசையில் ஈடுபாடு

பொதுவாக இந்த மாதத்தில் பிறந்தவர்கள் இசையில் பற்றுக் கொண்டிருப்பார்கள். இசையில் வல்லவர்களாகவும் வரவாய்ப்பு உண்டு. இசை தொடர்பு கொண்ட நிறுவனங்களுக்கும் பண உதவி செய்வார்கள்.

எதிர்பாராத முடிவுகளைச் செய்வார்கள். அல்லது திடீரென்று ஒரு முடிவுக்கு வருவார்கள். எந்தச் செயலிலும் இவர்களுக்கு ஓர் அளவு என்பது கிடையாது. இவர்கள் தமது கற்புள்ளவர்களாகவும் மண வாழ்க்கையில் புனிதம் உள்ளவர்களாகவும் இருப்பார்கள். மண வாழ்க்கையில் கசப்பு ஏற்பட்டாலும் எப்போதும் சிரித்தபடி வாழ்க்கையை ஏற்றுக் கொள்ளுவார்கள்.

பொதுவாக அனைவரும் ஆலயங்களுக்குச் செல்லுவார்கள். இவர்களுடைய செயல்க்ள் உலகுக்கு ஓர் எடுத்துக்காட்டாக விளங்க வேண்டும் என்று விரும்புவார்கள்.

இவர்கள் சட்டங்களை வகுப்பார்கள். பிள்ளைகளை அடக்கியே வளர்ப்பார்கள். பிள்ளைகளை ஒழுக்கத்துடனும் சிறப்புடனும் உருவாக்குவார்கள்.

வெற்றியுடன் வாழ்ந்தாலும் எப்போதும் ஏதாவது ஒரு செயலில் இவர்கள் கவனத்தைச் செலுத்தியபடி

## நவம்பர் 21-டிசெம்பர் 20ம் திகதிக்குள் பிறந்தவர்களுக்கான குண பலன்கள்

தவறுகளை ஒப்புக்கொள்ள மாட்டார்கள். அது நியாயம் என்று கூறி வாதிடுவார்கள்.

ஏதோ துடிப்பில் மணம் செய்து கொண்டுவிட்டுப் பிறகு துன்பம் கொள்ளுவார்கள் இவர்கள். ஆனால் தமது துன்பங்களை வெளியே சொல்ல மாட்டார்கள். மணவாழ்க்கையில் கசப்பு ஏற்பட்டிருந்தாலும் மற்றவர்கள் அதைக் கண்டு பிடித்து விடாதபடி நடந்து கொள்ளுவார்கள். கேட்டாலும் மகிழ்ச்சியாகத்தானே இருக்கிறேன் என்பார்கள்.

ஆண்களைவிட இந்த மாதத்தில் பிறந்த பெண்கள் சிறந்தவர்கள். இவர்கள் தமது கணவனை அன்புடன் நடத்தி அவர்களை வெற்றி பெறும்படி செய்வார்கள். பெண்கள் மிகக் இருப்பது மிக நல்லது.

உடல் நிலை

வாயு நோய்க்கு இவர்கள் ஆளாவார்கள். தொண்டை தொடர்புள்ள நோய்கள் வரும். கட்டிகளும் தோல் வியாதிகளும் வர வாய்ப்புண்டு. நரம்பு நோய்களாலும் கடைசிக் காலத்தில் பாரிசவாயுவினாலும் துன்பம் கொள்ளுவார்கள்.

வண்ணங்கள்

இவர்களுக்குப் பிடித்த வண்ணம் (VIOLET)

இந்த மாதத்தில் பிறந்த சிலர்

சர்ச்சில், மார்க் ட்வெய்ன் (எழுத்தாளர்), ஸர்வால்டர் ஸ்காட், இராஜாஜி, சரண்சிங், வாஜ்பாய், ஸ்ரீ ரமண மகரிஷி, பாபு ராஜேந்திர பிரசாத்.

(முற்றும்)

# நா காக்க

(நிமிடக் கதை)

அன்பான சங்குநாத வாசகர்களுக்கு இனிய ஞாயிறு வணக்கங்கள். உங்கள் அன்பான ஜிம்மிக் குட்டி பெரியவர் வீட்டிலிருந்து கதைக்கிறன். பிள்ளைகள் பள்ளிக்கூட விடுமுறையைச் சந்தோசமாகக் கொண்டாடினம். இடையிலை கடலை சாப்பிடுவினம். பிறகு திருக்குறள் பாடமாக்குவினம். பிறகு ஒருத்தருக்கொருத்தர் சொல்லிக் காட்டுவினம். எல்லாமே பெரியவரின்ர மேற்பார்வையிலதான் நடக்கும். நல்ல நல்ல சுட்டித்தனம் நிறைஞ்ச பிள்ளைகள். வழமை போல எல்லாரும் வட்டமாக இருக்கினம். படிச்சவை, படிக்காதவை, ஏழை, பாணக்காரர், உயர்ந்தவை, தாழ்ந்தவை எண்டு இஞ்சை பாகுபாடே கிடையாது. எல்லாரும் கதைக்கலாம். கருத்துச் சொல்லலாம். எவரும் பெரியவரோடை தங்கடை பிரச்சினையைக் கதைக்கலாம். அவரும் தராதரம் பார்க்காம, முகம் சுழிக்காம அவையளை மதிச்சுக் கதைப்பார். எப்பவும் முந்திரிக் கொட்டை மாதிரி சடக் கெண்டு முன்வந்து எதையும் யோசிக்காம இராசம்மாக்கா தான் சத்தமாக் கதைப்பா. பெரியவர் அதையும் சகித்துக்கொண்டு மறுமொழி சொல்லுவார். பொறுமையும் சகிப்புத் தன்மையும் பெரியவரின்ரை தனிச் சொத்து. இராசம்மாக்கா தன்ரை மருமகளைப் பற்றி ஏதோ புறணி சொல்லுறா. பெரியவர் அமைதியாக் கேக்கிறார்...

"இஞ்சை பாருங்கோ பெரியவர் - நேற்று பேத்திக்கு நாலு உழுந்துவடை வாங்கிக் கொண்டு போய்க் குடுத்தன்ான். அவள் அடங்காப்பிடாறி மருமோள்தானே. அது கடைச்சாப்பாடாம், ஒரே எண்ணெயாம் எண்டு பிள்ளையைத் தின்ன விடேல்லை. அதோடை என்னையும் பிள்ளைக்கு முன்னாலை சத்தமாப் பேசக்கூடாதாம். இதென்ன நியாயம்...?"

பெரியவர் நிமிர்ந்து கதிரையிலை இருக்கிறார்.

"அவள் சொன்னது சரிதானே! பெத்த தாயைப்போல அவள் தடுத்ததிலை என்ன பிழை? கடைத்தீன் ஏன் வாங்கிக் குடுத்தனி! எண்ணெ பிழியப்பிழிய நீயும் கெடுப்பிடிச்சு வாங்கிக் கொண்டு போயிருப்பாய்..."

"என்ன பெரியவர் நீங்கள்! என்ரை பேத்திக்கு நான் வாங்கிக் குடுக்காமல் ஆர் வாங்கிக் குடுக்கிறது....?"

"அதுசரிதான் இராசம்மா... உழுத்தம் பருப்பை வாங்கி ஊறப் போட்டு அரைத்து வீட்டிலை வடை சுட்டுக் குடுத்திருந்தால் அவள் தடுக்கவே போறாள்...? ஆரோக்கியமான சாப்பாட்டை வீட்டிலை செய்து குடுபாப்பம்! நொறுக்குத்தீனுக்குப் பிள்ளையைப் பழக்காதே. அது கூடாது. அதோடை கொஞ்சம் அடக்கமாக் கதைச்சுப் பழகு. தாம் தூம் எண்டு நீ கத்திறதும் நடக்கிறதும் எனக்குத் தெரியும் தானே..."

இராசம்மாவுக்கு பெரியவர் சொன்னது பிடிக்கேல்லை.பேசாமல் ஏதோ புறுபுறுத்துக் கொண்டு உள்ளே திரும்பிறா....

"பொறுபொறு எங்கை அவசரமாப் போறாய்? மிச்சத்தையும் கேள். பேச முதல் வார்த்தையை யோசித்துப்பேசப் பழகிக்கொள்... சொன்ன வார்த்தையை மறுத்தலிச்சுப் பேசிற பழக்கம் கூடாது. பிள்ளை ஏதோ கணக்கப் படிச்சவை மாதிரி யாரெண்டு பாராமல் எடுத்தெறிஞ்சு பேசிறதும் நீ சொல்லுறது தான் சரி எண்டு வாதாடுறதும் மனிதத் தன்மையே இல்லாமல் முகத்திலை அடிச்ச மாதிரி கடுமையாக் கதைக்கிறதும் உன்னைத்தான் அசிங்கப் படுத்தும் என்று தெரியாதே. உன்னை நம்பி வாழவந்த மருமகளையே இந்தப்பாடு படுத்திற நீ... யாரைத்தான் மதிக்கப் போறாய்? நீ கதைக்கிறதைக் குறைச்சு மற்றவை சொல்லுறதைக் கேட்டுப் பழகு. அடக்கத்துடன் நடந்து கொண்டால் அந்த அடக்கம் உன்னைத் தேவதையாகவே மாத்திவிடும். அது இல்லையோ உன் வாழ்வே இருண்டு போய்விடும். இனி இருக்கிற வாழ்நாளையாவது அடக்க ஒடுக்கமாய் பேசிப் பழகி வாழப்பார்! வீட்டிலை செய்த முறுக்குக் கிடக்கு. பேத்திக்கும் மருமளுக்கும் கொண்டு போய் குடு..." பெரியவர் பெருமூச்சு விடுகிறார். பேத்தி கங்கா ஏதோ சொல்லத் தொடங்கிறா... இராசம்மாக்கா திரும்பவும் நிண்டு கவனிக்கிறா...

"யாகாவாராயினும் நாகாக்க; காவாக்கால் சோகாப்பர் சொல்லிழுக்குப்பட்டு" ஏன் தாத்தா அடக்கமுடைமை என்ற அதிகாரத்திலை தானே இந்தக் குறளும் இருக்கு. அருமையான அர்த்தம் நிறைந்த வரிகள் என்ன தாத்தா?"

பெரியவர் தலையசைத்துப் பெருமையாப் பேத்தியைப் பாக்கிறார்...

"ஓம் மகள்! நாம் எதைக் காக்காவிடினும் நாவை அடக்கிக் காத்து சொற்களைப் பேச வேண்டும் ம்... எதை விதைக்கிறோமோ அதைத் நான் அறுவடை செய்ய வேண்டி வரும் ஓ...கவனம் நாகாக்க. சரிசரி சாப்பிட்டிட்டு படுத்து நித்திரை கொள்ளப் போறன் போட்டுவாறன்.

பாரதி கணேஸ்- சுன்னாகம்

# பள்ளிப்பருவத்திலே

## திரைவிமர்சனம்

பலவிதமான படங்கள் வித்தியாசமான கதைகளை தாங்கி எடுக்கப்பட்டு ரிலீஸ் செய்யப்படுகிறது. அதில் சில உண்மை சம்பவங்களை அப்பட்டமாக வெளிச்சம் போட்டு காட்டுகிறது.

அது அத்தனைக்கும் காதல் விடயத்தில் ஒரு ஒற்றுமையிருக்கும். ஆனாலும் மாறான விதத்தில் எளிமையான கதையாக ஒரு சில படம் வந்து போவது மக்களிடம் இடம் பிடித்துவிடும்.

அதைப்போல வெளிவந்துள்ள பள்ளிப்பருவத்திலே கடந்த கால காதலை நினைவுபடுத்துமா, மனதில் இடம் பிடிக்குமா என பார்ப்போம். பள்ளிப்பருவம் போகலாம்.

கே.எஸ்.ரவிக்குமார் கிராமத்தில் பள்ளி தலைமையாசிரியர். இவரின் மனைவி ஊர்வசி மிகவும் வெகுளி. இவர்களுக்கு ஒரே ஒரு ஆண் பிள்ளை. அவர் தான் ஹீரோ நந்தன் ராம். படத்தில் இவரின் பெயர் கலை.

அப்பா வேலை பார்க்கும் பள்ளி கூடத்தில் தான் இவரும் படிக்கிறார். இவருக்கு நெருங்கிய நண்பர்களாக பொரி உருண்டை என்பவரும், இன்னொருவரும். போகும் இடமெல்லாம் மூவரும் ஒன்றாக தான் செல்வார்கள்.

தன் சகவகுப்பில் படிக்கும் கனி (வெண்பா) மீது கலைக்கு காதல். அதுவும் பள்ளிப்பருவ காதல். கனியின் அப்பா பொன்வண்ணன். ஊரில் செல்வாக்கான குடும்பம்.

இவரின் தம்பி ஆர்.கே.சுரேஷ் டான் போல கட்டப்பஞ்சாயத்து என செல்வார். பல வருடங்களாக இதே ஊரில் தலைமையாசிரியர் என்பதால் ரவிக்குமார் மீது ஊரார் எல்லாம் உறவினர்கள் போல நட்பாக இருக்கிறார்கள்.

ஒருபக்கம் கனியை கலை/பாலோவ் பண்ணிக்கொண்டே இருக்க விடயம்பொன்வண்ணனுக்கு போகிறது. பின் என்ன, பொறுமையாக கையாள்கிறார். ஆனால் காதல் தான் கண்ணை கட்டிவிடுமே.

கனி கனி என அலைய பகை பொறி பற்றுகிறது. ஊர் பஞ்சாயத்து கூடுகிறது. கனிக்கு அவசர அவசரமாக கல்யாண ஏற்பாடுகள் ஒருபக்கம். காதல் சோகத்தில் கலை மறுபக்கம்.

பின் கதை வேறுவிதமாய் நகர, இரு குடும்பத்திற்கும் மோதல் வெடிக்கிறது.



மானம், மரியாதைக்காக கலையை ஆணவக்கொலை செய்ய கனி அப்பா, சித்தப்பா இருவரும் பிளான் போடுகிறார்கள்.

கனியும் கலையும் காதலில் ஜெயித்தார்களா, ஆணவக்கொலை இங்கேயும் நடந்தேறுகிறதா? ஊர் என்னானது பள்ளிப்பருவ காதல் உண்மையானதா என்பதை சொல்லும் கதை தான் இந்த பள்ளிப்பருவ காதல்.

ஹீரோ நந்தன் ராம் சினிமாவிற்கு புதிது. இது தான் அவரின் முதல் படம். இவரின் அப்பா பல படங்களில் தமிழ் சினிமாவில் பணியாற்றியவர். முதல் படம் என்றாலும் இந்த கதை அவருக்கு எளிமையானதாக அமைந்திருக்கும்.

ஸ்கேல் அளந்து நடித்திருக்கிறார். பள்ளிப்பருவத்திற்கான அதே பாவனை அப்படியே இயல்பாக நடித்திருக்கிறார். பையன்களுக்கு அப்பா என்றாலே ஒரு முறைப்பு இருக்குமே அந்த விடயம் இங்கேயும் தொடர்கிறது.

பல ஹிட் படங்களை கொடுத்த ரவிக்குமார் இப்போதெல்லாம் படங்களில் ஸ்பெஷல் கரக்டர்களில் நடித்து வருகிறார். ஊர் பிள்ளைகளுக்கெல்லாம் அப்பா போல இருப்பவர் தன் பிள்ளைக்கு அப்பாவாக இருந்தாரா, தலைமையாசிரியராக இருந்தாரா என்பதை நீங்கள் படத்தில் சென்று பாருங்கள்.

ஆனால் செயற்கை தனம் இல்லாத நடிப்பு. கடைசியில் இவருக்காக ஊரே அழும். ஹீரோயின் வெண்பா அதிகம் பேசமாட்டார். கிளைமாக்சில் தான் வாய் திறப்பார். வயது வந்த கிராமத்து பெண்ணின் எதார்த்தம்.

படத்திற்காக காட்சியை இப்படி வைக்கலாம் என்பது போலில்லை. இப்படித்தான் நடந்திருக்கும் என காட்சிகள் பிரதிபலிக்கிறது. ஊர்வசி தன்னுடைய ரோலில் காமெடி புகுத்தி விடுவார் எப்போதும்.

ஒரு வெகுளியான அம்மாவாக குறும்பாக அவர் செய்யும் செயல், பேச்சு என படத்தின் சீரியஸ்க்கு நடுவிலும் சிரிப்பை வரவைக்கும். மகனை பெற்றவளாக அவர் படும்பாடு என்ன சொல்ல.

தம்பி ராமையா, கஞ்சா கருப்பு என காமெடிக்கு இருக்கிறார்கள். வழக்கம் போல கஞ்சா கருப்பை டம்மியாக்கும் காட்சிகளும் இதில் இடம் பிடிக்கின்றன. பிக்பாஸ்க்கு பிறகு நமீதா நமீதா என மீண்டும் இங்கே புகழ் பாடுவார்.

பொன்வண்ணன் ஒரு மகளை பெற்றவராக இருந்தாலும் ஊர்க்காக குணம் மாறும் நடைமுறையை அப்படியே காட்டுகிறார். படத்தின் கதையை சரியாக நகர்த்தியிருக்கிறார் இயக்குநர் வாசுதேவ் பாஸ்கர்.

ஆணவக்கொலை சம்பவத்தை சரியாக பிரதிபலித்தவிதம் எதார்த்தம். நந்தன், வெண்பா இருவரும் கதைக்கு போதுமான நடிப்பு. அலட்டல் இல்லை.

படத்திற்கு விஜய் நாராயணனின் போதுமான பின்னணி இசை. கேட்கும் படியான பாடல்கள். படத்தின் மிக நீளம் என்பதால் எப்போது முடியும் என்ற பீல் வருகிறது. படம் எந்த சம்பவத்தை பிரதிபலிக்கிறது என்பதை பற்றி நேர்முகமான தகவல் இல்லை.

முடியப்போகும் போது கூட குத்து பாடல் தேவைதானா என சின்ன முகம் சுளிப்பு. மொத்தத்தில் பள்ளிப்பருவம் பள்ளிப்பருவம் தான். ஆனால் சினிமாக்கு இப்போதிருக்கும் நிலையில் இப்படி ஒரு எளிமையான கதை எடுபடுமா என யோசிக்க வைக்கிறது.





வாழ்க்கையில் தன்னம்பிக்கையுடன் முன்நோக்கி பயணிக்க

**உலகின் முன்னணி ஆங்கில மொழி வல்லுனர்களுடன் பயிலுங்கள்**

கற்கைநெறிக்கான கட்டணம்
ரூ. 19,000 இலிருந்து

ஜனவரி மாதம் 2018 ஆரம்பமாகும் அடுத்த கற்கைநெறியில்
இணைந்து கொள்ள அழையுங்கள் - 021 7 521 521 Ext. 6901

பிரிட்டிஷ் கவுன்சில் | 70, ரக்கா வீதி, சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்.

இலங்கையில் சட்டத்தை நடைமுறைப்படுத்துவோர், பாதுகாப்புப் படையினர், நீதித்துறையினர் மற்றும் ஏனைய அதிகார சபைகள் தனியாட்கள் சுதந்திரத்துக்கான உரிமைகளுக்கு இன்னும் மதிப்பளிக்கவில்லை.
தனியாட்களுக்கு சுதந்திரத்தை இழக்கச் செய்யும் தற்போதைய அதிகாரங்கள் பரந்துபட்ட நிறுவனங்களுக்கு விரிவாக்கப்பட்டுள்ளன.
பொலிஸ் நிலையங்கள், சிறைச்சாலைகள், திறந்த வேலை முகாம்கள், இளம் மற்றும் முதியோருக்கான இல்லங்கள், மனநல சுகாதார நிலையங்கள், முன்னாள் போராளிகளுக்கும், நலிவுறும் சூழ்நிலைகளில் வாழ்வோருக்கும் உரிய புனர்வாழ்வு நிலையங்கள் இவற்றுள் அடங்கும்.

-தன்னிச்சையான தடுத்து வைப்பு ஐ.நா. நடவடிக்கைக்குழு-

# பயங்கரவாத தடைச்சட்டம் இல்லாதொழியட்டும்

எஸ்.ஆர்.கரன்

தமிழ்ரை படுகொலைக் களத்திற்கு இழுத்துச் சென்ற பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்குமாறு மீண்டும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

தன்னிச்சையான தடுத்து வைப்புக்கள் தொடர்பான ஐக்கிய நாடுகள் சபையின் நடவடிக்கைக் குழு, இலங்கையில் இம்மாதம் 4 ஆம் திகதி முதல் 15 ஆம் திகதி வரை மேற்கொண்ட அவதானிப்புக்களின் அடிப்படையில் இவ்வாறு வலியுறுத்தியுள்ளது.

இந்தக் குழுவில் மெக்சிக்கோ நாட்டைச் சேர்ந்த ஹோரயே அன்ரானியோ குவேரா பர்மூடாஸ், அவுஸ்திரேலியாவைச் சேர்ந்த லீ டொமே, லெட்வியா நாட்டைச் சேர்ந்த எலினா ஸ்டீனர்ட் ஆகியோர் உள்ளடங்கியுள்ளனர்.

இந்தக் குழுவினர் நேற்று முன்தினம் கொழும்பில் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பின் போது, இலங்கையில் சட்டத்தை நடைமுறைப்படுத்துவோர், பாதுகாப்புப் படையினர், நீதித்துறையினர் மற்றும் ஏனைய அதிகார சபைகள் தனியாட்கள் சுதந்திரத்திரத்திற்கான உரிமைகளுக்கு இன்னும் மதிப்பளிக்கவில்லை என்றும் சுட்டிக் காட்டினர்.





பயங்கரவாதத் தடைச் சட்டத்தால் பாதிக்கப்பட்டவர்கள் குறித்தும் இச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு தடுப்பு முகாம்களில் சித்திரவதைகளை அனுபவிப்பவர்கள் தொடர்பாகவும் கவலை வெளியிட்ட இந்தக் குழுவினர், பயங்கரவாதத் தடைச் சட்டம் உடன் நீக்கப்பட வேண்டியதன் அவசியத்தையும் எடுத்துரைத்தனர்.

அனைத்துலகளவில் இலங்கையின் பயங் கரவாதத் தடைச் சட்டம் எதிர்ப்புக்களைச் சந்தி த்துள்ளதை அரசாங்கம் நன்கு அறிந்துள்ள போதும் அச்சட்டத்தை நீக்க முன்வரவில்லை.

முப்பது ஆண்டுகாலம் நீடித்த உள்நாட்டு யுத்தம் இச்சட்டத்தை உயிர்ப்புடன் வைத்திருந்தது. இதனால் பல்லாயிரக்கணக்கானவர்கள் உயிரை விட நேர்ந்தது.

வடக்கு - கிழக்கு இணையானது என்று சொன்னாலும் தவறில்லை.

அதேவேளை பயங்கரவாதத் தடைச் சட்டம் தமிழர் தாயகத்தை மையப்படுத்தி உருவாக்கப்பட்டது என்பதை முள்ளிவாய்க்கால் பேரவலம் வரை தமிழ் மக்கள் அனுபவித்த துன்பங்கள் உறுதிப்படுத்தியுள்ளன.

மக்களைப் பாதுகாப்பதாக சட்டம் அமைய வேண்டும். அப்போதுதான் சட்டத்தை மக்கள் மதித்து நடப்பார்கள். ஆனால், இலங்கையில் உருவாக்கப்பட்ட பயங்கரவாதத் தடைச்சட்டம் தமிழின அழிப்பிற்கு தடையின்றி உதவியது.

இதனால் சர்வதேச ரீதியாகவும் உள்நாட்டிலும் பாரிய எதிர்ப்புக்களைச் சந்தித்துள்ளது.

2009 ஆம் ஆண்டு மே 18 ஆம் திகதியுடன் போர் முடிவுக்கு கொண்டு வரப்பட்டதாக அரசு அறிவித்தது.

ஆனால், பயங்கரவாதச் தடைச் சட்டத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு இதுவரை உரிய பதில் கிடைக்கவில்லை.

இனியும் கிடைக்குமா? என்றால் அதற்கும் பதில் கிடைக்க வாய்ப்பில்லை.

தமிழின அழிப்பிற்கு காரணமான பயங்கரவாதச் தடைச் சட்டத்தை நீக்க அரசிற்கு இப்போது தடையேதும் இல்லை. ஆனால், உள்நோக்கங்கள் அதிகம் உண்டு.

பயங்கரவாதச் தடைச்சட்டத்தில் கைது செய்யப்பட்ட பல நூற்றுக்கணக்கான தமிழர்கள் இன்றும் சிங்களச் சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டு வதைக்கப்படுகின்றனர்.

20 ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் காணாமல் ஆக்கப்பட்டுள்ளனர்.

தமது உறவுகளைப் படையினரிடம் பறிகொடுத்துவிட்டு பதைபதைக்கும் நெஞ்சத்துடன் பல ஆண்டுகளாகக் காத்திருக்கின்றனர்.

காணாமற் போனவர்களின் உறவினர்கள் வடக்கில் கிளிநொச்சி, முல்லைத்தீவு, யாழ்ப்பாணம், மன்னார், வவுனியா என அனைத்து மாவட்டங்களிலும் போராட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

ஒரு வருடத்தையுடைய வுள்ள இவர்களின் போராட்டத்திற்கு உரிய பதிலை அரசாங்கம் இன்னும் வழங்கவில்லை.

தமிழர்கள் தானே அழிக்கப்பட்டனர்! தமிழர்கள் தானே அழுது கொண்டிருக்கின்றனர் என்பதால் சிங்கள அரசிற்கு எவ்வித கவலையுமில்லை.

தமிழர்களின் வாக்குகள் மூலம் அரசமைக்கும் ஆணையைப் பெற்றவர்கள் ஆட்சிக்கு வந்தவுடன் வாக்குறுதிகளை மறந்துவிட்டனர்.

தமிழ் மக்களின் வாக்குகளை சிங்களவர்களுக்குப் பெற்றுக்கொடுத்து நல்லாட்சி அமைத்து விட்டோம் என்று கொக்கரிப்பவர்களும் தமிழ்த் தாய்மாரின் கண்ணீரைப் போக்கவில்லை.

மாறாக மறுதேர்தலுக்குத் தயாராகிவிட்டனர்.

தேர்தல் காலத்தில் மக்களை நாடும் அரசியல்வாதிகள் வெற்றிபெற்றவுடன் காணாமற்போவது தான் வடக்கிலும் தெற்கிலும் மாறாத ஒரே விடயம்.


கண்ணீரைச் சுமந்துவாழும் தமிழ் மக்களுக்கு 2017 ஆம் ஆண்டிலும் தீர்வு கிடைக்கவில்லை.

இன்னும் எத்தனை ஆண்டுகளுக்கு தீர்வை எதிர்பார்த்து தமிழினம் காத்திருக்க வேண்டுமோ? என்பதும் புரியவில்லை.

facebook

# யார் ஏழை? சிறுவனின் பார்வை!







ஒரு ஊரில் ஒரு பெரும் பணக்காரர் இருந்தார். அவருக்கு ஒரே மகன். மிகவும் செல்லமாக அவன் வளர்க்கப்பட்டான். பருவ வயது வந்தது. அவனுக்குப் பொறுப்புத் தர எண்ணினார் அவர்.

ஆனால் மகனுக்கு உலக வாழ்க்கை இன்னதென்று விளங்கவில்லை. அவன் உலகைத் தெரிந்த பின்பு அவருக்குப் பொறுப்புத்தரலாம் என்று எண்ணினார். அவனை ஒரு மாத காலம் சேரி மக்கள் வாழ்கின்ற பகுதியில் அந்த மக்களோடு மக்களாகத் தங்கி வாழ்ந்து பின்வருமாறு பணித்தார்.

ஒரு மாதம் ஆனபின்பு மகன் வீட்டுக்கு வந்தான். தந்தை கேட்டார் என்ன மகனே வாழ்க்கையில் என்ன கற்றுக்கொண்டாய் என்றார்.

நிறைய அவர்களிடம் அறிந்து கொண்டேன் அப்பா. அவர்கள் நம்மை விட பணக்காரர்களாகவும், சுதந்திரமானவர்களாகவும், சுகமாகவும், பயமற்றும் வாழ்கிறார்கள் என்றான். தந்தை எப்படிச்சொல்கிறாய் எனகேட்டார்.

நாம் இங்க அலங்கார செயற்கை விளக்குகள் ஏற்றி வாழ்கிறோம். அவர்களோ நட்சத்திரங்களையே விளக்குகளாகக் கொண்டு வாழ்கிறார்கள்.

நாம் நமக்கான உணவையே விலை கொடுத்து வாங்கி உண்கிறோம். அவர்கள் தங்களுக்கான உணவைத் தாங்களே உற்பத்தி செய்கிறார்கள்.

நான் அறைகளுக்குள் வாழ்கிறோம். அவர்களோ சுதந்திரமாக சந்தோசமாக பரந்த வெளியில் வாழ்கிறார்கள்.

இப்பொழுது சொல்லுங்கள் தந்தையே அவர்களை ஏழை என்கிறார்கள்.

சுதந்திரமாகவும், சந்தோசமாகவும், தன் உணவைத் தாங்களே உற்பத்தி செய்பவராகவும், உறவுகளோடு ஒன்றி மகிழ்பவர்களாகவும் இருப்பவர்களை ஏழைகள் என்று எப்படி சொல்ல முடியும்? இவை தான் நான் அவர்களிடமிருந்து கற்றது என்றான்.

எனவே வாழ்க்கை என்பது சுதந்திரத்திலும் உறவுகளிலும் மலர்ந்திருக்கிறது.

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1281

Search for people, places and things

### கௌசிகா


டேய் மச்சான் பேஸ்புக்லையே இருக்கியே உனக்கு வேலை இல்லையா?




நான் பேஸ்புக்லையே இருக்கிறதையே பார்த்துட்டு இருக்கியே உனக்கு வேலையே இல்லையா?

### தர்சனா சனா

பசங்க நட்பு RINGTONE மாதிரி Free yave கிடைக்கும்



பொண்ணுங்க நட்பு CALLERTUNE மாதிரி செலவு பண்ணித்தான் ஆகனும்

### மாலினி


போனமாசம் 45 கிலோ இருந்தேன், இப்போ 50 கிலோ இருக்கேன், போட்டிருக்கிற பாண்ட் சைசும் மாறல சேர்ட் சைசும் மாறல...



அப்ப கண்டிப்பா அறிவுதான் வளர்ந்திருக்கும்

### சசிகலா

ஆசிரியர்: பரீட்சையில் ஒரு பக்கம்தான் எழுதியிருக்கிறாய்... கொஞ்சம்கூட வெட்கமா இல்லை உனக்கு



மாணவன்: டீச்சர்... சிங்கம் SINGLE SHEET ல தான் எழுதும். பன்னிங்கதான் பக்கம் பக்கமா எழுதும்

### உமாஜி

நட்புனா என்னானு தெரியுமா



Mid Night ல Friend தூங்கிட்டு இருந்தாலும் Torture பண்ணி எழுப்பி Wish பண்ணனும் அதான் நட்பு

### லோகிதா

Dull ஆ இருக்கிற Face அ நல்லா ஆக்கிட்டுப் போறவன் நண்பன்



நல்லா இருக்கிற Face அ Dull ஆக்கிட்டுப் போறவ காதலி!!!

நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# குழந்தைகளுக்கு பரசிற்றமோல் கொடுக்கும் பொழுது...




பரசிற்றமோலை தேவைவற்றோ, அவசரப்பட்டோ, அளவுக்கு அதிகமாகவோ பாவிப்பது ஈரலை சிகிச்சை வழங்க முடியாத அளவுக்கு பாதிக்கலாம். உயிராபத்து ஏற்படலாம்.

இயலுமானவரை 05 வயதுக்கு உட்பட்ட குழந்தைகளுக்கு பரசிற்றமோல் அடங்கிய பாணி (எலசரி) மருந்துகளை பாவியுங்கள். அவற்றின் போத்தல்களிலும், பெட்டிகளிலும் நிறைக்கு ஏற்ப எவ்வளவு மருந்து கொடுக்க வேண்டும் எனக் குறிப்பிடப் பட்டுள்ளது.

பரசிற்றமோல் அடங்கிய குளிசைகளை குழந்தைகளுக்கு பாவிக்கும் போது அளவுக்கு அதிகமான பரசிற்றமோல் பிள்ளைகளுக்கு வழங்கிவிடும் ஆபத்து உள்ளது.

பரசிற்றமோல் அடங்கிய மருந்துகளை ஒருபோதும் சொல்லப்பட்ட அளவுக்கு அதிகமாகவோ அல்லது ஒவ்வொரு தடவைக்கும் இடையில் ஆறு மணித்தியாலமாவது இடைவெளி இல்லாமலோ குழந்தைகளுக்கு கொடுக்க வேண்டாம். பெரியவர்களுக்கும் இது பொருந்தும்.

காய்ச்சல் என்பது நோயல்ல நோயின் அறிகுறி மட்டுமே. சிறு காய்ச்சலுக்கே காய்ச்சலைத் தணிக்கும் மருந்துகளை பாவிக்க வேண்டியதில்லை.

காய்ச்சல் தணிக்கும் மருந்துகளுள் பெரும்பாலானவை பரசிற்றமோலை (Paracetamol) கொண்டவையே.

யாழ்.மருத்துவக் குழுவினர் தொகுத்து வழங்கும்

# சுகமான விடியல்

வலம்புரியின் மருத்துவச்சுடர் 113

## முருங்கை முட்டை வறுவல்

(காலை உணவு, சிறிய பாண் துண்டுடன் சாப்பிட உகந்தது)

### தேவையான பொருட்கள்

| | | |
|---|---|---|
| முருங்கை இலை | - | 10 நெட்டி |
| முட்டை | - | 2 |
| வெங்காயம் | - | 400 g |
| ப.மிளகாய் | - | 03 |
| செத்தல் மிளகாய் | - | 01 |
| கடுகு | - | 2 சிட்டிகை |
| பெரியசீரகம் | - | 3 மிளகாய் |
| நல்.எண்ணெய் | - | ½ தேக்கரண்டி |
| உப்புத்தூள் | - | 2 சிட்டிகை |

### செய்முறை

முருங்கையிலையை சுத்தப்படுத்தி இலைகளை உருவி எடுத்துக் கொள்க.

கொதிக்கும் எண்ணெயில் கடுகு, பெருஞ்சீரகம் போட்டு வெட்டிய வெங்காயம், பச்சைமிளகாய் கலந்து வதக்கவும்

வெங்காயம் வதங்கியதும் முட்டைகளை அடித்து அதனுள் இட்டு கிளறவும். (சிறிது உப்பு சேர்த்துக் கொள்க. சிலவேளை உப்பு சேராமல் விடுவது சுவை அதிகரிக்கும்) அதனுள் சிறிது சிறிதாக முருங்கை இலைகளை தூவி வறுக்க.

மஞ்சள்தூளையும் இட்டு வறுக்க.

முட்டையும் முருங்கை இலையும் சேர்த்து ஒரு வாசைன தோன்றும் நேரம் இறக்கி பாணுடன் பரிமாறலாம்.

(இவ் உணவை அறிமுகம் செய்தவர் : ஜோன் லின்டா)

## பருப்புவகைகள் உண்பதால் கிடைக்கும் பயன்கள்



பருப்புவகைகள் புரதத்தினைக் கொண்ட நல்ல உணவாக மட்டுமல்லாது அவை கரையக்கூடிய அதிக நார்ப்பொருட்களையும், காபோவைதரேற்றின் கலவைகளையும், விற்றமின் மற்றும் கனியுப்புக்களையும் கொண்டுள்ளன.

இவை கொழுப்பு குறைந்தவையாகும். பருப்புகளை வழமையாக சாப்பிடுவதன் மூலம் நீரிழிவு நோயின்ஆபத்தைக்குறைக்க முடியும்.

**புரதம்** - சைவ உணவுகளில் தானியங்களுடன் பருப்புகளை (போஞ்சி, பயற்றம்பயறு, கௌபி அல்லது பருப்பு [lentils]) சேர்க்கும் போது எல்லா அத்தியாவசியமான அமினோ அமிலங்களையும் உள்ளடக்கிய ஒரு தரமான புரதத்தை பெற்றுக் கொள்ள முடியும். உதாரணம் : பருப்பு, கொள்ளு, கௌபி, பயறு +சோறு



**விற்றமின்கள்** - பருப்புகளில் விற்றமின் B அதிகமாக உள்ளது. முளைத்தலின் போது விற்றமின் டி மற்றும் C உள்ளடக்கமானது அதிகரிக்கின்றது.

**இரும்பு** – பருப்புகளில் .ரும்பு உள்ளது. ஆனாலும் அவை உடலினால் உடனடியாக அகத்துறிஞ்சக் கூடிய நிலையில் இருப்பதில்லை. முளைக்கின்ற போதும் புளித்துப் பொங்குகின்ற போதும் (Fermentation) பெற்றுக்கொள்ளக் கூடிய இரும்பின் அளவு (Bioavailability) அதிகரிக்கின்றது. நல்ல பருப்புக்களின் தெரிவுக்கு: பருப்பு, பட்டாணிக்கடலை, கௌபி, பயறு, சோயா, அவரை விதைகள் போன்றன.

சோயாவிலும் கூடிய புரதம், விற்றமின்கள், கனியுப்புக்கள், கொழுப்பு மற்றும் நார்ப்பொருட்கள் காணப்படுகிறது. வடிவமைக்கப்பட்ட காய்கறிப் புரதம் (TVP-Textured vegetable protein) ஆனது, இலங்கையில் பொதுவாக பயன்னடுத்துகின்ற சோயா அவரையிலிருந்து தயாரிக்கப்பட்ட ஒரு உணவு உற்பத்தியாகும். சோயா அவரை மற்றும் சோயா உற்பத்திகள் சைவ உணவுகளை உட்கொள்பவர்களுக்கு ஒரு சிறந்த உணவாகும்.

- யாழ் மருத்துவக்குழு

